BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 02 Issue - 45 21 Friday April 2006 விற்பனைக்கல்ல

**NSR CONSTRUCTION**

* Planning Permission
* Plumbing & Heating
* Electrical Work

Free Estimate, No Obligation

Call : 07800 585 219




**LTTA LTD**
**Licence Trade Training**

*We can provide help with*
- Personal Alcohol Licence Qualification
- Personal Licence Applications
- Shop / Restaurant Plans
- Food Hygiene
- Health & Safety
- Offlicence / Shops for Sale

தொடர்புகளுக்கு: Mr Ravi,
Head Office, System House,19,Pershore Road South, Birmingham
07782 223 005

**ABBEY TRAINING.NET**

இப்ப ஒரு Off License கடை எடுப்பம் என்றால் ஒரே கவலைச்சல் ஏதோ Personal License வேணுமாம்! பட்டடையில் நிற்பவருக்கும் அது வேணுமாம்!

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**Personal Licence**
**(For off licence and on licence)**
**National Certificate**
**for Personal licence Holders (NCPLH)**
**New Supervisor Course (DPS)**

Phone: **020 8640 9900**
Thevanesan: **07956913164**

**EPoS SOLUTIONS FOR TODAY'S RETAILERS** IPOS Solutions

**The ultimate costs effective and complete 'EPoS and News Delivery System'**

Special Offer Starts from **£1999**

- Barcode Scanning
- Pre-Loaded 20000 Stock
- Stock Control
- Handles all Promotions
- Paper & Magazine Control
- Home News Delivery
- Prints Shelf Edge Labels
- Invoice Control
- Reports
- Costcutter & NISA Link(OCS)

**Tel: 0845 838 0856**
Terms & Conditions apply

**SIVA BUSINESS TRAINING**

எங்களிடம் வாருங்கள் வென்று தருகின்றோம்

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Citzenship Course (Life in UK வகுப்புகள்
Personal Licence
(For off licence and on licence)
National Cer tificate
for Personal licence Holders (NCPLH)
New Super visor Course (DPS)

Contact
Siva 020 8683 6544, 079 0480 6371
Challenge House 616, Mitcham Road,
Croydon CR0 3AA

**MortgageLink** *The* National Mortgage Network

100% MORTGAGE அல்லது குறைந்த DEPOSIT 5% ல் வீடு வாங்க வேண்டுமா?

பல ஆண்டுகளாக Chicken கடைகளில் வேலை செய்து அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சொந்தமாக Chicken கடை ஆரம்பிக்க விரும்பினால் சில வாரங்களில் கடன் வசதி செய்து தருவோம் Leasehold / Freehold

கடைகளில் நிதிநெருக்கடி காரணமாக Bailiffகளால் பிரச்சினையா? உங்கள் பொருட்களை காப்பாற்ற வேண்டுமா? சட்ட ஆலோசனை வழங்கி உங்களை காப்பாற்றுவோம்.

Mobile: 07930 62 65 85
020 8946 5566

Nearest underground: Tooting Broadway - Northern Line

YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED IN IT

**UNIGLOBE EXCHANGE LIMITED**

- We Buy & Sell Foreign Currencies (No Commission / Better Rates)
- Low Cost Travel Tickets
- Worldwide Money Transfers (Best Rate for Srilanka & India)
- Cheque Cashed

Check Our Rates before you send...
230 B, Northolt Road, South Harrow, HA2 8DU
Call Us at **020 8423 9988**
**020 8423 7744**

**E J Transport Ltd**
Mini Bus & Van Hire With / Without Driver

Wales, Lourdes Church Trip
Europe & Euro Disney Trip
Airport Transport
For all other requirements

தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்.

Contacts
020 8470 8588
07980 602 548
07817 195 237

## ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# ANGELS

• Mortgages • Sales
• Loans • Letting Management
• Insurance • Building Insurance

Properties and Financial Services Limited

- வியாபார வங்கிக்கடன்
- விற்பனைக்கு 0.5% மட்டுமே அறவிடப்படும்
- வாடகை வீடுகள்
- காப்புறுதி
- மோட்கேஜ் (Mortgages)

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

▲ 100% வீட்டு வங்கிக்கடன்கள் 5 நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்
▲ வருமான அத்தாட்சி அவசியமில்லை
▲ முற்பணம் (Deposit) அவசியமில்லை
▲ ஏற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க குறைந்த வட்டிக்கு கடனை மாற்றமுடியும்
▲ முத்திரை தீர்வு அவசியமில்லை
▲ உங்களின் நிதி சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தகுந்த தீர்வு தரப்படும்

**74 Lee High Road**
**Lewisham SE13 5PT**
**Tel: 020 8852 3084**
**020 8852 1683 Fax: 020 8852 1621**
email: info@angelsproperties.co.uk web: www.angelsproperties.co.uk



# Visual Retail EPoS Solution....

Specialists in Retail and Restaurant EPOS systems

- * EPOS Scanning
- * Shelf Edged Labels
- * Stock Control
- * Handles All Offers
- * News Round
- * Weekly Magazine List
- * Costcutter & NISA OCS Link
- * Table / Takeaway Management
- * Manage News Round / Backoffice from anywhere

Special Offer:
Touch Screen Solution
From £1800
1 Year Free Support

Call 0208 540 8886
Web: www.visualretail.co.uk

புத்தாண்டு வாழ்த்துக்கள்

Losing a loved one is a traumatic time

# INDIAN FUNERAL DIRECTORS

இறுதிக்கிரியை மண்டபம்

Our comprehensive service includes:
Large Prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
All religious rites, ceremonies and wishes respected and administered
Modern, fully equipped washing & dressing facilities
Funeral Ceremony items provided.

Foremost Indian Funeral Directors in England Serving the Asian Community since 1984

For a fast, efficient & professional service, contact:
Bharat Shah, Sanjay Shah, Neeta Shah or Alka Shah on
Tel: 020 8952 5252
24 Hours Mobile: 0777 030 66 44
Call us at anytime for a complete package price

எம் சாஸ்திர சம்பிரதாயங்களுடன் இறுதிக் கிரியைகளை நடத்தி துயருறும் மனங்களுக்கு ஆறுதல் அளிப்பதே எமது நோக்கம்

44 South Parade, Mollision Way,
Edgware, Middlesex HA8 5QL

# Global Travel Express



விமானப் பயணத்தின் நிறைவான சேவையை!! மலிவான விலையுடன் தருவது Global Travel Express மட்டுமே!!

Best Prices to Sri Lanka & India

| | From |
|---|---|
| Colombo | £285 |
| Chennai/Bangalo | £255 |
| Mumbai/Delhi | £230 |
| Cochin/Calicut | £255 |
| Trivandrum/Trichy | £255 |
| Hyderabad | £295 |
| Bangkok | £210 |
| Singapore/Malaysia | £299 |
| Dubai | £180 |
| Europe | £26 |
| USA/Canada | £140 |

SriLankan Airlines
COLOMBO
£260
(+Taxes* + Skywards)
17 April - 20 June, Term & Conditions Apply
SKYWARDS

£410
(+Taxes * Colombo Return)
17April -20 June

£450
(+Taxes *- with Choice of Destination:- India Singapore / Kuala Lumpur /Bangkok / Tokyo Jakarta/ Beijing With FREE Stopover in Colombo)
* The above fares are subject to change.
* Terms & Conditions Apply.

## SriLanka Holidays

Flight + Stay in 4* Global Tower Hotel in Colombo Sri Lanka

on SriLankan Airline

7 Nights £534
14 Nights £646



Prices include Flight + Accommodation on Twin sharing room basis + Breakfast & return Airport Transfer & excluding ticket taxes.
Valid between:- 01 April - 30 June 06.
Terms & Conditions Apply.

## Explore CANADA for less

one way
Toronto / Ottawa
Montreal / Halifax
£79 +Taxes

SriLankan Airlines & Qatar Airways
இன் பிரதான முகவர்கள்

0208 731 9000
0208 455 9001

Gulf Air · Etihad · Jet Airways · Air Sahara · Lufthansa · Air France · Air Canada · British Airways · Air India · Emirates · IATA · ATOL 6480 Protected

Golders Green
Global Travel Express
899 - 901 Finchley Road
London NW11 7PE

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த விமானக் கட்டணத்தைப்பெற உடன் எம்மை அழையுங்கள்

# அன்னை பூபதி நினைவுநாள் நிகழ்வு












இந்திய படைகள் நிலை கொண்ட காலத்தில, விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுமாறு இந்திய அரசை வலியுறுத்தி உண்ணா நோன்பிருந்து சாவைத் தழுவிய அன்னை பூபதியின் பதினெட்டாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுககிழமை ஹரோ ஆசிரியர் நிலைய மண்டபத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. விழா மாலை 5.30 மணிக்கு ஈகைச் சுடரேற்றலுடன் ஆரம்பமாகியது.

விழா மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னை யினதும் அண்மையில் திருகோணமலையில் கொல்லப்பட்ட மாமனிதர் விக்கினேஸ்வரனினதும் திருவுருவப் படங்களுக்கு மக்களால் வணக்கம் செலுத்தப்பட்டது.

அன்னையினது வாழ்க்கை வரலாற்றை செல்வி சிந்து ஓம்பிரகாஸ் தமிழில் வாசித்தளிக்க அதன் ஆங்கில மொழி பெயர்ப்பை செல்வி கரோலைன் பிரான்சிஸ் வாசித்தார்.

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ரொபர்ட இவான்ஸ், ஹரோ மாநகர சபையின் பிரதித்தலைவர் திரு சஞ்சய் டிகே, மாநகரசபை உறுப்பினர் திரு. தயா இடைக்காடர் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திரு சஞ்சய் டிகே தனதுரையில், அண்மையில் திருமலையில் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டபோது இந்தியா ஆட்சேபித்ததை




சுட்டிக்காட்டி இவ்விதம் இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும் என்றார்.

அன்னை பூபதி நினைவாக பாடசாலை மாணவர் களிடையே நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் பேச்சுக்களும், கவுன்சிலோ தமிழ்க்கல்விகூடம், மிடில்செக்ஸ் தமிழ்ப்பாடசாலை, பாரதிய வித்தியாபவன் ஆகியவற்றின் மாணவர்களின் கலைநிகழச்சிகளும் இடம்பெற்றன.

பேச்சுபோட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களு க்கு திரு சஞ்சய் டிகே பரிசில்களை வழங்கினார்.

நிகழ்வின் இறுதியில் இடம்பெற்ற பாரதிய வித்யா பவன் மாணவன் குமரனின் பரதநாட்டிய நிகழ்வு சபையோரை பெரிதும் கவர்ந்திருந்தது.

# அழகிய ஒரு பொன்மாலைப் பொழுது



கென்டன் தமிழ்ப் பாடசாலையில் வயலின் ஆசிரியராக கடமைபுரிபவரும், லண்டனில் பிரபலம்பெற்ற வயலின் வித்துவானுமாகிய திரு. சிவகணேசன் மூன்றாவது வருடமாக தனது வருடாந்த இசை நிகழ்ச்சியான 'சங்கமித்திரா' வை தனது மாணவர்களுடன் இணைந்து சென்ற ஈஸ்டர் ஞாயிறன்று (16.04.06) Ruislip Winston Churchill மண்டபத்தில் நடத்தினார்.

இந்த நிகழ்வில் சிவகணேசனினது மாணவ, மாணவியருடன் வேறும் சில பிரபல வாய்ப்பாட்டு, வீணை ஆசிரியர்களின் மாணவர்களும் பங்கு பற்றினார்கள். அரங்கு நிறைந்த மண்டப த்தில் அனைவரும் நிகழ்ச்சியின் முடிவு வரை இருந்தது பார்த்து ரசித்தது பெருமைக்குரிய விடயம்.

இறுதியாக நடைபெற்ற "Violin Solo" இல் திரு. சிவகணேசன், அவரது மாணவர் பார்த்திபன், நாகராஜா ஆகியோர் வயலின் வாசித்தனர். இதற்கு பக்க வாத்தியமாக நாதஸ்வரம் - சம்பத்குமார், தவில் - தணிகைவேல், மிருதங்கம் - பவானி சங்கர், கஞ்சிரா, பாலாஜி, கிருஸ்ணமூர்த்தி, தபேலா, பத்மனாபன் ஆகியோர் வாசித்தது பலரது பாராட்டைப் பெற்றது. செவிக்கு இதமாக இருந்தது. வாழ்க இவர்களது கலைச்சேவை.

*- பாஸ்கரன்*

# மூத்தோர் கூடுமிடம் ஆரம்பம்



இம்மாதம் 19ம் திகதி கிங்ஸ்ரனில் சமூக அபிவிருத்திநடுவத்தின் (CCD) கீழ் இயங்கும் மூத்தோர் கூடல் சேவையின் அங்குரார்ப்பன கூட்டத்தை கிங்ஸ்ரன் மேயர் கௌரவ திரு யோகநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

குறிப்பாக கிங்ஸ்ரன் வாழ் தமிழ் பேசும் மூத்தோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவர்களின் ஓய்வு நேரத்தை பயனுற செலவிடவும், அவர்கள் அதிகாரம் பெற்ற வாழ்க்கை யுடையவர்களாக வாழவும் உதவி செய்யும் நோக்குடனேயே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது ஒவ்வொரு வியாழக்கிழமை களிலும் நடைபெறும். மேற்படி விபரங்கள் அறிய விரும்புவோர் 020 8546 1560 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

MONEY IN MINUTES TO SRI LANKA

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

A/C NAME: C.E.C.LTD
A/C NO: 70713945
SORT CODE: 20-36-47
BRANCH: HANOVER SQ.

Head Office : 125 - 127 Bramley Road, Oakwood, London N14 4UT

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

இலங்கைக்கான பணமாற்றுச் சேவை

நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை

குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.



Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

Open 7 Days

HSBC
SEYLAN
BOC
MCG

# தமிழ் ஊடகவியலாளர்களை ஒன்றிணைக்க புதிய அமைப்பு

உலகெங்கும் வாழும் தமிழ் ஊடகவியலாளர்களை உள்வாங்கி அமைப்பு ரீதியாக தமிழ் ஊடகத்துறையை வளர்த்தெடுக்கும் வகையில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு 'சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம்' என்ற பெயரில் இயங்கவிருக்கும் இவ்வமைப்புக்கான கால்கோள் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ரூற்றிங் சிவயோகம் மண்டபத்தில் இடப்பட்டது..

தமிழ் தொலைக்காட்சி இணையத்தின் பிரதம செய்தி ஆசிரியர் திரு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், டென்மார்க்கில் வசிக்கும் பத்திரிகையாளர் திரு.குகதாசன் இவ்வமைப்பின் அவசியம் பற்றி விளக்கியதுடன் அதன் உத்தேசயாப்பையும் படித்தளித்தார்.

இவ்வமைப்புக்கான நடப்பு வருட நிர்வாகிகளாக, பி.பி.சி தமிழ்ச்சேவையில் பணியாற்றிய மூத்த செய்தியாளர் திருமதி. ஆனந்தி சூரியபிரகாசம் தலைவராகவும், திரு.குகதாசன் (டென்மார்க்) செயலாளராகவும், திரு. இரா.துரைரத்தினம் துணைத் தலைவராகவும், திரு. கந்தசாமி (ரீரீஎன்- பிரான்ஸ்) பொருளாளராகவும் தெரிவாகினர். செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு.பற்றிமாகரன் (ரீரீஎன் - லண்டன்), திரு. கோபி (பொறுப்பாசிரியர் - ஒரு பேப்பர்), திரு. வேந்தர்கோன் (ஆசிரியர் - வடலி), திரு. தேவரவீந்திரன் (ரீரீஎன் - பிரான்ஸ்), திரு.செல்வரூபன்.

பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையத் தளங்கள் முதலான அனைத்து செய்தி ஊடகங்களிலும் பணியாற்றுபவர்களும் செய்தி ஊடகங்களுடன் தொடர்புள்ள செய்தியாளர்களும் எழுத்தாளர்களும் இந்த அமைப்பில் இணைந்து கொள்ளமுடியும். சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் அதன் உறுப்பினர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க முயல்வதுடன் துறைசார்ந்த முன்னேற்ற நடவடிக்கைகளில் உதவிகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

அத்துடன் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பிலும் இந்த ஒன்றியம் விசேட கவனம் செலுத்தும். இலண்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பின் கிளை நிறுவனங்களை குறைந்தது ஒவ்வொரு நாட்டிலும் அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் இவ்வமைப்பினால் வெளியிடப்பட்ட ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

AN APPRECIATION

*of the late*

**MR.SAVERIMUTHU STAINLAUS (MBE)**



Born: 07.05.1929 Departed: 03.02.06

Memories are all that remains of Stainlaus who answered the call of The almighty on Friday, 3rd February 2006, after a prolonged and bitterly fought battle with a cruel disease. His death is a great loss for his beloved family and members of the South London Tamil Welfare Groupw hich he fathered and served for the last 12 years as Chairperson of the organisation.

He was a devoted Teacher at Uduvil Girls College, Jaffna, and a witty and jovial person who was liked by the staff and students.

May his soul rest in peace

*- M.Balasundram (London)*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**ஏப்பிரல் 23 ஞாயிறு:** தாயகக்காற்று, தாயகப் பாடல் போட்டி நிகழ்ச்சி. இடம்: Arch Bishop Lanfranc School, Mitcham Road, Croydon அனுமதி: £10 தனிநபர், £20 குடும்பம், நுழைவுச் சீட்டுக்களுக்கு: வெண்புறா நிறுவனம் 020 8265 2764, 020 8672 4100

**மே 1 திங்கள்:** உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி. வைப்பக விடுமுறை தினம் காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணிவரை. Warren Farm Sports Centre, Windmill Lane, Southall. அனுமதி: £4, £2 (சிறுவர்களுக்கு) வாகனத் தரிப்பிடம்: £4.

**மே 20 சனி:** மாலை 5 மணிக்கு புதினம் பத்திரிகை தனது 10வது ஆண்டு விழாவை முன்னிட்டு வழங்கும் 'தமிழ் கலைகளின் சங்கமம்'. இடம்: The Archbishop Lanfranc School, Mitcham, Croydon, CR9 3AS விபரங்களுக்கு: 020 8767 8004, 07886 921 177

**ஏப்பிரல் 23 ஞாயிறு:** லண்டன் மரதன் 2006 தொடங்கும் இடம் கிறீன்விச் பார்க். முடியும் இடம்: த மால், முழுத்தூரம் - 26.2 மைல் தொடங்கும் நேரம் காலை 9.30 மணி பங்குபற்றுவோர் தொகை 30,000.

# செய்தித் துணுக்குகள்

60 ஆண்டுகளுக்கு முன் இறந்த (வரெனக் கருதப்பட்ட) ஜப்பானிய போர் வீரர் ஜப்பான் செல்ல உள்ளார். உத்தியோகப் பதிவேடுகளில் இறந்தவராக்கப்பட்ட இவரை மறு பதிவு செய்ய உள்ளார்கள்.

• • •

பிரான்சில் உலகின் முதல் முகமாற்றச் சிகிச்சைக்கு உள்ளான பெண் தனது புதிய உதடுகளால் சிகரட் புகைக்கிறார். இதனால் வைத்தியர்கள் காயம் ஆற நாளெடுக்கும் என்றும் திசுக்களை ஏற்காத நிலை ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

• • •

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்லில், இலண்டனில் குறிப்பாக வீட்டு வசதி வேலைவாய்ப்பு சிரமங்களுடைய Barking Dagenham போன்ற பகுதிகளில் உள்ள வெள்ளையர் மத்தியில் தீவிர வலதுசாரிக் கட்சியான BNP க்கு ஆதரவு கூடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

• • •

தற்போது ஜேர்மன் நாட்டில் புதிய வீடுகள் கட்டும் திட்டங்கள் தேக்க நிலையில் உள்ளதால் பல கட்டிட நிறுவனங்களின் கண் பிரித்தானியாவை நோக்கித் திரும்புகிறது.

• • •

மூட்டுவலி நோய் மருந்துப் பரிசோதனைக்கு தம்மை வலிந்து ஒப்டைத்தவர்களில் ஒருவரான வில்சன் என்னும் 20 வயது வாலிபர் கை விரல்கள் சிலவற்றையும் கால் விரல்கள் சிலவற்றையும் இழக்க உள்ளார்.

• • •

அமெரிக்க ரெனன்சி மாநிலத்தில் கரடியைப் பார்க்கும் ஆசையில் 1800 அடி உயர மலைக்குச் சென்ற 6 வயதுச் சிறுமி அக்கரடியாலேயே கொல்லப்பட்டுள்ளார்.

• • •

தென் கலிபோனியாவில் குடிவரவாளர்களின் உரிமைக்கு ஆதரவாக நடந்த ஊர்வலத்தில் தன் கல்லூரி மாணவர்கள் பங்கு கொள்வதை தவிர்க்க அக்கல்லூரி அதிபர் கையாண்ட யுக்தி விசித்திரமானது. கழிவறைகளை மூடி வகுப்பறையிலேயே வாளிகள் வைத்து அவற்றுள் மாணவர்களை சிறு நீர் கழிக்க வைத்தமை.

• • •

கிளர்ச்சியாளர்கள் அகதி முகாம்களிலிருந்து ஆட்களைச் சேர்ப்பதாகக் கூறி 2 இலட்சம் அகதிகள் கொண்ட முகாம்களை மூடுவதற்கு எத்தனித்த சாட் அதிபர் இப்போ தன் முடிவை மாற்றியுள்ளார்.

• • •

மன்னரின் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிராகக் கிளர்ந்து ஊர்வலம் நடத்திய மக்களை நோக்கி நேபாலியப் படையினர் துப்பாக்கி பிரயோகம். ஒருவர் பலி, ஐவருக்கு காயம் போராட்டம் தொடர்கிறது.

• • •

உலகின் இரண்டாவது முகமாற்றுச் சிகிச்சையை தன் நாட்டில் பெற்ற லீகோசிங் என்ற சீனர் இன்னும் பேசும் நிலைக்கு வராவிட்டாலும் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறார்.

• • •

## மூன்று மசோதாக்கள் சட்டமாகின்றன.

பயங்கரவாதச் சட்டம் 2006, அடையாள அட்டைச் சட்டம், குடிவரவு தஞ்சம் கோரல் குடியுரிமைச் சட்டம் ஆகிய மூன்று சட்டங்கள் உருவாகியுள்ளன.

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதப் பயிற்சி அளித்தல் அல்லது பயிற்சிக்குப் போகுதல், பயங்கரவாத நடவடிக்கைக்கு திட்டமிடல் அல்லது அப்படியானவற்றிற்கு உதவுதல் ஆகியவற்றுடன் பயங்கரவாத பிரசுரங்களும் பயங்கரவாதத்தை புகழுதலும் கூட குற்றச் செயலாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அடையாள அட்டைச் சட்டம் ஒட்டு மொத்தமாக அடையாள அட்டை எடுக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்குகிறது.

குடிவரவு தஞ்சம் கோரல் குடியுரிமைச் சட்டம்,

- அப்பீல் முறையை கடினமாக்குகிறது
- சட்ட ரீதியற்று தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் தொழில் உரிமையாளர்களுக்கு பணத் தண்டம் தேவையென்றால் சிறைத் தண்டனையும் வழங்க வழியமைக்கிறது
- குடிவரவு அலுவலர்களுக்கு கையடையாளம் கண் அடையாளம் போன்றவை அடங்கிய ஆவணங்கள் உண்மை என்பதை திடமாக்கத் தேவையான பரிசோதனை அதிகாரம் வழங்குகிறது
- பயங்கரவாதிகளின் குடியுரிமையை பறிக்கும் அதிகாரமும் வழங்குகிறது

## சோகா (SOCA) உருவாகியுள்ளது.

பாரதூரமான குற்றச் செயல்களையும், திட்டமிட்டு நடாத்தும் குற்றச் செயல்களையும் கையாள புதிய முகவர் மையம் (Serious Organised Crime Agency) உருவாகியுள்ளது.

- போதைப் பொருள் கடத்தல்
- திட்டமிட்ட குடிவரவுக் குற்றச் செயல்
- கள்ளப் பணத்தை சீராக்குதல்
- அடையாளமோசடி ஆகிய செயல்களை இலக்காக வைத்துச் செயல்படும். இது முறையாகச் செயல்படத் தேவையான அதிகாரங்கள் பெற்றுள்ளது. இது உண்மையில் பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு விடப்பட்டிருக்கும் நேரடிச் சவால்.

www.orupaper.com/forums



பல் டாக்டர் டி. வீ. பழனிவேல் FDSRCS (England)



கிளிப் Orthodontics
Costmetic Dental
முரசு சிகிச்சை
பல்வலி நிற்பாட்டல்
உட்பட எல்லாவிதமான சிகிச்சைகளும்

புதிய முகவரி - Eastham
290 High Street North
(Manor Park - Eastham)
London E12 5SA
Byron Avenue அண்மையில்
6Kumar இற்கு எதிர்பக்கம்

Tel: 0208 552 1626

# பூமராங்

### நிமிர்ந்த நன்னடை

இப்படி 'ஒரு பேப்பர்'ரை' இதுவரை நான் பார்த்ததில்லை. முகப்பில் ஒரு போட்டோ போட்டிருக்கிறீர்களே! நிமிர்ந்த நிலை. நேரிய பார்வை. இத்தனையும் கொண்ட அந்த அழகுப் பெண் எங்கே ஐயா எடுத்தீர்கள்! இந்தப் போட்டோவை! இந்தப் படத்தைப் பார்த்துத்தான் பாரதியாரும் பாடினாரோ 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை'

— *செ.சற்குணம்*

### எங்கே எங்கள் எல்லாளன்?

கொஞ்சக் காலமாக எல்லாளனைக் காணவில்லை. கலியாணம் கட்டிப் போய் விட்டாரோ? அந்தாள் அலட்டிக் கொண்டிருந்தாலும் இருந்தாப்போலை நல்ல விசயங்களையும் சொல்லிப் போடும். எல்லாளனைக் காணாமல் ஏங்கிக் கிடக்கிறன். இழுத்துக் கொண்டு வாருங்கள் அந்தாளை.

— *ப்ரியா நேசன்*

### வியாபாரம்

ஹரியானாவில் 10,000 ரூபாய் கொடுத்து மணப்பெண்ணை வாங்கிய செய்தியை சென்ற இதழில் வெளியிட்டிருந்தீர்கள். அது என்னையா வினோதம்? எங்கள் ஊரில் இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து நாங்கள் மாப்பிள்ளையையே வாங்கிவிடுவோம். அது வினோதமாகத் தெரியவில்லையா உங்களுக்கு?

— *கரிகாலன்*

### குறும்பா

மகாகவியின் குறும்பாவும் அத்துடன் பிரசுரித்திருந்த படங்களும் பிரமாதம். தொடர்ந்து அவரின் குறும்பாக்களைப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

— *கவிதா*

### பேரப்பிள்ளை

என்ன காணும் உமக்கு நிமிர்ந்த நடைக்கும் அஞ்சாத துணிவுக்கும் ஒப்புவமைக்குப் போட ஒரு சிறுமியின் படம்தான் கிடைத்ததா? யார் அந்தச் சிறுமி, உமது பேரப் பிள்ளையா?

— *கஜன்*

### Old is கறள்

ஐ.தி.சம்பந்தன் தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனத்தைப் பற்றி எழுதுகிறார். ஜீ.ஜீ. செல்வா என்ற பழைய தமிழ்த் தலைமைகள் யாவரும் சிங்கள அரசுக்கு சோரம் போனவர்கள் தான். சோரம் போனதில் நீ கூடவா நான் கூடவா என்பதுதான் அவர்களுக்கிடையே போட்டி. தமிழ் தமிழ் என்று கத்தி தமிழ் மக்களிடம் வாக்குகளைப் பறித்துவிட்டு, 'இனித் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கைவிட்டவர்தான் தந்தை செல்வா. ஒன்று தெரியுமோ அவர் இறுதிவரை தமிழீழத்தை ஏற்கவில்லை. தமிழில் தமிழரசுக் கட்சி என்று பெயர் வைத்து ஆங்கிலத்தில் சமஷ்டி கட்சி (Federal Part) என்று பெயர் வைத்ததன் சூட்சுமம் புரிகிறதா? பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் தமிழ் மக்களிடம் தமிழ் அரசு அமைக்க ஆணை தாருங்கள் என்று வாக்கு கேட்பார்கள். சிங்கள தேசத்துக்குப் போய் 'நாங்கள் சமஷ்டிதான் கேட்கிறோம்' என்று சிங்களத் தலைவர்களை தாஜா பண்ணுவார்கள். வர்க்கம் வர்க்கத்தைத்தான் சாரும். தந்தை செல்வாவின் தனயன் தளபதி அமிர் அண்ணா என்ன செய்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே? எங்களுக்கு இப்பொழுதுதான் ஒரு தலைவர் கிடைத்திருக்கிறார். உன்னதத் தலைவர்.

— *பேரின்பநாதன்*

### நடுநிலமை

உங்கள் சினிமா விமர்சனத்தை நடுநிலையாளராக இருந்து எழுதுங்கள். எல்லோரும் நடிகர்கள்தானே. அதில் என்ன படித்த நடிகர்கள் போல் சிலரைச் சித்தரிப்பது, சிலர் மேல் வெறுப்பை அள்ளிக் கொட்டுவது. ஒருவரை அவரது பாணிக்கு ஏற்ப நடிக்க விடுங்கள்.

— *விமலா*

### சதியா? சமாதானமா?

தமிழினத்திற்கு என்ன பிரச்சினை என்பது பலருக்குத் தெரியாது. பொடியளும் அடிக்கிறான்கள். ஆமியும் அடிக்குது என்பார்கள். சதியா சமாதானமா என்னும் உமா மகாலிங்கத்தின் கட்டுரை பிரதேச அபகரிப்பிலிருந்து பொருளாதாரச் சீர்கேடுகளை தோற்றுவிக்கும் திட்டம் வரை அரசின் கபட நாடகங்களைப் புட்டுக் காட்டுகிறது.

— *முருகேசன்*

### பனையோலை

பனை ஓலை ஏடுகளைத் தேடி எடுத்து, அதை மேலும் உக்கி உருக்குலையாது இரசாயனம் இட்டு பாதுகாத்து போட்டோ பிரதி எடுக்கிறார்கள். அப்பிரதிகளை பாதுகாப்பதுதான் புத்திசாலித்தனம். அப்படியே பாதுகாப்பது சரிவராது. காரணம் ஓலைகள் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு மேல் உக்கிவிடும்.

— *கல்பனா*

### பனை எழுத்தும் குறும்பாவும்

ஒருவரும் எழுதவில்லை என்பதற்காக ஒரு காலடியை நிறுத்தி விடாதீர்கள். சென்ற இதழில் எஸ்.ராமகிருஸ்ணன் எழுதிய பனை எழுத்து மிக அற்புதம். பனையின் பயன்கள் என்று பதநீர், கள்ளு, ஒடியல், புழுக்கொடியல், நுங்கு, பனம்பழம், ஓலை, வரிச்சுமட்டை, தீராந்தி, விறகு, துலா, வேலி, கூரை என்றுதான் இதுவரை அறிந்தோம். ஏடாகவும் பனை ஓலை பயன்பட்ட அதிசயத்தை இப்போது தான் உணர்கிறேன். நன்றி ராமகிருஸ்ணன். மகாகவியின் குறும்பாவை ஐந்துடன் நிறுத்தி விட்டீர்களே! இன்னும் தரமாட்டீர்களா?

— *தேவமைந்தன்*

### Three Mules

Satchi Sri Kantha's article on Three Mules and Sister Rajani has exposed the duplicity of the people who continue to cash in on her name. It is no reflevtion of Sister Rajani but an expose of the betrayal and treachery of these so callrd Human Rights champions.

*- Sivshankar*

### லொள்ளுப் பேப்பர்

வணக்கம் அண்ணா. உங்கட லொள்ளுத் தாங்கவே முடியல்லை அண்ணா. வருசப் பிறப்புக்கு மருத்து நீர் வைச்சுப் போடுவம் எண்டு பயந்து, 'கண்டதையும் தலையில வைக்காமல், வழமையான சம்பூவை வைத்துமுழுகுங்கோ' எண்ட உங்கட அறிவுரையைத் தான் சொல்லுறன். பேசாமல், ஒரு பேப்பர் எண்ட பேரை, லொள்ளுப் பேர் எண்டு மாத்துங்கோ. (வடிவேலு உச்சரிப்பில்) ஐயோ... ஐயோ...

— *சிறினிவாசன்*

### சபாஸ் சபேசன்

உங்கள் பத்திரிகையில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவரும் திரு. சபேசன் அவர்களுடைய கட்டுரைகள் மிகவும் கருத்துச் செறிவுள்ளதாகவும், அறிவுரைகள் நிறைந்த அரசியல் சிந்தனைக் கட்டுரைகளாகவும் உள்ளன. அவருடைய எழுத்தினைப் பார்க்கும் பொழுது, இளவயதினனாகத் தான் அவர் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எனினும், அவருடைய சமகால அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை வாசிக்கும் பொழுது, அவருடைய எழுத்து வன்மையின் ஆழம் புரிகிறது. மேலும் பல பயனுள்ள கட்டுரைகளை ஒரு பேப்பரில் எதிர்பார்க்கிறோம்.

— *திருச்செல்வம்*

# கனடாப் போஸ்டில் வந்த மெயில் . . .

*அன்பு நண்பன் சிவாவுக்கு...*

எப்பிடி உன்ட பாடுகள் போகுது? நீ நல்ல சுகமாய் இருக்கிறாய் தானே? நான் நல்ல சுகம் எண்டு சொல்லுற நிலமையில இல்ல மச்சான். உடனே என்னவோ, ஏதோ எண்டு யோசிக்க வேணாம். உடம்புக்கு ஒண்டுமில்ல மச்சான். மனசு தான் கொஞ்ச நாளாய் ஒரே குழப்பமாய் இருக்கு.

நீயும் கேள்விப்பட்டிருப்பாய் எண்டு நினைக்கிறன். இஞ்ச கனடாவில எங்கட விடுதலைப் போராளிகளை, பயங்கரவாதிகள் எண்டு சொல்லித் தடை செய்திருக்கினம். அங்கு எங்கட ஊரில, ஒரு நெருக்கடியான சூழலில் நாளாந்த வாழ்க்கையை எங்கட சொந்தங்கள் கஸ்டப்பட்டு வாழ்ந்து கொண்டு இருக்கேக்க, இப்பிடி ஒரு முடிவை கனடா எடுத்திருப்பது மனசுக்கு கஸ்டமாய் இருக்கு மச்சான். ஏன் எமது சுதந்திரப் போராட்டத்தினை, பயங்கரவாதமாக இந்த சர்வதேச சமூகம் பாக்குதோ தெரியேல்ல? இந்த முடிவு, நிலவி வரும் குழப்பமான பேச்சுவார்த்தையினை மேலும் ஒரு இக்கட்டான நிலைக்கு இழுத்துச் சென்று மீண்டும் ஒரு சண்டையைக் கொண்டு வந்து விடுமோ எண்டு பயமாய்க் கிடக்குது.

நீ போன முறை எழுதேக்க, அங்க எங்கட ஆக்கள் எங்களையே ஏமாத்தி, பணத்திற்காக கேவலமாய் பிழைப்பு நடத்துகினம் எண்டு எழுதியிருந்தாய். அப்பிடி அவர்கள் ஏமாத்துவது, எங்கட உறவுகளை எண்டு நினைக்கும் போது, எனக்கும் கவலையாகத் தான் இருக்குது. ஆனால் அது ஓரளவுக்வாவது பறவாயில்லை. இங்க பயங்கரவாதப் பட்டியலில விடுதலைப் புலிகளை சேர்க்க, இஞ்ச இருக்கிற சில புல்லுருவிகள் தான் முழுநேரமாய்ப் பாடுபட்டவை எண்டு கேள்விப்படேக்க இரத்தம் கொதிக்குது மச்சான். ஒரு, இரு தமிழாக்களை ஏமாத்திப் பிழைக்கிறது மட்டுமில்லாமல், ஒரு ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்தையே படுகுழிக்குள் தள்ளுற இவர்கள் போன்றவர்களை எண்ணும் போது, உங்க லண்டனில நிலமை பறுவாயில்லை எண்டுதான் சொல்ல வேணும். என்னும் எவ்வளவு காலம் தான், இந்தச் சாபக்கேடு தொடருமோ தெரியேல்ல.

எவை, எப்பிடி இருந்தாலும் எமது சமூகம் விழிப்பாய் இருக்க வேண்டிய காலமாய் இது. சும்மா கண்ட புல்லுருவிகளிண்ட பேச்சில மயங்காமல், தங்கட இன விடுதலைக்கான பாதையில் மேலும் முன்னெடுப்போடு தோள் கொடுக்க வேண்டிய காலமிது எண்டு தான் நான் நினைக்கிறன்.


நான் இப்பிடிப் பட்டவங்களைப் பத்தி, உன்னையும் கவலைப் படுத்துறனோ தெரியேல்ல. நீ ஆசையாய் கனடா நிலமை அறிவம் எண்டு, கடிதத்தை வாசிக்கத் தொடங்கியிருப்பாய். நான், இந்தப் புல்லுருவிக் கூட்டங்களைப் பத்தி எழுதி உன்னைக் குழப்பிப் போட்டனோ தெரியாது. Sorry மச்சான்.


வேற இஞ்ச பெரிசா ஒரு புதினமும் இல்ல. எப்ப ஒரு விடிவு வரும் எண்டு யோசனையைத் தவிர வேற ஒரு யோசனையும் இப்பொழுது இல்ல. புத்தூரில 5 பேர்... திருமலையில 15 பேர்... எண்டு எத்தனை அப்பாவி உயிர்கள். இந்த இனப் படுகொலைகளெல்லாம், சர்வதேசத்தின்ர கண்ணுக்குத் தெரியாதா? இந்த சிறிலங்கா அரச பயங்கரவாதத்தை எப்ப தடை செய்யப் போகிறார்கள்? இவைகளைக் கண்டிக்க ஏன் இந்த மேற்குலக நாடுகள் முன்வருகிறதில்லை? ஆகக் குறைந்தது, ஏன் பிரதான ஆங்கில ஊடகங்களில், செய்திகளாகக் கூட இடம்பெறுவதில்லை? ஏன்? ஏன்? ஏன்? எண்டு பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகலாம். ஒண்டுக்கும் பதில் கிடைக்கப் போறதில்லை.

இந்த நிலமை ஒண்டும் இப்பிடியே இருக்கப் போறதில்லை. வெகு விரைவில் நமக்கு விடிவு கிடைக்கும் மச்சான். அந்த நேரம், இதே சர்வதேச சமூகம் எங்களைத் தலையில வைச்சுக் கொண்டாடும். ஆனா அந்தக் கொண்டாட்டங்களும், கை குலுக்கல்களும் Too late-ஆகிப் போன ஒரு விசயமாத்தான் எல்லோராலும் பார்க்கப்படும்.

வேற என்ன? வேலைக்குப் போக வேணும். உன்னட்ட கதைச்சதில ஏதோ பாரத்தை இறக்கி வைச்ச மாதிரி இருக்கு மச்சான். பிறகு சந்திப்பம். பாய்.

*அன்புடன்*
*நண்பன் பவா*







**SRI SANTHOSH LUXMY JOTHIDAM**

**PUNDIT LANKSHMANA SHASTRY**
**SPECIALIST ASTROLOGER**

An expert pundit at Service, past present & future of your life. Will be read over to you from your numerology, prediction in Business, Education, Job, Love, marriage, Family problem, Sickness, Promotion, Removal of Enemy etc. We also provide you protection amenities. He learn Malayalam manthirigam. Tamil, Hindi, Malayalam, Telugu Languages

**AKILAN ENTERPRISES LTD**
274 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E12 6SA
Mob: **07984 685 157 / 07956 004 871**

**ஸ்ரீ சந்தோஷ் லட்சுமி ஜோதிடம்**

பிரபல இந்திய ஜோதிடர் பண்டித் லக்ஸ்மண சாஸ்திரி அவர்கள் கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை, மற்றும் நடக்கப் போகின்றவை பற்றி விபரமாகக் கூறுவார். தொழில் வியாபார, லட்சுமிகர விடயமான பொருத்தம், விவாகப் பொருத்தம், கிரகப் பிரவேசம், வாகனப் பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகளின் குடும்ப ஒற்றுமை, கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு, வழக்கு, உடல்நலமின்மை, போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், பரிகாரம் செய்தல், எல்லா நாட்களும் ஜோதிடம் பார்க்கப்படும். இவர் கேரள மலையாளம் மந்திரம் படித்தவர். சாந்தி பூஜை, லக்சுமி பூஜை செய்யப்படும். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி மொழிகள்.

Opening Hours: 8.00 a.m - 9.00 p.m

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, APRIL 21, 2006, ISSUE 45

## பாராமுகம் காட்டும் மேற்குலகம்

கடந்த சில வாரங்களாக தமிழர் தாயகப் பகுதிகளில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் பெருத்த வேதனையளிப்பதாக உள்ளன. திருகோணமலையில் தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் மாமனிதர் விக்கினேஸ்வரன் படுகொலையுடன் ஆரம்பித்த வன்செயல்கள் இன்றுவரை பலரின் உயிரை பறித்துள்ளதுடன் தமிழ் மக்களின் குடிமனைகள் அழிக்கப்பட்டு, சொத்துக்களும் நாசமாக்கப்பட்டுள்ளன. அரச படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் வர்த்தகர்களும் பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். இச்சம்பவங்களை கட்டுப்படுத்துவதில் சிறிலங்கா அரசானது சிரத்தை காட்டாதது மட்டுமன்றி, இச்சம்பவங்களின் பாத்திரவாளிகளாக அதன் படைகளும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளும் இருக்கின்றன என்பது இன்று வெளிப்படையாக தெரிகின்ற விடயமாகிவிட்டது.

நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளை கொண்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழு முதல் அவுஸ்திரேலிய SBC தொலைக்காட்சி வரை சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒட்டுப் படைகளின் பிரசன்னத்தையும், சமாதானத்தை தொடர்ந்து பேணுவதில் இக்குழுக்கள் ஏற்படுத்தும் இடைஞ்சல்களையும் வெளிப்படுத்தி வருகின்றன. இருப்பினும் மனிதவுரிமை விடயத்தில் விரைந்து கருத்து வெளியிடுகின்ற மேற்குலக நாடுகள், இது விடயத்தில் பாராமுகமாகவும், தனித்து விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்துவதிலும் குறியாக உள்ளனவே தவிர ஆக்க பூர்வமாக செயற்படவில்லை.

மேற்குலகமும் அது சார்ந்த நிறுவனங்களும் விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடுப்புடன் கூடிய பொறுமையை தவறாக அர்த்தப்படுத்துவது போலவே நடந்து கொள்கின்றன. யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்ற நிலையிலும், சமாதான வழி முறைகளில் ஆர்வம் காட்டுகின்ற போதும், பதிலுக்கு மேற்குலகம் செய்தது என்ன? அமெரிக்கா, பிரித்தானியா போன்றவை தொடர்ந்தும் அவர்களை பயங்கரவாதப் பட்டியலில் வைத்துள்ளன. புதிதாக கனேடிய அரசும் இந்த நடைமுறையை கடைப்பிடித்துள்ளது. Unicef, Human Rights watch போன்ற சர்வதேச நிறுவனங்களோ விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றலை குறைக்கும் நோக்கில் அவர்களது படைச் சமநிலையை குழப்புவதையும், நிதி நெருக்கடியை ஏற்படுத்துவதையும் குறிவைத்து செயற்படுகின்றன.

யுத்த காலத்தைப் போன்று சமாதான காலத்திலும் அப்பாவி மக்களின் உயிர்களை பாதுகாக்கவோ, அவர்களின் இயல்பு வாழ்க்கையை உறுதி செய்யவோ முடியாவிட்டால், வெறுமனே சர்வதேச சமூகத்தை திருப்திப் படுத்துவதற்காக யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பதில் அர்த்தமில்லை. இவ்விடயத்தில் தமிழர் தரப்பு முடிவெடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

## ஒரு பேப்பர் . . . . . . . . . .

*வணக்கம் !*

*அதிகாலையிலேயே வெளிக்கும், மரம் தளிர்த்து, இலைதெரியாமல் பூத்துக் குலுங்குமொரு இளவேனில் காலத்தில் உங்களை சந்திக் கிறோம். மேற்சொன்ன எதையுமே உணரமுடியாமல் .. அல்லது உணர்ந்தும் அனுபவிக்க முடியாமல் வேலைக்கும் - வேலை முடிய வீட்டுக்குமாக அல்லாடுபவராக இருந்தாலும் கடைக்குப் போய் **ஒரு பேப்பர்** எடுத்துக் கொண்டு வீடு செல்லும் உங்களுக்கும் வணக்கம்.*

*எங்களுக்கு வழமையாக ஆக்கங்களை அனுப்பும் புண்ணியவான்கள் புதுவருசத்தையோ ஈஸ்ரரையோ சாக்காக வைத்து நீண்ட விடுமுறையில் சென்று விட்டார்களோ என்னவோ குறித்த நேரத்தில் ஆக்கங்கள் வராமல் கொஞ்சம் அல்லாடிப் போனோம்.*

*புதியவர்களை அறிமுகப்படுத்த **ஒரு பேப்பர்** தயாராகவிருக்கிறது.. ஆகவே எழுத்துத் துறையில் நீங்கள் அனுபவப்பட்டவராக இருக்க வேண்டும் என்றில்லை, தயங்காமல் எழுதியனுப்புங்கள்.. தரமானதாயின் பிரசுரிப்போம். ஆனால் சுருக்கமாக எழுதியனுப்புங்கள்.*

*எங்களை காணுகிற இடத்தில் வைத்து நீங்கள் எங்கை ஜேர்னலிசம் படிச்சனியள் என்று கேள்வி கேட்டு திணறடிக்கும் சிலருக்கு ஐயா/அம்மணி எங்களை விட்டு விடுங்கள் எங்களுக்கு இதற்கு பதில் சொல்ல முடியாது .. அதுக்காக படிக்காத மேதைகள் என்றும் சொல்லேல்லை..*

***ஒரு பேப்பர்** ல் காரசாரமான விமர்சனங்கள் வருவது கண்டு விசனம் கொள்வோருக்கு ஒரு கனிவான வேண்டுகோள்.. எந்த விதமான காழ்ப்புணர்ச்சியிலும் அவை பிரசுரமாவதில்லை.. மாறாக அவரவர் கருத்துக்களுக்கு இடமளிக்கவே அவை பிரசுரமாகிறது. எனவே உங்களுக்குள் பொருமாமல் எதிர்வினையை எழுதியனுப்புங்கள்.. பிரசுரிக்கிறோம்.. உங்களது பக்க நியாயத்தை மற்றவரும் அறிந்து கொள்ளட்டும்... மற்றயபடி **ஒரு பேப்பர்** இல் எழுதுவது உங்களை தாழ்த்தி விடுமென்று கருதினால் .. நாங்கள் என்ன செய்வது ..*

*எங்கள் குழுவில் உள்ளவர்களின் விபரம் 10ம் பக்கத்தில் உள்ளது. அதை விடுத்து இல்லாதவர்களையெல்லாம் **ஒரு பேப்பர்** ருடன் தொடர்பு படுத்தி நீங்களும் குழம்பி மற்றவர்களையும் குழப்ப வேண்டாம் ..*

*இறுதியாக கொழும்பிலும், சிட்னியிலும் ஒரு பேப்பர் பதிப்பிக்கப்பட இருப்பதாக அடிபடும் வதந்திகளை நாங்களும் அறிவோம்.. தற்போதைக்கு அவை வதந்திகள்தான்.. ஆனால் காலம் கனிந்துவரும் போது இவை சாத்தியப்படும்.*

*மீண்டும் சந்திப்போம்.*
***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# Sinhala State Terrorism & Western Foreign Policy

**By Vettivel**

Recently Canada listed the LTTE as a terrorist organization and, meanwhile, it warned the Sri Lankan government to stick to the ceasefire agreement. Many Tamils are disappointed at the listing, and the decision sparked many local debates among Tamils. If Canada found the LTTE to be a terrorist organization, Canada has even more reason to ban the Sri Lankan government. Most Canadian Tamils raise these questions, and most of those who voted for the current minority Canadian government in the last election now regret their wrong decision.

Using violence for a political cause is the main reason for the Canadian ban on the LTTE. The funny thing is that, when a government uses violence, it means using 'force,' but when an oppressed community reacts violently it is 'terrorism.' Since the word 'terrorism' is meaningless in current world politics, then how can a list of terrorists make sense? After all, it is better to understand what 'terrorism' means to the western world.

Does terrorism mean killing civilians? If yes, then why is the Sri Lankan state not considered terrorists because they have killed more than 40,000 Tamil civilians, and, even after the ceasefire, they have killed Tamil civilians using its state military machine and paramilitaries. The Sri Lankan state has been well known for killing Tamils even in state prison, Temples, Churches, Schools, and refugee camps. Therefore, terrorism doesn't mean killing civilians.

Does terrorism mean using child soldiers? If yes, why is the UK, where the recruiting age for the military is 16 years,not terrorists. Therefore, terrorism doesn't mean underage recruitment.

Does terrorism mean using suicide bombing? Did anyone ever hear of suicide bombing before the US invasion in Iraq? Why is there an increased number of suicide bombings after the US invasion? The most civilized people don't want to find an answer for this question. Suicide bombing is a weapon. Like the cruise missile, bunker buster, artillery shells, sophisticated tanks, or F18 bomber, human suicide bomber is also a weapon for a weak party that doesn't have access to sophisticated weapons in the struggle. In the Second World War, Japan used suicide bombers, the US used nuclear weapons. The deadly napalm bombs - chemical bombs - were also commonly used. The Sri Lankan air force used napalm bombs and even toilet wastes in Jaffna during the war. War is ugly, and there is no limitation when it comes to using weapons against an enemy. In reality, if any of the nuclear nations entered into a war with another powerful nation, nuclear weapons will be certainly used, even if the nation knows it is a total destruction. Do any of these weapons do something different than a suicide bomb? Therefore, suicide attacks are also not terrorism.

> Tamils have completely no trust in the Sri Lankan constitution or laws. In simple terms, for Tamils, the Sinhala-dominated state machine is the enemy. This is the naked reality in Sri Lanka

Does terrorism mean using power to achieve political goals? The Sinhala majority government's goal is to make Sri Lanka a Sinhala country. This is why they changed the name from Ceylon to Sri Lanka, made Sinhala the official language, and centralized all power in the Sinhala majority parliament, and made the minority voiceless. The Sri Lankan government systematically colonized the Tamil homeland, chased the Tamils away, and defend the occupied territory by giving weapons to colonized Sinhala thugs and criminals. The Sinhala government has used military power to suppress non-violent Tamil protests, and used the military to destroy Tamils' property and life. The Sinhala state is still terrorizing the Tamil homeland using its military and paramilitaries, and has killed many Tamils, including parliamentarians and civilian activists. The Sinhala state has heavily used its power to achieve its goal. The Sri Lankan state is not in the terrorist list; therefore, terrorism doesn't mean using power to achieve political goals.

Does terrorism mean being anti-democracy? The TNA won almost all the seats in the Sri Lankan elections that were observed by International monitors. However, a TNA parliamentarian couldn't even get a visa to enter Canada. The TNA says the LTTE is the authentic representative of the Tamils, and this was the mandate TNA used before the election as well. Unfortunately, being anti-democracy also doesn't explain terrorism.

What we can get from all these arguments is that terrorism means something else. Terrorism really means that, if someone or some organization acts against a state that has some friendly western states, it is terrorism. It is OK if the state uses "FORCE" to oppress any community to maintain "stability." This definition can fit well to the western policy towards terrorism. The reality is that the current world doesn't care if a small community is fighting for its rights. The world is ready to compromise a small community for political "stability."

By listing the LTTE as a terrorist organization, Canada has put itself outside the peace process. It can be noted that the US, UK, India, and Australia don't have any direct influence in the peace process because they are prevented from talking to the LTTE by their own laws.

The problem is that, whether a country has a terrorist list or not, the LTTE is the authentic representative of the Tamils, and there will be no talks without the LTTE. Tamils have completely no trust in the Sri Lankan constitution or laws. In simple terms, for Tamils, the Sinhala-dominated state machine is the enemy. This is the naked reality in Sri Lanka.

The western world asks Tamils to get protection from its enemy. It is almost equivalent to asking Israel to get protection from the Arab world. In essence, banning the LTTE means encouraging Sinhala state terrorists to continue their regular activity of terrorizing the Tamil inhabitants of the island.

# தன்மானமும் கனடியத் தமிழரும்

**இளந்திரையன்**
*(ஒரு பேப்பருக்காக)*

வருது வருது என்று பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்த விடயம் வந்தே விட்டது. உலக அண்ணாவிமாரின் கூட்டத்தில் கடைசி கடைசியாக கனடாவும் சேர்ந்து விட்டது. ஜனநாயகம் பற்றி உலகுக்கெல்லாம் பாடம் நடாத்திக் கொண்டிருக்கும் அமெரிக்காவுடன் கனடாவும் கை கோர்த்துக் கொண்டுவிட்டது.

லிபரல் அரசாங்கம் செய்யத் தயங்கிக் கொண்டிருந்த ஒரு விடயத்தை ஸ்ரீபன் கார்ப்பரின் கொன்சவேற்றிவ் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் செய்து விட்டது. தேர்தல் வாக்குறுதிகளை நிறை வேற்றி சாமானிய வாக்காளப் பெருமக்களை திருப்திப் படுத்தும் எந்த அக்கறையும் இல்லாது முதல் வேலையாக பயங்கர வாதப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை 39 ஆவது அமைப்பாக சேர்த்துக் கொண்டுவிட்டது. அதுவும் தனியொரு அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டும் சேர்த்துக் கொள்வதற்காக அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்று பட்டியலில் சேர்த்துக் கொண்டு விட்டது.

நீண்ட நாள் கடன் (long due) ஒன்று தீர்க்கப் பட்டுள்ளதாக வேறு பொது பாது காப்பு அமைச்சர் ஸ்ரொக் வெல் டே திருவாய் மலர்ந்திருக்கின்றார். யாருக்காக இத்தனை தூரம் அக்கறை எடுத்திருக்கின்றார்கள் என்பது சாதாரண தமிழ் மக்களிடையே சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

கனாடாவில் இருக்கும் 300000 தமிழ் மக்களின் வாக்கு வங்கியை குறி வைத்தே கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த லிபரல் கட்சி இவ்வாறு தடை செய்வதைத் தவிர்த்து வந்தது என்று போகிற போக்கில் கடந்த லிபரல் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டவும் தவறவில்லை.

குற்றச் சாட்டில் உண்மை இருக்கின்றது என்றே கொண்டாலும் இங்கு வாழும் 300000 தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளில் கொன்ஸ்ரவேற்றிவ் அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டதா?

சரி..... தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்தாகி விட்டது. இலங்கையில் சிங்களப் பேரினவாதத்தின் கொடுமையில் வாடும் லட்சோப லட்சம் தமிழ் மக்களின் நீதியான போராட்டம் பற்றி கொன்ஸ்ரவேற்றிவ் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? கனடாவில் வாழும் சாதாரண தமிழ் மக்களின் - கனடாவின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வரி செலுத்தி வாழுகின்ற மக்களின் - சந்தேகங்களுக்கு அங்கு வாழும் எங்கள் சகோதரர்களின் நல்வாழ்க்கை பற்றி எங்களுக்குள்ள அக்கறை பற்றி இவ்வரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கின்றது என்பதைப் பகிரங்கப் படுத்தக்கூடாதா?

பல்லினக் கலாச்சார விழுமியங்களுக்குள் கட்டுண்டு கிடக்கும் தமிழ் இனம் பற்றியும் அதனோடு இரத்தமாகவும் தசையாகவும் இணைந்து கிடக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் பற்றியும் கனடாவிற்கு இருக்கக் கூடிய அக்கறை பற்றியும் ஏன் ஸ்ரொக் வெல் டே எதனையும் கூறவில்லை.

தேர்தல் கால வோட்டுகளுக்காக மட்டும் தான் அரசியல் வாதிகள் தமிழ் மக்களையும் தமிழ் மக்களின் பிரதி நிதிகள், 'தலை'கள் என்று சொல்லிக் கொள்பவர்களையும் அணுகுகின்றார்களா?

300000 தமிழ் மக்களின் 'தலை'களாகப் போட்டி போட்டு வாண வேடிக்கை விட்ட யாரும் வாயைத் திறக்கக்காணோம். இதுவே இன்னொரு சமூகமாக இருந்தால் வீதியில் இறங்கி இருப்பார்கள். ஆக்கிரமிப்பிலும் இன அழிப்பிலும் சிக்கி அல்லல் படும் மக்களின் துயரங்களைப் போக்க வழி காட்டுமாறு அரசைக் கேட்டிருப்பார்கள். பல்லின சமூகத்திடையே உண்மை நிலையை எடுத்துச் சென்று ஆதரவைக் கேட்டிருப்பார்கள். நாம் என்ன செய்கின்றோம்.

நமக்கென்ன வந்தது என்று வாயை மூடிக் கொண்டிருக்கின்றோம். தோளில் கையைப் போட்டு போட்டோ பிடித்த மக்கள் பிரதி நிதிகளையும் காணோம். தோளில் கையைப் போட்டுக் கொண்டவர்களையும் காணோம். எடுத்த போட்டோக்களையும் ஒழித்து விடுவார்களோ என்னவோ?

கனடியத் தமிழர்களின் 'ராஜா'க்களையும் காணோம். மந்திரிகளையும் காணோம். எல்லோரும் ஏதோ வாய் பேசா மெளன விரதம் இருக்கின்றார்கள் போலும். 35 பத்திரிகை. 5,6 வானொலி.2,3 தொலைக் காட்சிகள். இருக்குது. நடக்குது. இருந்து என்ன பிரயோசனம். நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் யாராவது பூனைக்கு மணியைக் கட்டுவார்ர்களா? என்று. எமக்கு உரிமை இருக்கின்றது. எமது சகோதரர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கனடிய அரசை நிர்ப்பந்திக்க எமக்கு உரிமை இருக்கின்றது. எங்கோ நடக்கும் அவலங்களுக்கெல்லாம் குரல் கொடுக்கும் கனடிய் அரசாங்கம் எம் தமிழ்ச் சகோதரர்களுக்கு நீதியான ஒரு தீர்வைக் கண்டு தருமாறு கனடிய அரசை நிர்ப்பந்திக்கும் உரிமை எங்களுக்கு இருக்கின்றது.

இன்று இந்த அரசாங்கம் கடந்த லிபரல் அரசை குற்றம் சாட்டுவதைப் போல கனடியத் தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் வல்லமையுடன் பல தொகுதிகள் காணப் படுகின்றன. எமது பலம் என்னவென்றே தெரியாமலும் தமிழ்த் தேசியத்தின் உயர்வு பற்றிய அக்கறை எதுவுமற்ற 'தலை'களின் பசப்புகளிலும் மயங்கி இருந்தால் இன்னும் இதுபோன்ற தலை குனிவுகள் தான் எமக்குக் கிடைக்கும் பரிசுகளாகும்.

எல்லாவற்றையும் மாற்றுவோம். எம்மில் உண்மையான அக்கறை உள்ளவர்களை அடையாளம் கண்டு கொள்வோம். எமது பலத்தை பல்கலாச்சார சூழலில் வெளிப்படுத்துவோம். இலங்கை பற்றிய கனடிய அரசின் வெளியுறவுக் கொள்கையில் கனடிய தமிழ் மக்களின் கருத்துகளையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சூழலை உருவாக்குவோம்.

அதை விட்டு, போட்டோவிற்கும், ஒரு வாய் சோத்துக்கும் சோரம் போவதை முடித்துக் கொள்வோம். புதிதாய் ஒரு பாதை. புதிதாய் ஒரு வாழ்க்கை இங்கு காண்போம்.

'அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே'

இரண்டில் ஒன்றைப்
பார்ப்பதற்கு
தோளை நிமிர்த்து
இன்னும் நீதி
வரவில்லையெனில்
வாளை உயர்த்து

Editorial: Eelam Nation

# Samaraweera Sheds Crocodile Tears

There is no greater parallel to the story of the crocodile shedding tears in sympathy of the intended prey than some of what Foreign Minister Samaraweera said at the interview he gave the journalist from the Sri Lankan newspaper, The Daily Mirror on 08 April 2006. It is a well known tale of deceit and hypocrisy. If you have not read the story of the crocodile do not bother for you will get the import from what Samaraweera said at the interview. What makes it a funny and a household tale is that the crocodile's lie was easily seen through.

Samaraweera being the Foreign Minister lacks the finesse and the subtlety required of a supervisor of others who lie abroad (excuse the pun) and spin doctors. Samaraweera, undoubtedly endowed with more intelligence than the crocodile, should have known how to lie better. At the daily mirror interview it was not *very clear as to whether he was lying* for his friends, for his enemies or to the international community. He was unsuccessfully trying to deceive his enemies without quite deceiving his friends. Samaraweera, we grant, was in an unenviable position.

The crocodile in Samaraweera is at its best when he says: "What we are doing is to liberate the Tamil people from the clutches of the LTTE." His heart also goes out to the children being spirited away and for the poor and the Tamil people in the Vanni who have to pay heavy taxes. Liberate the Tamils from what? From the Tamil leadership or from the State sponsored pogroms against them for the last fifty years since 1956, incarcerations without trial, Nazi type executions, mass killings and burials, rape by the security forces, torture, bombings and raids on churches while mass/ service were on, organised massacre of helpless remand political prisoners and unsuspecting inmates of rehabilitation homes, assaults and murder of elected representatives of the Tamils, discrimination at every turn, unfair selection to higher studies, sporadic killings in the north and east up to this day, disappearances, burning and desecration of centres of learning and the destruction of the socio-economic and cultural bases of the Tamil nation? These are just a few. Tamils had to face the brunt of more than sixty percent of the devastation by the Tsunami and still no relief has reached them. Even the mechanism settled on for the distribution of relief was overturned. What about also liberating the Tamils under siege in the army occupied areas in the Tamil territory both in the north and the east?

Samaraweera further states: "Unfortunately the so-called liberal sections of the west forget this aspect because they are swayed by the politics of the underdog, and assume that the underdog is always right". Scandinavians are liberal democracies with maximized welfarism. The Norwegians were the first nation to take up the cause of peace in the Middle East. Not that these liberal democracies blindly take up the cause of the underdog but it is that

> What about also liberating the Tamils under siege in the army occupied areas in the Tamil territory both in the north and the east?

they cannot comprehend the level of injustice and the kind of oppression of one group by the another. Except for the "liberal" sections, the rest of the international community has been with the oppressors. If they were with the underdogs the Palestinians would have been liberated long ago and East Timor would have become independent long before when it did and in Sri Lanka the recent spate of murders and rape by the security forces and proxy killings directed against the Tamils at least since December 2005 would have been condemned. Instead in Samaraweera's own words:..."the President and his new approach to the peace process and his patience and restraint is also greatly appreciated and his pragmatic approach is the last chance for us to find a negotiated settlement." Inaction is not patience. The international community espouse the cause of the underdog only when it is convenient to them.

Samaraweera's pathetic attempt to link the extremist Muslim terrorism to the Tamil liberation struggle defies any sense of rationality. "Many believe there is an element of technological transfer between the LTTE and Islamic terrorists". Even a person with a less challenging intellect would agree that there is no technology involved in committing suicide? And what is so sophisticated about it that it requires any form of technological transfer?

In the first part of the interview he draws a distinction between the CFA and the cease fire. Samaraweera likes the cease fire but he does not like the agreement. This is very revealing and provides an insight into the thinking of the government. They want to keep the Tamils in a state of containment and in a state of siege. It is apparent that they are not interested in any form of devolution or self rule for the Tamil people.

Hypocrisy is not practised piecemeal. For them it is a full time career.

ஒரு பேப்பர் ORU PAPER

# Three Mules and Sister Rajani - a rejoinder

**By: Sachi Sri Kantha**
***for Orupaper from Japan***



Following the appearance of my essay entitled, 'Three Mules and Sister Rajani' recently, I read a criticism by a correspondent that I had relied solely on the words of Kumar Rupesinghe (as presented by him in January 2006) to infer the indirect link of the so-called University Teachers for Human Rights (UTHR) to JVP. Since this is a valid criticism, the onus was on me to provide another independent source to vindicate my view. I felt that it would be more credible, if this second source is an anti-LTTE partisan as well. I report here, that I have found this second source. And it is Rohan Gunaratna, the now widely-touted "terrorism expert". I have previously even tagged Rohan Gunaratna, as the 'Temple Drum [*Kovil Melam*] of Terrorism Industry'.

Before he entered the international circuit, sixteen years ago, Rohan Gunaratna published a political history of JVP. The book's title was *'Sri Lanka A Lost Revolution: The Inside Story of the JVP'* (Institute of Fundamental Studies, Kandy, 1990, 366pp). In the Author's Note, Gunaratna had written, "[this] is the story of the struggle of the Janatha Vimukthi Peramuna (JVP), a politico-military group, to change the country's social and political system. The JVP revolted against three elected Governments within a span of 18 years." For the details assembled [since the author of this book had feeds from the Sri Lankan state's Intelligence arm] and because of ethno-cultural proximity Gunaratna had with the protagonists of JVP, I'd grade this book as a good contribution to the island's political literature. Here are two excerpts from this book, which link the UTHR and Rajani Thiranagama to JVP and its offshoots.

> As I have indicated in my previous essay, in his vituperative exchange, Kumar Rupesinghe had identified this "prominent lady lecturer" of UTHR as Hema Goonetilleka

### Excerpt 1:

"The JVP cover organisations included the National Students Centre (Jathika Shishya Maddiyasthanaya), the National Workers Action Centre (Jathika Kamkaru Satan Maddyasthanaya), the Patriotic Peoples Armed Troops (Deshapremi Janatha Sannadhda Balakaya) and the *Patriotic Peoples Movement* (Deshapremi Janatha Viyaparaya). Sympathetic organisations of the JVP included the Citizen's Committee of Colombo, Human Rights Organisations of University Teachers headed by a prominent lady lecturer, Inter University Bhikku Federation headed by a prominent bhikku from the University of Sri Jayawardhanapura, Inter University Students Federation, Medical Students Union, Socialist Students Union and the Law Students Union...." (p.45)

As I have indicated in my previous essay, in his vituperative exchange, Kumar Rupesinghe had identified this "prominent lady lecturer" of UTHR as Hema Goonetilleka, the wife of Susantha Goonetilleka; and Susantha Goonetilleka has not refuted this identification.

### Excerpt 2:

Rohan Gunaratna has provided the following thread to Rajani Thiranagama, in his description of 'Vikalpa kandayama', one of the six JVP splinter radical groups.

"*Vikalpa kandayama*: The 'Alernative Group' was another significant clique which attracted many revolutionaries from the JVP. This movement, also known as the group of Twenty Three, is committed to revolutionary progressive leftist ideals. Thomas George, a member of the group was a contemporary of Wijeweera, when the JVP leader was a member of the Communist Party (Peking). Dayapala Tiranagama is another. (His Tamil wife Rajani was killed in Jaffna in 1989). He was a member of the Communist Party who joined the JVP, but left the movement in 1968 after a discourse by Wijeweera on the JVP policy towards the Indian plantation workers. This group was also enriched by several other members who were combatants of the 1971 JVP uprising..." (p.131).

Even in the sentence which states Rajani's assassination in 1989, Rohan Gunaratna did not mention LTTE as her assassins. This is somewhat not insignificant, since Gunaratna has been a guy who would tag all the *horrors in the world* to LTTE's deeds at the drop of a hat!

### Inference

I can make two inferences. First, the links of UTHR (Jaffna) to JVP and its splinter radical group has thus been established, from two independent Sinhalese sources, who are also no LTTE sympathizers. In last January, even Susantha Goonetilleka (a virulent anti-Tamil polemicist), whose wife was the then chief organizer of UTHR activity, had corroborated this link. Secondly, by failing to confess on this deceitful UTHR-JVP link for the past 16 years, Rajan Hoole and his coterie have repeatedly attempted to hoodwink the Eelam Tamil public.

## What they said....

Sri Lanka's tottering peace process will collapse if Norway is forced out as facilitator under pressure from Sinhalese hardliners. The Sinhalese hardliners were insistent that Sri Lanka had to be a unitary state - a view completely at odds with the thinking of Tamils and other minorities in the island. Federalism is not an instrument to divide the multi-ethnic country.

***- G.L. Peiris, former Sri Lankan Minister of Constitutional Affairs.***

We are not in a position to attend the Geneva talks on the currently decided dates under the present environment... It is the government that is creating a war-like situation and pushing us towards war.

***- SP Thamilselvan***

The monarch will never retire or abdicate the throne. It's not like a normal job, it's a job for life. The vows made on Coronation Day were so deep and so special to the Queen. She wouldn't consider not continuing to fulfil those vows until she dies.

***- The Hon Margaret Rhodes - The Queen's cousin***

## 'UNICEF is non-partisan and its cooperation is free of discrimination' - Really?

The United Nations Children's Agency would like the entire world to believe that it 'is non-partisan and its cooperation is free of discrimination'. Anyone who had followed the stance the UNICEF organisation has taken with regards to the welfare of Tamil children on the island of Sri Lanka would beg to differ with this claim.

Firstly, almost 50% of all statements issued by the UNICEF in Sri Lanka are in relation to less than 2000, alleged 'child soldiers' who have enrolled into the Liberation Tigers of Tamil Eelam (LTTE). The rest 50% of statements cover the 250 000 children working as child labour, the 15 000 children exploited in the sex industry and the over 100 000 Tamil children who have been displaced from their homes as a direct consequent of the military occupation.

On 13 April 2006 an auxiliary cadre of the LTTE was killed by a claymore mine explosion while he was delivering breakfast to LTTE camps. Auxiliary cadres are fully paid members of public who do not participate in direct combat with the enemy.

UNICEF identified the deceased as a 17 year old and was quick to issue a statement condemning the LTTE for having enrolled him as an auxiliary cadre. One thing UNICEF failed to realise is that there is a Cease Fire Agreement (CFA) between the Government of Sri Lanka (GoSL) and the LTTE. Hence, neither the auxiliary cadre nor the LTTE would have been expecting an offensive attack targeted at them.

While the UNICEF is quick to point fingers at the LTTE, its statement does not condemn the murder of the 17 year old. If UNICEF can not be sure that it was the Sri Lanka Army (SLA) that planted the mine, then the statement could have at least condemned who ever that was responsible for the murder.

If one is to follow UNICEF's line of non-partisan statements, then it is alright to blow up Tamils at a time of supposed peace and ceasefire, but it is not alright for a 17 year old to enroll as an auxiliary cadre and deliver food parcels.

Interestingly on checking http://www.armyjobs.mod.uk/Regular Army/Requirements/Age/Soldier/ we found that the western democracy enrols anyone over the age of 16 into its armed forces.

The full text of the statement released by the UNICEF id given below:

UNICEF deeply regrets the death of a 17 year-old child in the Liberation Tigers of Tamil Eelam (LTTE) auxiliary, killed on 13 April in a reported claymore mine incident in North Vavuniya.

This incident underlines the risks children are exposed to when used in direct combat or in support roles such as delivery of supplies.

Recruitment of children is a direct violation of their right to protection from violence. UNICEF calls on the LTTE to immediately release all under-age recruits within its ranks and to cease recruitment of children.

UNICEF conveys its condolences to the family for their loss.

*Courtesy: tamileditors.com*




Contact our services for:
- Shelving
- Chillers, Freezers
- Air Conditioning systems
- Shop Fitting
- Cold Rooms etc.,

உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நாடவேண்டிய ஒரே இடம்

**RADIUS SERVICES LIMITED**
Unit: 23-24 Resolution Way London SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786

# Half-empty or Half-full glass: it boils down to how you view things

By: Fr. Chandiravarman Sinnathurai

*[This piece is humbly dedicated to the memory of a true hero of Eelam Tamils, Mr V Vigneswaran – a nirāyuta-pāni; assassinated on the 8th April '06 in Trincomalee by racist cowards. Mr Vigneswaran lived and died for the idea of Tamil Eelam. May his courageous spirit live forever!]*

Half-empty or half-full glass: It boils down to how you view things. On the bright side, in spite of looming war clouds, Tamil Eelam is an inevitable reality.

The SLG (Sri Lanka Government), the US and the EU are grudging to recognise the reality openly. In the intervening time of course, they would do all that is in their power to tighten the screws up. The whole idea is to starve the Tamil Resistance movement of its oxygen. Among other covert operations monitoring and blocking the flow of finances including shipments of defence equipments and hindering information on the one hand and on the other disseminating disinformation in order to encourage Tamil quisling armed factions, LTTE renegade Karuna faction in particular to have a free-hand in forming themselves as "credible" alternative voices. In short this is a classic divide and rule. It's a 'diamond cut diamond' policy.

> Rumour has it that renegade Karuna is being tutored in Chennai by some 'veterans' as to how to win hearts and minds in the Eastern province.

Rumour has it that renegade Karuna is being tutored in Chennai by some 'veterans' as to how to win hearts and minds in the Eastern province. Such hysteria might make Karuna the prime candidate for the post of global village idiot. The current climate nevertheless seems best suited for double-crossers and turncoats!

The long-term working hypothesis of the West however, is to intimidate the LTTE as a proscribed terror group and to shun it from all international forums. This proscribed "Pariah status" coupled with travel ban slapped on its forehead is expected to eventually bring the LTTE to their knees — at least that's the theory. The SLG and the US in particular is said to have instinctively agreed, solely based on geo-political greed, to gradually build psychological pressure on the Tamils to a breaking point. The rationale runs that once they feel cornered the Tamils might be urged to ask: Is autonomous Tamil Eelam really an economic viability? The SLG with the help of the West would shake heaven and earth in order for the Tamils to arrive at a negative conclusion. All these seem to be purely academic. Indeed it sounds far fetched. There is every possibility for these miscalculated moves turning into a monstrum-horrendum.

What the West would like to ideally see, quite frankly, is a cash-strapped De facto Eelam state. To point to a current example, even though Hamas has won a landslide electoral victory -- most unexpectedly through democratic means, the West has got the manipulative clout because it has got the purse strings! It is safer to keep things on the leash.

There is always political leverage in the carrot-and-stick game. In this policy formation there still lays a perplexing question. Can't the Arab petro-dollars fund the Palestine "state"? Why should the Palestinians rely on Western hand-outs while the Arab Petro-dollars are buying out multi-billions worth of prime real estates, and top niche businesses (in most cases status-quo institutions) in the Western capitals? Cash seems to flow in one direction only — not to mention the Swiss bank accounts. The answer perhaps is located some where within the <inverted commas>.

The two-state solution and the talks of road-map to peace with the assistance of Norway have managed only to miss theoretical bulls-eye of conflict resolution.

By applying the Palestinian experience to the De facto Tamil State one finds that there is juxtaposed a twin factor

1) Political independence

2) Economic independence or inter-dependence.

The achievement of the first depends, in our reckoning on the battle for Trinco. Secondly, a complex hard question has to be faced: Can the Eelam Central financial institution fund its own state public services such as hospitals, transport – land, sea and air; banks, schools, universities, security etcetera?

> Why should the Palestinians rely on Western hand-outs while the Arab Petro-dollars are buying out multi-billions worth of prime real estates

In order to yield a realistic response to the second question, at some opportune moment the newly established Eelam state will require finding its way into the international monetary system. Of course Tamil Eelam is not intending to be a reclusive state in a globalised economy. The answer to this question very much relies on the next strategic question. In the event of such an independence and economic boom how would it affect the geo-political interests of the US and the balance of power in the region? The fundamental question however is tucked away in multi layered existential reality – national, international including geo-political interests.

In the end, the penny begins to drop. Everything boils down to money, money, money. Finance, trade and economy. It is tragic, the West, US in particular has become morally delinquent owing to their coldly calculated self-interests.

Plato once said war exists and will always exist because it comes from human passions. He further added that it belongs to human nature, to our arrogance and anger, our need to assert and exert dominance or supremacy. In light of Plato's word one need to think of the world at large, while narrowing it down to SLG and the US and the EU. The acceptable 'sophisticated trend' however, is to act locally on readiness for war but to think globally of peace. One's talk is not expected to match one's walk. Weird that!

It is said that diplomatic 'sophistication' makes one to enter into peace agreements that often lack clarity, suffer from ambiguity, and permit contradictory interpretations.

In all of these "Idiyappa Cikkal" [problematic as spaghetti like string hoppers] the word PEACE has become the most politicised and pilloried. It seems one has to run with the trend of multi-layered talks and peace negotiations if one's aim is to win the desired goal. In this round-about game of raja-tantrum however, one's intentions can be diametrically opposite to what you might be willing to say openly. This shows what an illusive, fragile and a dangerous planet we inhabit! The value for the life of a human being has diminished to the extent that people become expendable commodities. Ideologies of greed and profit over people have often over taken human kind.

In the current climate of hostilities, civilian murders and race riots especially in Trincomalee, reveal the true intentions of the SLG. It is preparing and provoking the battle for Trinco. The US and the UK fully understand the strategic importance <http://www.dissidentvoice.org/Jan06/Sinnathurai07.htm> of this battle. The Trinco airport (and airbase) has always been on the strategic international code map for airports since colonial days even before Colombo ever became an international airport! [Not forgetting the sea port].

Should the battle for Trinco is lost by Colombo then eventually the so-called peace negotiations will have to be transformed into amicable partition talks. We can 'lolly pop' as much as we like. Evidence at hand regarding strengths and weaknesses of both sides suggests that this could very well be the ground reality.

In the mean time SLG in collaboration with the US will try its best to short circuit the Eelam project. The primary objective however, would be to coerce the Tamils to settle for the stars instead of the "moon".

So just before that final scenario the 'peace bandwagon' has to be on the road until "the goin' gets tough because the tough gets goin'". Nonetheless the West would want one thing to be clarified. What sort of independence are we talking about?

There can of course develop an interesting set of scenarios. If we are thinking hypothetically of the morning after the "post decisive battle for Trinco", then we are seriously talking in the ball park of the not too impossible event of partition. At this stage SLG might be swiftly changing gears in terms of possibly linking its direction towards Pakistan with its cunning talk of "protecting the interests of Moslems". This is a ploy to distract and destroy the people in the East Eelam and to inflame the Islamic terrorism! For economic geo-political reasons there are strong signals already in the woodworks of SLG re-aligning itself with China.


> In the current climate of hostilities, civilian murders and race riots especially in Trincomalee, reveal the true intentions of the SLG

Now where would this changing scenario place the young Eelam State in the international scene? Where would the Tamils look up for aid and alliance in the process of further state formation, development and fortification? Where will it pledge its allegiance? The considered response to these questions lays in the prudence on the part of the Western nations - US and its allies. Ah, but until 'the rubber hits the road' the pragmatic unanswered question remains: Who will hold the purse strings?

In the final analysis: Profit making is the essence of democracy. We stand to sing from the same hymn sheet:

**Zip-a-dee-doo-dah, zip-a-dee-ay,**
**My, oh, my, what a wonderful day.**
**Plenty of sunshine headin' my way,**
**Zip-a-dee-doo-dah, zip-a-dee-ay!**

*Courtesy: Tamilnation.org*


Tamsons
Accountancy & Tax Consultancy Ltd.
65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
**Tel: 020 8313 0800**

* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
சேயோன் - திரு
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
கௌரி - பாலா

அச்சு
ஊர்மிளா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி - ஹபீப்

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
செல்வி - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-கதிர்-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
020 8640 4604
020 8286 9327

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# சற்று மாறுதலுக்காக

## மூக்கும் முழியுமாய் வாழவே எழுந்தோம்

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

நமது தாயகத்தின் தலைநகர மண்ணில் இனப்படுகொலை இப்போது நிகழ்கின்றது. இனக்கலவரம் என்று தெரிந்தோ தெரியாமலோ சில ஊடகங்கள் சொல்கின்றன. இரண்டு இனங்கள் மோதிக்கொண்டால் தான் அது இனக் கலவரம். ஓர் இனம் இன்னோர் இனத்தின் மீது வன்செயல் செய்து கொலைகள் புரிந்தால் அது இனப்படுகொலை. இப்போது திருமலையில் தமிழர் மீது சிங்கள இனம் படுகொலையேபுரிகின்றது. இந்த இனப்படுகொலையானது அரச பயங்கர வாதத்தின் ஓர் அங்கமே!

இப்படி எழுதுவதனால் இனவாதம் பேசுவது என் நோக்கமல்ல. சிங்கள இனம் இப்போது ஒன்றை யோசித்தாக வேண்டும். 1971 ஏப்பிரலை அண்டிய காலங்களையும் 1988, 89 காலப்பகுதிகளையும் மீள நினைவுக்குக் கொண்டுவர வேண்டும்.

சிங்கள அதிகார வர்க்கம் சிங்கள மக்கள் மீது எப்படியெல்லாம் கோரத்தாண்டவம் ஆடியது. அதிகார வர்க்கத்திற்கெதிராகக் கிளர்த்தெழுந்தவர்களை மாத்திரமா வேட்டையாடியது? ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தவர்களை, ஒரு சொல் கேளாது ஊமையாக இருந்தவர்களை, ஒரு சொல் கேளாது ஊமையாக இருந்தவர்களை, எமக்கு என்ன என்று சும்மா இருந்தவர்களை, நடப்பது நமக்கல்ல என்று வெறுமனே திரிந்தவர்களை, இவர்களை எல்லாம் இந்த அதிகார வர்க்கம் விட்டு வைத்ததா?

ஏன் இப்படி நடந்தது? அதிகார வர்க்கம் தன் இருப்பையிட்டு அச்சப்பட்டதே அதற்குக் காரணம். தன்னிருப்பிற்கு ஆபத்து என்று கலவரப்பட்டது.

எனவேகையில் அகப்பட்ட யாவும் கசக்கிஎறியப் பட்டன. காலில் தட்டுப்பட்டவை யாவும் மிதித்து நசுக்கப்பட்டன.

கசக்கப்பட்டவையும் கதறக் கதற காலில் மிதிபட்டவையும் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்க நாதியில்லாமல் அப்படியே அழிந்து போயின. புதைத்த இடத்தில் புல்லும் முளைத்து விட்டது. எரித்த இடத்தில் சாம்பலும் எஞ்ச வில்லை. எலும்புக் கூடுகள் மாத்திரம் சவ ஊர்வலம் போயின.

மகாவலி கங்கையிலோ, களு கங்கையிலோ களனி ஆற்றிலோ நீந்தி விளையாடிய மீன்கள் வயிறு புடைக்கச் சாப்பிடுகின்ற காலம் அப்போது வந்தது. கொல்லப்பட்ட சிங்கள இளைஞர்களின் விரல்கள் சிதைந்துபோன தசைகள், நீர் உறிஞ்சி பருத்து இளகிப்போன தசைப்பிண்டங்கள் அத்தனையும் மீன்களுக்கு உணவாகின.

ஆற்றில் திமிங்கிலங்கள் திரிந்ததில்லை. சுறா மீன்கள் வாழ்ந்ததில்லை. விரல்களை விழுங்கியதும் காதுகளைச் சப்பியதும் சின்னச் சின்ன மீன்கள் தாம்.

திமிங்கிலங்களும், சுறாக்களும் வீதிகளில் திரிந்தன. வெளியில் உலாவின. எயார் கொண்டிசன் அறைக்குள் இருந்தன.

சிங்கள இளைஞர்களின் சடலங்களை ரயர் போட்டு எரித்த போது வீசிய வெக்கையைத் தவிர அவர்கள் மீது வேறொரு வெக்கையும் பட்டதில்லை. துவக்கு எடுத்துச் சுட்டபோது அல்லது சுடச்சுட சோறு தின்றபோது கையில் பரவிய வெப்பத்தைத் தவிர வேறு வெப்பம் என எதையும் அவைகள் அறிந்ததில்லை.

ஆனால் உடல் முழுதும் வெப்பம் பரவிச் செத்துப் போனவர் எவர் என்று தெரியுமோ? சிங்கள ஏழை மக்கள்.

காடு கழுவி வந்த ஆறு என்ன செய்யும்? பாவம் போக்க தன்னைக் கழுவ முடியாமல் தவிக்கும். ஓடிச் சென்று கடலில் மூழ்கி தற்கொலை செய்யும்.

கடல் என்ன செய்யும்? கலங்கித் துடிக்கும். அலையெழுப்பி அவலத்தைச் சொல்லும். தன் மீது பூசப்பட்ட கறையை, களங்கத்தைப் போக்க வழியில்லாது விழி பிதுங்கும்.

தீவில் இருக்கக் கூடிய எல்லா ஊர்களிலும், எல்லா வீடுகளிலும் எத்தனை இழப்புக்கள். எத்தனை துயரங்கள். ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு குடும்பமும் அதிகாரத்தின் அடக்கு முறையில் ஒருவரையாவது இழந்து வேதனையில் விம்முகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் அகாலமாய் இறந்தோரின் புகைப்படம் சுவரில் மாட்டப்பட்டிருக்கிறது. கணவன் மனைவியைப் பிரிந்தான். குழந்தைகள் அம்மா அப்பாவை இழந்தார்கள். சகோதரர் சகோதரரை இழந்தார்கள். அப்பாக்களும் அம்மாக்களும் பிள்ளைகளை இழந்தார்கள். நண்பர்கள் நண்பர்களை இழந்தார்கள். நான் காற்றை இழந்தேன். கடலை இழந்தேன், ஆற்றை இழந்தேன், அனைத்தையும் இழந்தேன்.

இழப்பு, கசப்பு, நெருப்பு இவற்றிற்கிடையே தான் இருக்கின்றது நம் வாழ்வு.

உம் வாழ்வும் இவற்றுக்குள்தான் இருக்கின்றது. இதை உணராது இருக்கின்றீர்கள். அவ்வளவு தான். உங்களது அதிகார வர்க்கம் இதை உணரவிடாது தடுக்கின்றது. இனவாதம் பேசி இவற்றை மூடி மறைக்கின்றது. சிங்களப் பௌத்தம் என்று வெறியூட்டி, உண்மைகளை ஒளித்து விடுகின்றது.

உண்மையில் அனுதாபத்திற்குரியவர்கள் நீங்கள்தான். கிண்டலாகவோ, கோபமாகவோ இதனை நான் சொல்லவில்லை. கவலையுடன் சொல்கின்றறேன். நீங்கள் மிக மிக அனுதாபத்திற்குரியவர்கள். ஏனென்று சொல்கிறேன்.

எங்களை அதாவது ஈழத்தமிழரை மீட்க, எங்களுக்கு வழிகாட்ட எங்களை மேம்படுத்த, எங்களுக்கு விடுதலை பெற்றுத்தர ஓர் உன்னதத் தலைவன் இருக்கின்றான். ஓங்காரம் மிக்கவன். ஓர்மம் கொண்டவன். விட்டுக்கொடான், விடுதலை பெற்றுத் தருவான். விடுதலைப் பிழம்பை எங்கள் விழிகளில் தெரிய வைக்கிறான். எத்துணை அளவு வாழ்வு மீதான நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

சொல்லுங்கள் உங்களுக்கு அப்படி ஓர் ஒளி தெரிகிறதா? உங்களை யாரும் மீட்பர் என்ற நம்பிக்கை இருக்கிறதா? உங்களுக்கு அப்படி யார் இருக்கிறார்கள். ஒருவரைக் கூறுங்கள். தமிழர் மீதான துவேசத்தைக் கிளறி, உங்களை அதில் ஊறவைத்து, தங்கள் நலனைக் காக்கிறார்கள். வளம் பெருக்குகிறார்கள். நீங்கள் 'ஜெயவேவா' கோசம் போடுவதாக எண்ணுகின்றீர்கள். ஆனால் 'மகே அம்மே' என்ற உங்களது அவலக்குரல்தான் எங்கள் காதுகளில் ஒலிக்கிறது. தமிழீழ மீட்புதான் உங்கள் வாழ்வையும் மீட்கும் என உணருங்கள்.

ஒன்று உரைக்கக் கேளுங்கள் - வரலாற்றின் பக்கங்கள் கண்ணீரால் மாத்திரம் எழுதப்பட்டதில்லை. வீர காவியங்களால் எழுதப்பட்டது. இனி இயலாது என்று வாழ எழுந்தவர்கள் வரலாற்றை மாற்றி எழுதுகிறார்கள். இது ஒன்றை இனியாகிலும் புரிந்து கொள்வீர்.

# மெய்யறிய வேண்டும்

நாம் வளரும் சூழ்நிலை நமக்குள் பழக்க வழக்கங்களை- எண்ணங்களை விதைக்கிறது. வளர வளர அந்த எண்ணங்களும் வளர்கின்றன. நம்மில் பெரும்பாலோருக்கு நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நம்மை மதிக்க வேண்டும் என்கிற எண்ணம் வளர்கிறது. இல்லையேல் நம்மிடம் ஒரு பயமாவது கொண்டிருக்க வேண்டும் என்பது போன்று நம் எண்ணங்கள் குவிக்கப் படுகின்றது. நான் சமுதாயத்தால் வளர்க்கப்படுகிறது.

அப்படியென்றால் உண்மையிலேயே நான் யார்? இதை நாம் அறிந்து கொள்வது தான் ஒவ்வொரு மதத்தை உண்டாகக் காரணமானவர்களின் நோக்கம். ஆனால் அவர்களுக்கு உண்மையில் தங்கள் பெயரால் ஒரு மதம் தோன்றி உலக மக்கள் எல்லாரும் பின்பற்ற வேண்டும் என்பதில் அக்கறை இல்லை. பின் எப்படி மதங்கள் தோன்றியது? ராமகிருஷ்ண பரமஹம்சர்-சொன்ன கதை ஒன்றைச் சொல்கிறேன்:

ஒரு தெருவில் ஒரு சாமியார் இருந்தானாம். தினமும் பூஜை புனஸ்காரங்கள் செய்து கடவுளைக் கும்பிட்டுக் கொண்டே இருப்பானாம். அப்படியிருக்கையில் அவன் வீட்டிற்கு எதிர்வீட்டில் ஒரு தேவரடியாள் குடிவருகிறாள். அவளைப் பார்த்து இப்படி வாழ்க்கையைப் பாவக்காரியத்தில் வீணாக்குகிறாயே? நீ ஏன் திருந்தக் கூடாது? என்று கேட்டிருக்கிறான் சாமியார். அதனால் அவள் வருத்தப்பட்டு அப்பாவத் தொழிலை விட முயன்றாலும் அவளால் விட முடியவில்லை. அதனால் வருத்தப்பட்டுக் கொண்டே இறைவனிடம் பக்தியுடன் இருந்து தன் வாழ்வில் பற்றில்லாமல் கழித்துக் கொண்டிருந்தாள் அந்த தேவரடியாள். ஆனால் அந்த சாமியாருக்கோ அவளுடைய நன்மைக்காக நாம் சொன்னாலும் அவள் கேட்க மறுக்கிறாளே என்று கோபம். 'இதோ பார், இன்றிலிருந்து நான் உன் ஒவ்வொரு தவறுக்கும் ஒரு கல் என என் வீட்டின் முன் குவிக்கப் போகிறேன்., நீயே எவ்வளவு தவறு செய்கிறோம் என்று தெரிந்துகொள்ளப் போகிறாய்'. கற்கள் மலை போல் குவிந்து விடுகிறது. அதைப் பார்த்து அவள் மனம் வருந்துகிறாள். ஒருநாள் இருவரும் இறக்கின்றனர். அவள் சொர்க்கத்திற்குச் செல்கிறாள்? அந்த சாமியாரோ நரகத்திற்குச் செல்கிறான்.

அவள் சொர்க்கத்தில் இருப்பது தெரிந்து இறைவனிடம் ஏன் இப்படி என்று கேட்கிறான். நீ அவள் செய்யும் தவறுகள் மேல் உன் நாட்டத்தைச் செலுத்திவிட்டாய். ஆனால் அவளோ தாம் இந்த பாவத் தொழிலில் இருக்க வேண்டியிருக்கிறதே என்று மனம் நொந்து வாழ்வில் பற்றில்லாமல் என்னையே நினைத்து முக்தி அடைந்து விட்டாள் இது போன்ற சாமியார்களால் தான் மதங்கள் தோன்றின. தம்முடைய குரு உண்மையில் என்ன போதிக்கிறார் என்று சிந்திக்காமல், மேலோட்டமாகப் பார்த்து மக்கள் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று அவர்களாக சட்டங்கள் இயற்றுகின்றனர். மக்களும் பெரும்பாலும் அதைப் பின்பற்றுகின்றனர்?

காரணம் பயம்- மரண பயம். மரணபயம் தான் நம்முடைய பெரும்பாலான நடவடிக்கைகளுக்குக் காரணமாக இருக்கிறது. நம்முடைய அறிவியல் விளக்கப்படி மரணம் என்பது முழுக்க முழுக்க உடல் ரீதியானது. அறிவு மனமெல்லாம் உடல் இருக்கும் வரை தான். எனவே இறந்த பிறகு மனம் ஆழ்ந்த மௌனத்திற்குச் செல்கிறது என்று வைத்துக் கொள்ளலாம். உண்மையில் நாம் நம் மூளையின் எல்லா நினைவுச் செல்களையும் உபயோகப் படுத்துவதில்லை. மூளையின் செயல் திறனில் நூற்றில் ஒரு பங்கு தான் தோராயமாக நாம் உபயோகப் படுத்துகிறோம்.

எனவே மீதிப் பகுதி என்னவாக இருக்கிறது? அங்கும் ஆழ்ந்த மௌனம் தான்- இறந்த பிறகு நம் மனம் இருக்கும் நிலையென சற்று முன் சொன்னேன் இல்லையா- அந்த ஆழ்ந்த மௌனம் தான் இதுவும். எனவே அந்தப் பகுதியை நோக்கி நாம் நம் கவனத்தைத் திருப்பினால்- அந்த முயற்சி நமக்குக் கைகூடினால் நாமும் நமது பிரபஞ்சமும் ஒன்று என்று உணர்ந்து கொள்வோம். எனவே நான் என்கிற அகந்தை ஒழிந்து விடும். நாமும் இந்த பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக மாறிவிடுவோம். கடந்த பத்தியில் இருந்ததைப் படித்துவிட்டு இவ்வளவு சுலபமா முக்தி என்று எண்ணிவிடக்கூடாது.

அதை அடைகிற பாதைகளைத் தான் ஒவ்வொரு பெரியவரும்- ஏசுவிலுருந்து ரமண மஹரிஷி வரை சொல்லியிருக்கிறார்கள். அதைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி செய்யாமல் இருக்கிறோம். இந்த இலக்கை அடைவதற்கான பாதை மிகவும் கடினமானது. ஒவ்வொரு முன்னேற்றத்திலும் ஏதாவது ஒரு தடங்கல் வந்து கொண்டே இருக்கும். அவைகளைப் பொருட்படுத்தாமல் நம் இலக்கை நோக்கி நாம் செல்லச் செல்ல, எல்லா சக்திகளும் அதில் முன்னேற்றம் அடைய அடைய நம்மை வந்து சேரும்.

*- உகதி*

# மக்களின் இலக்கியக்காரன்

வன்னியன்
*(அவுஸ்திரேலியாவிலிருந்து)*



நாட்டுப் பற்றாளர்
**நாவண்ணன்**

போராட்டத்தின் பதிவுகளைத் தனது எழுத்து, பேச்சு, ஓவியம், சிற்பம் போன்றவற்றால் வெளிப்படுத்தியவர் கவிஞர் நாவண்ணன்.

தமிழன் சிந்திய இரத்தம்,

கரும்புலி காவியம்,

இனிமைத் தமிழ் எமது,

ஈரமுது

உள்ளிட்ட சிறப்பு நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார். அரங்காற்றுகையிலும் தனக்கென தனியிடத்தைப் பிடித்து கொண்டவர். நாவண்ணனால் தயாரிக்கப்பட்ட 'வலியும் பழியும்' என்ற நாடகம் முக்கியமானதாக கருதப்படுகின்றது. புலிகளின் குரலில் தயாரித்த கரும்புலிகள் காவியத்தை நூலாக வெளியிட்ட அதே வேளை பல்வேறு நூல்களையும் வெளியிட்டார். அதே போல் ஓவியம், சிற்பம் ஆகியவற்றை வெளிப்படுத்திய அவர் இறுதிக் காலத்தில் ஒளிக்கலையிலும் செலவிட்டார். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் இரண்டு தடவைகள் தங்கப்பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். 1998 ஆம் ஆண்டு புலிகளின் குரலில் சிறப்பாகச் செயற்பட்டமைக்காகவும், அதன் பின்னர் கரும்புலி காவியம் நூல் உருவாக்கம், கலை இலக்கியம் போன்ற செயற்பாடுகளுக்காக இரண்டாவது தடவையும் கௌரவிக்கப்பட்டார்.

கவிஞர் நாவண்ணனின் இலக்கியப் பணி நீண்டது. உண்மையில் அவரைக் கவிஞர் என்றுமட்டும் சொல்வதிலும் பார்க்க, பல்துறைக் கலைஞரென்றே சொல்ல வேண்டும். அவ்வளவுக்கு பலதுறைகளில் ஈடுபாட்டுடன் உழைத்த மனிதர். 1985 ஆம் ஆண்டு சிங்கள அரச படையாற் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வங்காலைக் குருவானவர் அருட்திரு மேரிபஸ்ரியன் அடிகளார் பற்றிய நூலான 'தீபங்கள் எரிகின்றன' என்ற நூலின் மூலம்தான் எனக்கு நாவண்ணன் அறிமுகமானார்.

பின் 'புலிகளின் குரல்' வானொலியிற் பணியாற்றிய காலத்தில் மிக வீச்சுடன் செயலாற்றினார். மிக அருமையான தாயகப் பாடல்களை எழுதியுள்ளார்.

'தமிழன் சிந்திய இரத்தம்' என்ற தொடர் ஈழத்தவர்களின் அவலங்களை ஆவணப்படுத்திய முக்கிய நிகழ்ச்சி. இதுவரை ஆவணப்படுத்தப்பட்டவற்றில் முக்கியமானது இத்தொகுப்புத்தானென்பேன். தனியே ஓர் இனப் படுகொலையையோ அல்லது ஒட்டு மொத்தமானவற்றையோ திரட்டிப் புள்ளி விபரங்களோடு தொகுப்பட்டவற்றைத் தாண்டி, தனிமனிதர்களின் அவலங்களை அவர்களின் குரலிலேயே ஆவணப்படுத்தியதும், போர் உக்கிரமடைந்தபின்னும் தனிமனிதர்கள் மேல் நடத்தப்பட்ட கொடுமைகளின் சாட்சியத்தைப் பேணியதும் இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சம்.

'மட்டக்களப்பில் குடும்பத்தோடு சேர்த்து வீடு கொழுத்தப்பட்டபோது சிறுவயதில் தப்பிய ஒருவன், தன் குடும்பம் முழுவதுமே அதில் கொல்லப்பட்டதாக நினைத்திருந்தவன், மணலாற்றுச் சண்டையில் தன் சகோதரியைப் போராளியாகவே சந்தித்த சம்பவங்கள் (இதன்மூலம் தமிழ்ச் சினிமாவின் சில சம்பவங்கள் சாத்தியமுள்ளவையென்று நம்பத் தலைப்பட்டவன் நான்) உட்பட ஏராளமானவற்றை ஆவணப்படுத்தியவர் நாவண்ணன். உண்மையில் கிழக்கு மக்களின் அவலங்களும் போராட்டப் பங்களிப்பும் வடக்கோடு ஒரே தளத்தில் வைத்துப் பார்க்க முடியாதென்ற தெளிவை எனக்கு மட்டுமன்றி நிறையப் பேருக்குத் தந்தது அந்நிகழ்ச்சி. எல்லைப்புறத் தமிழர்கள் மேல் நடத்தப்பட்ட வன்முறைகளும் இடங்களைப் பறிகொடுத்து அவர்கள் வெளியேறியதும் பலர் வெளியேறாமலே வீம்பாக இருந்து மாண்டதும் உட்பட எல்லைப் புறத் தமிழர்களின் சிலபாடுகளையாவது வெளிக்கொணர்ந்த தொகுப்பு அது.

ஏற்கனவே 'தமிழன் சிந்திய இரத்தம்' என்ற பெயரில் கவிஞர் நாவண்ணன் புத்தகமொன்று வெளியிட்டிருந்தார். அதில் ஆயுதப் போராட்டம் வீரியமடைய முந்திய காலப் படுகொலைகளை ஆவணப்படுத்தியிருந்தார். பின் அதே பெயரில் ஒலிவடிவில் அவர் தொகுத்த தொகுப்புத்தான் புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சி. இதுவரை அது புத்தகமாக வரவில்லையென்று நினைக்கிறேன். விரைவில் வரவேண்டும். அனாலும் பாதிக்கப்பட்டவர்களின் நேரடிக்குரற் சாட்சியங்களடங்கிய ஒலிப்பேழையும் வெளியிடப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

அதைவிட 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற மடுத் தேவாலயப் படுகொலை பற்றியும் அவரொரு சிறந்த தொகுப்பைச் செய்திருந்தார். கையெழுத்துப் பிரதியாக இரண்டொரு பக்கங்கள் வாசித்தேன். அது இன்றுவரை வெளிவரவில்லை. வெளிவராததற்கு இருக்கும் காரணம் நியாயமானது, என்றாலும் ஒருநாள் வெளியிடப்படுவதற்காகவேனும் அவர் தொகுத்துவைத்த அப்புத்தகத்துக்காக அவருக்கு நன்றி.

கரும்புலி காவியம் என்ற பெரும்பணியைச் செய்ய முடிவெடுத்தபின் அதற்கான தரவுகளுக்காக வன்னியின் மூலைமுடுக்கெங்கும் புழுதி குடித்து அலைந்த கவிஞரின் பாடுகளை நன்கு அறிவேன். இவையெல்லாமே காசு கிடைக்காத தொழில்கள். அவரது அலைச்சலுக்கோ அந்தக் காவியத்துக்கோ ஊதியமேதுமில்லை. வரலாற்றை ஆவணப்படுத்தும் திருப்தியைத் தவிர வேறொன்றுமில்லை.

நாவண்ணனின் பாடல்கள் எனக்கு மிகப் பிடித்தமானவை. வவுனிக்குளத் தேவாலயப் படுகொலையை நினைந்து உடனடியாகவே அவர் இயற்றி, திருமலைச் சந்திரன் பாடிய பாடலைக் கேட்டு உருகாதவர் யாருமிருக்க முடியுமா?

'கன்னங்கள் தாங்கிய காலங்கள் போதும். –எம்
சன்னங்கள் வென்றிட உமதயை தாரும்.'

கவிஞர் நாவண்ணனின் 'அக்கினிக் கரங்கள்' என்ற நூல் 01.03.2006 அன்று கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது. இதுதான் அவரின் கடைசி நூலென்று நினைக்கிறேன்.

சூசைநாயகம் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர் நாவண்ணனுக்கு ஆறு பிள்ளைகள். ஐந்துபேர் பெண்கள். அவரின் ஒரேமகன் சூசைநாயகம் கிங்சிலி உதயன் (2ஆம் லெப். கவியழகன்) களத்திலே வீரச்சாவடைந்துவிட்டார்.

'ஊர் கொடுத்தார் புலவருக்கு
உவந்தளித்தார் மிடி தீர
தேர் கொடுத்தார், திருக் கொடுத்தார்,
தெரு வெல்லாம் பவனி வர்
கார் நிறத்துக் கரி கொடுத்தார்?
காற்று விசைப் பரி கொடுத்தார்'

என்று வியந்து தொடங்குகிறது அவரது 'கரும்புலி காவியம்'.

'காவியமாய் புதுப் பறம்பாடி' எம்
காலத்து வரலாற்றை
நான் பொறிக்க வேண்டும்
சீவியத்தை மண மீட்கத் தந்து – சென்ற
செங்களத்து மறவருக்குச்
சமர்ப்பிக்க வேண்டும்'

என்ற அவரது கனவு முழுதாக நிறைவேறாமலேயே சென்றுவிட்டார்.

## இவனா என் பிள்ளை!

அம்புலியைக் காட்டி ஆவென்ன வைத்து
'அச்சாப் பிள்ளை' யென 'ஆய்தந்த பிள்ளை'
கம்பால் அடித்து கண்டித்து பின்னர்
கண்ணீர் துடைத்து அணைத்திட்ட பிள்ளை
'வம்புக்குப் போகாதே
வலுச்சண்டை செய்யாதே
வாய்காட்டாதே' யென்று
வளர்த்திட்ட பிள்ளை
வெம்பகைவர் படைஅழிக்கும்
வீரனாம் எனக்கேட்டு
வியக்கின்றேன் இன்று,
இவனா என் பிள்ளை!

இருட்டுக்கு அஞ்சியவன்
இரவானால் தனியாக
இருப்பதற்கு துணைகேட்ட
பயங்கொள்ளிப் பிள்ளை
விரட்டிக் கலைத்தாலும்
விட்டகலாம் தாய்சேலை
வீம்போடு அவளோடு அலைகின்ற பிள்ளை
பரட்டைத் தலைவான்
படிப்புக்கு ஒளித்திடுவான்
பசியின்றி விளையாடித் திரிகின்ற பிள்ளை
முரட்டுத் துவக்கோடு 'சென்றி'யிலே நின்று
முழிக்கின்றான் இன்று இவனா என்பிள்ளை!

விதம்விதமாய் சமைத்து விருப்பு சுவையறிந்து
வேலைக்குக் கொடுத்தாலும் ' இது என்ன
இதம் இல்லை வேண்டாம்
எனக்கு' என்று கூறி
எடுத்தெறிந் தெழுகின்ற என்பிள்ளை.
பதம்பாகம் இல்லாது பசிக்கே உணவென்று
படையலாய் அவித்த எதையேனும்
நிதம் உண்கின்றானாம்
நிம்மதியாம் அவனுக்கு
நினைக்கின்றேன் இன்று,
இவனா என்பிள்ளை!

நாய் குரைக்க ஓடிவந்து நடுங்கிப் பதறியவன்
நாலுபேர் முன்நிற்க துணிவில்லாக் கோழை
தாய்க்கும் எனக்கும் நடுவினிலே துயிலுவதே
தனக்குச் சுகம் என்று எண்ணியவன் இரவில்
பாய் நனைப்பான், எழப்பயந்து
படுப்பான் எழுப்பா?
பட்டாசு வெடிக்கே பலகாதம் ஓடுபவன்
தாய்நாடு காக்கும்
தானையிலே முன்னணியில்
திகழ்கின்றான் இன்று இவனா என்பிள்ளை?

இப்படியாய் மற்றவர்கள்
இகழ்ந்துரைக்கும் குணங்களுடன்
இளப்பமாய் வாழ்ந்திட்ட
என்னுடைய பிள்ளை
தப்படிகள் இல்லாது தக்கபடிதான் வளர்த்த
தத்துவத்தை வியக்கின்றேன்
இவனா என்பிள்ளை!
எப்படித்தான் இவனுக்குள்
இதுவெல்லாம் தோன்றியதோ?
இவர்சார்ந்த இடமே காரணமாம் என்றார்?
அப்படியாய் புதுமாற்றம் அடைந்த அவனுக்கு
அப்பன் நானன்றோ? அவனே என்பிள்ளை!

*(நன்றி நூலகம்)*

*தங்கம் போல எரிய*

*எரிய மின்னுவோம்*

*வாழை போல வெட்ட*

*வெட்ட தழைப்போம்*

*சங்கு போல சுடச் சுட*

*வெளுப்போம்*

ஒரு பேப்பர்
ORU PAPER

# கரோ மாநகரில்
# எம்மவர் குரலும் ஒலிக்கட்டும்!



Gopal Gobiratnam

### Headstone North Ward

I am a married software architect with two children of school age. My children's experiences have reinforced my belief in maintaining the highest standards of education in Harrow.

I am a committed community worker, who has been involved in both the Tsunami and South-Asia Earthquake relief fund project committees. I am also involved in several community newspapers that promote cultural diversity and the idea that we are all equal, but different.

I am very supportive of Harrow Council's environmentally friendly initiatives, particularly the borough wide 'Clean and Green' project, which has been implemented by the Labour administration.



Kareema Marikar

### Rayners Lane Ward

I have lived in Harrow for fourteen years and I would dearly like to serve the community in which I live My daughter attends Bentley wood High School In Stanmore and my two sons both attend Pinner Park First and Middle School.

I enjoy getting involved in community work and I like to take part in Pinner Park's fundraising activities. Partially through my children, I am interested in education, but I am also particularly keen on looking at ways to reduce anti-social behaviour. I feel my understanding of both Tamil and Singhalese languages will help me reach out to some of the more under represented groups in our community. In my spare time, I like to go to the gym. I used to represent Sri Lanka in several athletics pursuits as well as hockey.



Krishna Suresh

### Rayners Lane Ward

I am Krishna Suresh, one of your Labour candidates for the Council election. I am married to Sasikala Suresh and have lived in Harrow for nearly 15 years. Having graduated in Accounting and IT, I currently work in the finance sector at Samsung Electronics. As a Governor of Vaughn First and Middle Schools I have met many parents including all the Tamil ones. I have learnt that although Harrow in general has an excellent educational system some of you have some concerns about the schools. I have also had the same views expressed to me by Tamil residents in Rayners Lane ward. I like to organize events for various charities, one of which is committed to helping deprived villages in Sri Lanka. I would appreciate your full support for all of us on 4th May.



Thaya Idaikkadar

### Roxeth Ward

I have been a councillor for the last four years. I have no doubt that we can get more benefits for Tamil people from the council by having more councillors. We were able to get Byron Hall free for the Tsunami charity event, which raised £23,000 only because one Tamilian was a councillor. Likewise we were able to argue and get another £25,000 which was donated by Harrow people for Tsunami victims and we procured grant funding to Tamil organisations.

Is it possible to have Tamil books in Harrow libraries, have the Tamil language officially recognised and have the right to have any document translated into Tamil, have permission to display Tamil Guardian in the libraries.Is it possible without Tamil representation in the council?



Sockalingam Karunalingam

### Headstone South Ward

I am an accountant and my wife is a local medical practitioner.

We have two children, aged thirteen and fifteen. I work for a community television station that is trying to achieve social cohesion by promoting cultural diversity in Harrow As a dedicated community worker, I have been the chairman of a local temple, as well as organising fundraising activities for orphans and people with disabilities.

As a keen sports enthusiast, I am dedicated to continuing the refurbishment of Harrow's parks and green spaces. If elected, I will also actively support alcohol free zones and other initiatives to counter anti-social behaviour in Harrow.



Sasikala Suresh

### Headstone South Ward

Lived in Harrow for nearly 15 years and would relish the opportunity to be a councillor for Headstone South, the ward in which she lives.

Works as a Senior Document Controller as team leader. Married for 14 years. Is heavily involved with her husband in community work organising cultural events, for example, raising £60,000 for the Tsunami Project Group and the Pakistan Earthquake Group.

In her spare time, she enjoys cooking, reading and watching films.

## If re-elected we want to achieve the following:

**A sports ground exclusively for Tamil men, women and children.**
**A centre for the Tamil senior citizens to meet and socialise.**
**More grant funding to schools to develop art & culture.**

Organise more lobbying to demonstrate the Tamil plight in North & East Sri Lanka.

Organise more trips by MP's and Councillors to see the situation in Sri Lanka for themselves. Continue to help the refugees through the MP's and speak out for them.

## ஒரு நேர்காணல்- எதிர்வினை

ஒரு பேப்பரின் 42 இதழில் இந்து பத்திரிகைக்கு கே. பாலசந்தர் அளித்த பேட்டியை விமர்சனம் செய்து ஒரு வெங்கணாந்தி எழுதியிருந்தது. (பெயர் இல்லாமல் வந்ததால்- வேறு எப்படிச் சொல்ல)

அந்த அரைகுறைக்கு நான் சொல்வதென்னவென்றால்...

கே.பாலசந்தர் தன் படங்களைப் பற்றி தன் அபிப்பிராயங்களைத்தான் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர வேறு எவரது படங்களைப் பற்றி அல்ல. ஒருவர் தன் படங்களில் தனக்குப் பிடித்ததைத் தெரிவு செய்வது தவறா?

அவர் தான் தெரிவுசெய்த தன் படங்கள் தனக்கு சிறந்ததென்றே கூறியிருக்கிறாரே அல்லாமல் உலகத் தரமானது என்றோ உலகிலுள்ள இயக்குனர்கள் படங்கள் எல்லாவற்றிலும் அவை சிறந்தது என்றோ கூறவில்லை. பேட்டியில் கேள்வியும் அப்படி அமையவில்லை. என்ன இருந்தாலும் அவர் ஒரு திரைப்பட இயக்குனர். இதுவரை 101 படங்கள் இயக்கியிருக்கிறார்.

அந்தப் படங்கள் எந்தத் தரத்தினதாயும் இருந்தாலும் இதில் தனது தெரிவை முன்வைப்பது

எந்த வகையில் தவறானது?

உமக்குப் பிடிக்காவிடில் அது உமது அபிப்பிராயம். உமக்குப் பிடிக்காதவை உலகத்தில் தரக்குறைவானவை என நினைப்பது உமது முட்டாள்தனம். அதுவும் ஒருவர் தனது படைப்பை எடைபோடுவதை விட வேறொருவர் அதைச் செய்ய உரித்துடையவரல்ல. இது உமக்கு விளங்குமோ ஞானசூனியம்?

அந்த நேர் காணலை விமர்சனஞ் செய்யும் அளவுக்கு உம்மை நீரே உசத்தியாக நினைத்துக் கொண்டிருக்கும் உம்மிடம் ஒரு விண்ணப்பம்? சரி கே.பாலசந்தர் படங்கள் எல்லாம் உமக்கு தரத்தில் குறைவானதாவே இருக்கட்டும் ? அப்படியெனில் உமக்கு உயர்வான தரமும் தெரிந்திருக்க வேண்டுமே! அப்படியாயின் உலகம் போற்ற நீர் ஒரு படத்தை எடுத்துக் காட்டும் பார்ப்போம். அதை கே.பாலசந்தர் பார்த்து அதிலிருந்து திருந்திக் கொள்ளட்டும்.!

யானையைப் பார்த்த குருடனின் கதையை எவரிடமிருந்தென்றாலும் அறிந்து கொள் பதரே!

*- இராகவன் தில்லைநாதன்*
*ரொரன்ரோ- கனடா*

### வெளியும் நீ

உடலுக்குள்ளேயே உடலைத் தின்று
வளரும் மனம் எனது பாடலின் தூரங்களையும்
அர்த்தங்களையும் அறிந்திருந்தது
ரகசியமாய் நான் வரைந்துவைத்திருந்த
நிர்வாண ஓவியங்களையெல்லாம்
அரித்துத் தின்றுபெருத்தது
காலை முதல் நிலவு திரும்பும் வரையிலான
என் பல்லறுக்கும் அசைவுகளில்
ஒடுங்கி உறங்கியது
உடலைச் கிளைகளாக்கிப் பறவைகள் வந்தமரச்
சிலிர்த்து நெளிந்தது
இன்னுமொரு பாடலுக்காய்த்
திரைகளை அவிழ்க்கும்போது
என் இதயத்திலிருந்து வெளியேறுவேன்
காளான்கள் பூக்கும் மழைஇரவில்
என் தந்தையின் விதைகள் வீழ்ந்த
நிலத்தைக் கண்டடைந்து
ஒரு மரமாய் முளைத்தெழுவேன்
அழுகத் தொடங்கியிருக்கும் என்னுடலில்
துடிதுடித்து அழும் அப்புழு

*குட்டி ரேவதி*

## இராகங்களை உணர முடியாமல் எழுதி வாசிக்கும் நிலையிலா நம்மவர் சங்கீத ஞானம் உள்ளது?

சமீபத்தில் பாடல் போட்டியொன்றிற்கு சென்றிருந்தேன். நடுவர்கள் காகிதத்தில் எந்த பாடல் என்ன இராகத்தை சேர்ந்தது என்று எழுதிக் கொண்டு வந்து மேடையில் வாசித்து காட்டிய பரிதாப நிலையைக் கண்டு சங்கீதத்தை முறையாகக் கற்கும் சின்னஞ் சிறார்கள் குப்பென்று சிரித்ததை கண்ணாரக் கண்டு சலிப்படைந்தேன்.

முப்பது பாடல்களின் ராகசாயலை கண்டுபிடிக்கும் பொறுப்பு இந்த நடுவர்களின் கடமையாக இருந்தது. ஆனால் அவர்கள் துண்டு காகிதத்தில் எழுதி வாசித்தது மட்டுமல்லாமல் இசைக்கருவிகள் கொண்டு இராகத்தை வாசிக்கவிட்டு, நாம் சற்று முன் கேட்ட அதே சினிமா பாடல்களையே நமக்கு பாடிக் காட்டிவிட்டு, அறிவிப்பாளர் கெஞ்சிக் கேட்ட கைதட்டலையும், வாங்கிக் கொண்டு போன அநியாயத்தை என்னவென்று சொல்வது?

மேலும் யார் போட்டியாளர் என்று தெரியாத அளவுக்கு துணை பாடகர்கள் பாடல்களை கத்திவிட்டு சென்றார்கள். ஒரே ஒரு நடுவரை (சங்கீத ஆசிரியர் என்று சொன்னார்கள், இருப்பினும் அவர் பாடும்போது ஏன் சுருதி விலகியது?) வைத்து முழு நிகழ்ச்சியையும் நடாத்தியிருந்தார்கள்.

பாடல்களின் இராக சாயலை கண்டுபிடிக்கும் இடத்தில் பாடல்களை முழுமையாக ஒலிபரப்பி, சரிபார்க்கும் இடத்திலும் விடையை சட்டென்று கூறாமல் பாடல்களை நீட்டி ஒலிக்கவிட்டது, எம்மவர் நேரத்தை வீணாக்குவதில் கெட்டிக்காரர்கள் என்பதை அடித்து சொல்வது போல இருந்தது.

எனக்கு முறையாக சங்கீதம் படிக்க அதிர்ஸ்டம் கிடைக்காவிட்டாலும், ரசிக்கக்கூடிய மனப்பக்குவம் தாராளமாக இருப்பதால்தான் இப்படியாக நிகழ்ச்சிகளுக்கு செல்கிறேன்.

அடுத்த முறை வைக்கும்போது இந்த ஒருங்கமைப்பாளர் கவனிக்கவேண்டிய சில விடயங்களை கூறுகிறேன்:

சங்கீதம் தெரிந்த 2 அல்லது 3 சங்கீத ஆசிரியர்களை நடுவராக்கவும்

துணை பாடகர்கள் பாடகிகள் சுமாராக பாடினாலே போதும்.

சங்கீத ஆசிரியர்களை வேற்று மொழி பேசுபவர் களிலிருந்து தெரிவுசெய்து அவர்களின் திறமைகளை பார்க்கலாம்.

நான் கொடுத்த காசுக்கு ஒரே ஆறுதல் பின்னணி இசை வழங்கிய இசைக்குழு. நன்றாக இசையமைத்தார்கள்.

இந்த குறைகளையெல்லாம் மேவி தனது திறமையால் பார்வையாளர்களை கவர்ந்த அறிவிப்பாளரையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

*ஒரு இசைப்பிரியை*
*- பானுமதி துரைசிங்கம்*

## புதியன புகுதல் நன்று, நன்றன்று தேவையற்றவற்றைப் புகுத்துதல்

கடந்த இரு நூற்றாண்டுகளாக நாம் தமிழைப் பேசும்போது ஆங்கிலச் சொற்களை பல காரணங்களால் உபயோகிக்க வேண்டிய சூழலில் இருந்தோம்.. முதல் காரணம் எமது ஆட்சிமுறையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக புதிய சொற்கள் புழக்கத்தக்கு வந்தன. ஆறிவியல் வளர்ச்சி காரணமாக மேலும் பல புதிய சொற்கள் உருவாகின. ஆட்சிமொழியாக இருந்த ஆங்கிலத்திலேயே அவற்றைச் சொல்லப் பழகினோம்.. ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாகக் கொள்ளும் சிலரால் அது ஊக்குவிக்கவும் பட்டது. இப்படியானவர்களுக்கு ஒப்புவமைக்கு நாம் ஆள் தேடியலையத் தேவையில்லை. தங்களுக்கு விரல் விட்டு எண்ணக் கூடிய ஆங்கிலச் சொற்களே தெரிந்திருந்தாலும் தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் புரியாது என்று சொல்லிப் பெருமைப்படும் எத்தனை பெற்றோரை இலண்டனில் சந்தித்து விட்டோம்.

ஆங்கிலச் சொற்கள் எம்மொழியில் புகுந்து கொள்வதையிட்டு நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் ஒரு கால கட்டத்தில் பல பெரியோர்கள் வட மொழிக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார்கள். ஏன்? அவர்கள் சொற்கள் எம்மொழியினுள் புகக் கூடாது என்பதற்காக அல்ல, அவர்கள் தமிழைப் பழித்தார்கள். தங்கள் மொழியிலிருந்ததான் தமிழ் உருவானது என்றார்கள், தங்கள் மொழி வசன நடைகளைப் பின்பற்றுவதன் மூலமே தமிழ் தரமுடைய மொழியாக மாறும் என்றார்கள், தமிழின் பழமையையும் அதன் தனித் தன்மையையும் ஒப்புக்கொள்ள மறுத்தார்கள். இதனால் சீற்றமடைந்து உயர்த்திய போர்க் கொடியே எத்தனையோ வடமொழிச் சொற்களை உள்ளே வரவிடாது தடுத்தது.

வட மொழிச் சொற்களைச் சீற்றத்துடன் எதிர்த்த காரணம் வேறு. இப்போ வேற்று மொழிச் சொற்களை, ஆங்கிலம் உட்பட எதிர்ப்பது, இல்லை தவிர்ப்பது வேறு. நாம் எம் மொழியின்பாற் கொண்டுள்ள பற்று, அது உலக அரங்கில் தரமுள்ள மொழியாக வளரவேண்டும், திருக்குறள்போல் காலத்தால் அழியாத செல்வங்களைப் பெருக்க வேண்டும் என்ற ஆசை, மன்னிக்கவும் விருப்பு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.. சொல் வளம் பெருகட்டும் எம் மொழித் தரம் உயரட்டும்.

*- மாசிலாமணி*

## கவுன்சில் தேர்தல்

லண்டனில் அடுத்த மாதம் நடைபெறும் கவுன்சில் தேர்தல்களில் தமிழர்கள் பலர் நிற்கிறார்களாம். இவர்கள் எங்கள் தமிழ் தேசிய விடயத்தில் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்று தெரியப்படுத்த வேண்டும். சும்மா தேர்தல் காலத்தில் பம்மாத்துக் காட்டிவிட்டு பின்னர் அவர் அவர் கட்சிகாரருக்கு பின்னால் போய் விடுவார்கள். எனக்கு தெரிந்த மட்டில் இங்கு தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் சில பேருக்கு ஈழத்திலை என்ன நடக்கிறதென்ற அக்கறை கிடையாது. இன்னும் சில பேர் சுனாமிக்கு காசு சேர்க்க மாட்டினம் ஆனால் தங்கட கட்சியளுக்கு காசு சேர்ப்பினம். இன்னும் சிலர் கோயில் உண்டியலிருந்தும் எடுத்துக் குடுக்கினம். இங்கு ஒரு கோவில் கட்சி பதாகைகளால் அலங்கரிக்கப்பட்டு உள்ளது. எந்த கட்சியிலை நின்றாலும் தேசியத் துக்கு ஆதரவானவர்களுக்குதான் நீங்கள் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

*- சிவகாம சுந்தரி*



Rajah Solicitors
Commissioners for Oaths
FOR FRIENDLY AND CONFIDENTIAL ADVICE

PARTNERS
Dr. Veera P.Ailoo LLB
Mr. Anand Vengadasalam LLB Hons
1st Floor, 502 High Road,
Wembley, Middlesex HA9 7BH
Tel:020 8903 5793
Fax:020 8900 0138

JCWI
ILPA

Conveyancing (Residential & Commercial)
Asylum & Immigration Matters
Highly Skilled Migration Programme
Work Permits
EEC Residence Permits
Liquor Licensing
Landlord & Tenancy Matters
Divorce Application
Civil Litigation

▲ குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களிலும் நாம் உங்களுக்கு சிறப்பாக உதவ முடியும்

▲ எங்கள் சட்டதரணிகளின் சேவையை உங்களுக்கு இலகுவாகவும் துரிதமாகவும் அமைத்து தந்து வழி நடத்த

# தமிழன் உயிர் மட்டும் மலிவு

ஜெனிவா பேச்சுக்களில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் ஒன்றும் இதுவரை அமுலாக்கப் படாமல் இருக்கையில் அடுத்த பேச்சினை எப்படி ஆரம்பிப்பது? அப்படி ஆரம்பித்தாலும் அங்கு எழும் கேள்விகளுக்கு யார் பதிலளிப்பது. சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன் வாயாலேயே அளித்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படாமலிருக்கிறது? ஒட்டுப்படைக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படாமையால் வஞ்சக கொலைகள் அதிகரித்திக் கொண்டிருக்கிறது, சிறிலங்கா இராணுவமும் தன் பங்கிற்கு தமிழ் மக்களை கொன்று குவித்து வருகின்றது. ஏன் என்று கேட்பதற்கு எந்த அரசும் முன்வராத நிலையில் தமிழர்கள் தாமே தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வியாபாரிகளும், வாகனச்சாரதிகளும், மாணவர்களும் ஏன் வயோதிபர்களும் கூட அண்மையில் ஒட்டுப்படைக் குழுக் களாலும், சிறிலங்கா இராணுவத்தாலும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இது மீண்டும் ஒரு யூலை இனப் படுகொலையை எமக்கு நினைவு படுத்துகின்றது. இராணுவம் பலியாக்கப்பட்டால் தமிழனும் பலியாக்கப்பட வேண்டும் என்ற இனவாத சிந்தனை இன்னும் சிங்கள இனவாதிகளை விட்டகலவில்லை.

இந்நிலையில் தனது நாற்பதாவது அகவை யில் சாதனை படைத்து நிற்கும் ஈழக்கவிஞர் புதுவையின் வரிகள் சில நினைவுக்கு வருகின்றது.

. . . மான் சுட்டால் அன்றி மரை சுட்டால்
ஏன் என்று கேட்க
இந்நாட்டில் சட்டமுண்டு
கொக்கு சுடுதல் குற்றம்
திக்கெட்டும் பயிரழித்துத் திரிகின்ற
யானையை சுட்டால்
அது குற்றம்.
சுதந்திர பூமியிலே
சட்டம் இதற்கெல்லாம் தண்டிக்கும் . . .
. . . மானிற்கு மாட்டிற்கு மரையோடு
மயிலிற்கு ஆனைக்குக் கூட
அனுதாபப்படும் நாட்டில்
தமிழன் உயிர் மட்டும் மலிவு . .
மிக மலிவு

*இராணுவம் பலியாக்கப்பட்டால் தமிழனும் பலியாக்கப்பட வேண்டும் என்ற இனவாத சிந்தனை இன்னும் சிங்கள இனவாதிகளை விட்டகலவில்லை*

இக்கவிதை 89ல் எழுதியது ஆனால் கதை பல வருடங்கள் கழிந்து இன்னும் தொடர்கிறது.

முஸ்லீம் படையணி ஒன்றை புதிதாக உருவாக்கி அதனை சிறிலங்கா இராணுவ படையணிகளின் ஒரு அங்கமாக இணைப் பதற்கான நடவடிக்கைகளும் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழர் தாயகத்தில் தமிழ் - முஸ்லீம் மக்களுக்குமி டையில் ஒற்றுமையும், தன்னம்பிக்கையும் வளர்ந்து வரும் கால கட்டத்தில் இந்த உறவு வளர்ச்சியை சிதைக்கும் நோக்கத்தில் தமிழ் - முஸ்லீம்களை மோத விட்டு அரசியல் இலாபம் தேட சிறீலங்கா அரசு விளைகின்றது.

அது மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் பிரிவினைவாதத் தைத் தூண்டும் வகையில் சில நயவஞ்சக செயல்களைச் செய்து வருகின்றது. இதை அறியாத புலம்பெயர்மக்கள் தமக்குள் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சர்வேதேசங்களுக்கு அழுத்தம் கொடுத்து புலிகளின் செயற்பாடுகளை புலம்பெயர் மண்ணில் முடக்கிவிடத் துடிக்கிறது சிறீலங்கா அரசு. அண்மையில் கனடாவில் அமுல்படுத்தப்பட்ட சட்டத்தை வெளியிடாத பத்திரிகைகள் எதுவுமில்லை. ஆனால் மாமனிதர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட போதும், வவுனியா வில் தமிழர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டபோதும் மௌனித்திருந்தன.

பேச்சுவார்த்தைக்காக ஜெனிவாவிற்கு புறப்பட தமது தரப்பு தயார் என அறிக்கை வெளியிட்ட அரச தரப்பு. புலிகளின் போக்கு வரத்தை தடுத்து நிறுத்தி, புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதை நிறுத்தி, பேச்சுவார்த்தை பின்தள்ளிப்போகும் போது அந்தப் பழியை புலிகளுக்கே சேர்த்துவிட முயற்சிக்கின்றது. பொறுமை காத்து வரும் புலிகளை சீண்டிப் பார்க்கிறது சிறிலங்கா அரசு.

விடுதலைப் புலிகளின் படைத் தளபதிகள் இருவரையும் மற்றும் போராளிகளையும் ஏற்றிச் செல்வதற்கு சாதாரண இலகு உலங்குவானூர்தி போதுமானதல்ல. மேலும் இப்பயணங்களின் போது பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவும் இப்பயண ஒழுங்கு களை கவனித்து உறுதிப்படுத்தவும் கண்காணிப்புக் குழு மற்றும் நோர்வே அனுசரணைத் தரப்பு பிதிநிதிகளும் அவர்களுடன் சேர்ந்து பயணஞ் செய்ய வேண்டியிருக்கும் ஆகையினால் இத்தகைய பெரிய பயண ஏற்பாடுகளுக்கு சிறிய ரக தனியார் ஹெலிகள் பயனற்றவை. இதைப் புரிந்த கொண்டும் சிங்கள அரசு தனியார் விமானத்தை ஒழுங்கு செய்வதாக சர்வேத ஊடகங்களுக்கு செய்தி தெரிவித்துள்ளமை ஒரு கண்கட்டுவித்தையே.

திம்புப் பேச்சுவார்த்தை நடக்கும்போது திருகோணமலையிலும் வவுனியாவிலும் ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்டிருந் தனர். இந்தப் படுகொலையுடன் திம்பு பேச்சைக் கைவிட்டு புலிகள் இயக்கம் போருக்குத் திரும்பியிருந்தது. அப்பாவித் தமிழ் மக்கள் அரச படைகளால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, புலிகள் பேச்வார்த்தை மேசையில் கதைத்தபடி காலங் கழிக்கமாட்டார்கள் என்பதை சிறீலங்கா அரசு மட்டுமன்றி மற்றய அரசுகளும் புரிந்து கொள்ள வேண்டும்.


எல்லாவற்றிற்கும் மேலாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாயகத்தில் வாழும் உறவுகளைப் பாதுகாக்கவும், அவர்களின் உரிமையை வென்றெடுக்கவும் ஒருமித்து நின்று கைகொடுக்கும் காலம் இது. காலம் காலமாக ஏமாற்றப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு, பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு எமது தமிழினம் பட்ட துன்பங்கள் இனியும் தொடராம லிருக்கவும், எதுவித குறுக்கீடுகளின்றி எமது நிலத்திற்கு நாம் சென்றுவரவும் எமக்குரிய உரிமையை நாம் வென்றெடுக்கவும் வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் நாம் நிற்கின்றோம்.

பிரித்தானிய நாட்டின் மகாராணி தனது 80 அகவையை ஹப்பிபேர்த்தே சொல்லி சுதந்திரமாக கொண்டாடும் இத்தினத்தில் தமிழர்களை காப்பாற்றுங்கள் என்று நாமும் கத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

நாங்கள் சிரித்தபடி நடந்து திரிவதற்கும்
தூங்கி மகிழ்வதற்கும் சுதந்திரங்கள்
வேண்டும் காண்
எங்கள் சிறுகுழந்தை எழுந்து நடப்பதற்கு
இங்கெதுவும் தடைகள் இருப்பதையே
வெறுக்கின்றோம்
நடந்த சிறு குழந்தை நாளை
இந்த மண்ணில்
அடங்கி கிடப்பதெனில் அதைப்
பொறுக்கமாட்டோம் காண்
இந்நாட்டில் எங்களுக்கு இடம்வேண்டும்
சுதந்திரமாய் தும்ம இரும
ஒரு தடையும் கூடாது

- *கபிலன்*

# மரண அறிவித்தல்



**திரு. தம்பாப்பிள்ளை செல்வரத்தினம்**
(முருகையா)

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் பெருந்தெருக்கள் திணைக்களம்)

தாயின் மடியில்
11 - 02 -1943

இறைவன் அடியில்
14 - 04 - 2006

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வசிப்பிடமாகவும் தற்போது இலண்டனில் வசித்தவருமாகிய திரு. தம்பாப்பிள்ளை செல்வரத்தினம் அவர்கள் 14.04.2006 வெள்ளிக்கிழமை இலண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான தம்பாப்பிள்ளை தங்கம்மாவின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும் காலம் சென்றவர்களான குட்டித்தம்பி இராசம்மாவின் பாசமிகு மருமகனும் மங்களபூபதி (பேபி இளைப்பாறிய ஆசிரியை யூனியன் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும் நிருபன் (விஜி) சுஜி (துஷானி) றெஜி (சொரூபன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீஸ்கந்தநேசனின் பாசமிகு மாமனாரும் தனுஜனின் அன்புப் பாட்டனும் காலம் சென்றவர்களான முத்தையர் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேசம்மா துரைராஜா மற்றும் இராசமணி கனகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) பாலசிங்கம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இலண்டனில் வசிப்பவர்களான பத்மாவதி கணேசலிங்கம் மல்லிகாதேவி இந்திராணி கருணாகரன் சந்திரமலர் சந்திராதேவி கிருபாகரன் தேவகுஞ்சரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு (44 Consfield Avenue, New Malden, KT3 6HD) இல் நடைபெற்று பூதவுடல் பி.ப.12.30 மணிக்கு Putney Vale Crematorium (Stag Lane (off A3, near ASDA), London, SW15 3DZ) இல் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

*தகவல்:*

*நிரூபன் 07830 266 393*

*சிறீ 07976 839 343*

மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் - 8

களவொழுக்கத்தில ஈடுபடுற இரண்டு இளசுகளச் சேர்த்து வைக்கிறத்தில உண்டாகிற பிரச்சனையளப் பற்றிச் சொல்லவேணும் பாருங்கோ. ஊரக் கூட்டிக் கலியாணம் செய்யிறத்துக்கான செலவு - குறிப்பாக் கூறை தாலி நகைநட்டு, உடுபிடவையெண்டு மாப்பிள்ளை பெண்பிள்ளை தாய் தகப்பன் கூடப்பிறந்ததுகள் சுற்றத்துக்கெல்லாம் கணக்கு வழக்கில்லாமப் போயிரும். 'ஒரு வீட்டக் கட்டிப்பார் ஒரு கலியாணத்தைச் செய்து பார்' எண்டு சும்மாவா சொல்லியிரிக்காங்க. ஆனா இதுகளோட இன்னமொண்டுமிரிக்குது. கலியாணம் முடிக்கிற பிள்ளையளிட தாய் தகப்பன்மார் உறவக்குள்ள பகையச் சம்பாதிக்கிறதுதான் பெரிய பிரச்சினை.

உதாரணமாக் கலியாணம் நாலுபேருக்கும் தெரிஞ்ச விவகாரமாப்போனா மாப்பிள்ளையிர தகப்பனிட்ட வந்து 'என்ன மச்சான் என்னட்டையும் ஒரு புள்ள இரிக்கிறத மறந்துபோயிற்றா போல' எண்டு ஆரம்பிச்சு, தண்ணியில அடிச்சுப் போட்டுப் பொம்பிள வீட்டுக் கடப்படியில போய் நிண்டு 'மாப்பிளகொள்ளித் தேவடியாள் வேசையள் என்ர புள்ளைக்கெண்டிருந்த மருமகனப் புடிச்சிற்றாளுகள்' எண்டு கொம்பத் தொடங்குற அளவுக்கு ஆரையாவது கொண்டுபோய் விட்டுப்போடும். அதால மாப்பிள்ளையிர தகப்பன் இந்தப் பிரச்சினையத் தன்னில பழிவராமலும் செலவும் கனக்கையாப் புடிக்காமலும் முடிச்சு வைக்கப் பார்ப்பார்.

கரிநாளில்லாத ஒரு நல்ல நாளா கொஞ்சம் மயண்ட பட்ட இரவில மாப்பிள்ளையிர தகப்பன் கொஞ்சம் தண்ணியப் போடுவார். பொடியனுக்கும் தெரியும் அப்பா தன்னில வந்து ஏறப்போறார் நாமளும் றெடியா இரிக்கோணுமெண்டு.

ஒரு பெட்டிக்குள்ள தன்ர உடுப்புகள ரெடியா எடுத்து வச்சிக்கொள்ளுவான். உள்ளதுக்க வள்ளிசா அல்லது விரலுக்குத் தக்க வீக்கமேண்ட மாதிரி ஒரு சீலை மாப்பொட்டி (பௌடர்) சவுக்காரம், கண்ணாடி, சீப்பு ஏலுமெண்டா சின்னதா ஒரு தாலி கோத்த தங்கமாலை எண்டு சில சாமானுகளும் அதுக்குள்ள இரிக்கும்.

தண்ணிப் போட்ட தகப்பன் ஒரு கேட்டிக் கம்பை எடுப்பார் கொம்பத் தொடங்குவார். கொம்புறது எண்டா சத்தம் போட்டு ஆருக்காவது ஏசுறதக் குறிக்கும் பாருங்கோ. 'கீழ் கன்றுகள் இரிக்கக்குள்ள பொறுப்பில்லாத நாயள். இவன் என்னத்துக்கு இஞ்ச இனியம் இரிக்கோணும் வெளிக்கிடச் சொல்லு டீ அவன' எண்டு பொடியன்ர தாயில பாய்வார் இனிப் புள்ளையள் எல்லாம் தகப்பன்ர கையக் காலைப் புடிச்சித் தொங்கி ஓலம் வைக்கும். பொடியனுக்கும் கோபம் வரும். 'சரி நான் போறன் பின்ன' எண்டு பொட்டியத் தூக்கிற்று வெளிக்கிட்டுருவான். எங்க? மாப்பிள்ளை ஊர்வலத்துக்குத்தான்! விசயம் விளங்காத கீழ்கன்றுகள் (சகோதரங்கள்) தமையனப் போக விடாமத் தடுக்கும். தகப்பன் நிண்டு 'உடுங்க டீ அவன அந்த நாய் எங்கெண்டாலும் போகட்டும்' எண்டு கேட்டியச் சுழட்டுவார். தாயும் சகோதரங்களும் கேற்ற டியில கண்ணீர் மல்க நிற்க, மாப்பிள்ளை பெட்டியோடு நடந்தோ அல்லது ஆராவது நண்பர்களோட சைக்கிளிலயோ போக, தகப்பன் பொட்டையிர வீட்டு கேற்றடிவரை கேட்டிக் கம்போட விரசுவார்(துரத்துவார்).

'போற இடத்த போடா இனி என்ர வீட்டு வாசல்படி மிதிக்கப் பொடா நாயே? என்ற தகப்பனின் வேத சுலோகங் களோடு மாப்பிள்ளை ஊர்வலம் இனிதே நிறை வடையும்.

காதலியின் வீட்டு வளவினுள் தனியாகவோ அல்லது ஓரிருநண்பர்களுடனோ பிரவேசிக்கும் மாப்பிள்ளையைச் சிம்பிளாக வரவேற்கச் சில முன்னேற்பாடுகள் அங்கே செய்யப்பட்டிருக்கும். பொதுவாக மாப்பிள்ளை வீட்டினுட் பிரவேசிப்பதில்லை. வாசலிலேயே இருந்து விடுவார். 'எனக்கு இனிப்போக இடமில்லை நான் இஞ்சதான் இரிக்கப் போறன்' என்று கூறுவார் அல்லது கூட வந்தவர் மூலமாகத் தெரிவிப்பார்.

இது அரைக்கரைவாசி பொய்மையும் மெய்மையும் கலந்த ஒரு நாடகம் பாருங்கோ. மணமக்களிட பெற்றாருக்கு எப்பிடியாவது இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணவேணுமெண்டதால உண்டாகிற கவலை, கோவம் அவசரம், ஏழ்மை அதே நேரத்தில காலங்காலமா இருந்து வாற இந்த வகையான மணவினைப் பண்பாடு எல்லாஞ் சேர்ந்துதான் இந்த நாடகத்தை நடத்தி வைக்குது. சரி நான் மிச்சத்தச் சொல்லுறன்.

பெண்ணிட தகப்பன் தாய் உற்றார் சிலபேர் உடனடியாக என்ன செய்யிறதெண்டு தவிப்பாங்க. உடனே மாப்பிள்ள வீட்டுக்கு ஓடுவாங்க. உடனடிச் சமாதானம் ஏற்படும் அல்லது தங்கள் தரப்பை விட்டுக் கொடுக்காமல் 'எங்களுக்குத் தெரியாது நீங்க என்னண்டான்னச் செய்யுங்க' எண்ட பதில் வரும். பொதுவாக மாப்பிள்ளைத் தரப்பாக்கள் உடனடிச் சமாதானத்துக்கு வருவதில்லை. ஆனாலும் அவர்களின் ஆசீர்வாதம் ஒரு சிறிதாவது இரிக்கும். கொஞ்சக்காலம் போன பிறகுதான் எல்லாம் சமாதானத்துக்கு வரும்.

மாப்பிள்ளைத் தரப்பார் இல்லாமலேயே பெண் தரப்பாக்கள் உள்ளூர் தோம்பதோரை (றிஜிஸ்தார், விவாகப் பதிவாளர்) அல்லது விதானையைக் கூட்டி வந்து கலியாணப் பதிவச் செய்து முடிப்பாங்க. கையெழுத்து வைக்கத்தான் மாப்பிள்ளை வீட்டிற்குள் வருவார்.

அதுக்குப் பிறகு பிள்ளையள் அதுகள்ற வேலையச் செய்யத் தொடங்கிருங்கள் பாருங்கோ. அடுத்த வருசம் கண்ணகையம்மன் குளுத்திக்கு கைக்குழந்தையோட வருங்கள்.

வீடுபுகுதல் எண்டு சொல்லுற ஒரு வகையான பழங் காலத்தைய மணவினைதான் பாருங்கோ இது. பெருஞ் செலவுல எடுப்பெடுத்துச் செய்யிற கலியாணங்களுக்குப் பதிலாக மட்டக்களப்புல கிராமப் புறங்களில ஏழைக் குடியானவர்களிட்ட இந்த சிம்பிளான திருமணம் காலங்காலமாக நடந்து வந்திரிக்குது.

காதல் களவொழுக்கம் போன்ற அகத்திணைப் பாரம்பரியங்களில இருந்து வளர்ச்சியடைஞ்ச இந்த மணவினை முறை சில வேளையளில கொஞ்சம் அபத்த மான வடிவயும் எடுக்கப் பாக்கிறதுண்டு பாருங்கோ. அகத்திணையில குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எண்டிற அன்பின் ஐந்திணை ஒழுக்கத்துக்கும் புறம்பாக இரிக்கிற ஒருதலைக் காதல் எண்டிற கைக்கிளை, பொருந்தாக்காதல் எண்டிற பெருந்திணை உணர்வுகளால உந்தப்பட்ட சிலபேர் அதாவது ஆண்கள்:

'காமஞ்சாலா இளமையோள் வயின் ஏமஞ்சாலா இடும்பை எய்தி...' எண்டு தொல்காப்பியச் சூத்திரத் தில இரிக்கிற மாதிரி - அதாவது காதல், காம உணர்ச்சி களேயில்லாத இளம் புள்ளையொண்டிற்ற கொஞ்சம் தன்ர சண்டித்தனத்தக் காட்டி வீடுபூர வெளிக்கிட்டுக் கடைசியா ஊராக்களால விளக்குமாத்தடி வாங்கிற்றுத் தப்புனோம் புழைச்சோம் எண்டு ஓடுற நிகழ்ச்சிகளும் சில வேளையில நடக்கும் பாருங்கோ. ஆண்டாண்டு காலமாக மட்டக்களப்புத் தமிழர்ர பண்பாட்டோட இணைஞ்சிருந்த மணவினை நிகழ்ச்சிகளில முந்திச் சொன்ன மாதிரி பொய்யும் வழுவம் தோன்றுனதால ஏற்பட்ட கோளாறு பாருங்கோ இது.

நம்மட தமிழ்ச் சினிமாவுல வில்லன் விரசிக் கொண்டுபோய் வச்சித் தாலியக் கட்டுவான். கடைசியில புள்ள அவன்தான் கண்கண்ட தெய்வமெண்டு குத்துப் பட்டுச் சாகும். அந்தச் சேட்டை இஞ்ச சரிவராது.

- தொடரும்.

# தமிழின் பழமையைப் பறைசாற்ற மேலும் ஒரு ஆதாரம்



மெசப்பொட்டேமியாவின் சுமெரிய நாகரிகமே உலகின் பழமை மிக்க நாகரிகமாகக் கருதப்படுகிறது. உலக நாகரிகத்தின் தொட்டில் என்று அழைக்கப்படுவதும் யூபிரடிஸ் ரைகிறிஸ் நதிகளுக்கிடையில் 6,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்ததுமான இந்த நாகரிகத்தைவிட பழமையான நாகரிகங்கள் உலகில் இருந்தன என்று நிரூபிக்கக் கடலுக்கடியிலிருந்து ஆதாரம் கிடைக்கும் என்று அண்மைக்காலம் வரை எவரும் எதிர்பார்க்கவில்லை.

10 ஆண்டுகளின் முன் அரபிக் கடலின் அடியில் கம்பே என்று அழைக்கப்படும் நகரம் கண்டபிடிக்கப்பட்டது. இது குஜராத் மாநிலத்தில் உள்ளது. இங்கு வாழ்ந்த மக்களின் நாகரிகம் சம்பந்தமாக கூடுதல் தகவல் இப்போது கிடைக்கப்பெற்று சுமெரிய நாகரிகத்தை விட இது பழமைவாய்ந்தது என்பதற்கு ஆதாரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நாகரிகத்தின் குறிப்பிடக்கூடிய ஒரு அம்சம் இது சிந்து வெளி நாகரிகத்திற்கு அண்மையில் அமைந்திருப்பது. மற்றையது மகாபாரதம் என்னும் இதிகாசத்தில் கூறப்படும் கண்ணனின் ஊரான துவாரகாவுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுவது.

முக்கிய சம்பவத்துக்கு வருவோம். பூம்புகார் என்பது எமக்கு அறிமுகமான பெயர். இது சென்னையிலிருந்து 250 மைல் தொலைவில் தெற்குப் பக்கமாக உள்ள சிறு நகரம். இதற்கு வடக்குப் பக்கமாக முறையே சீர்காழியையும் சிதம்பரத்தையும் கிட்டிய இடங்களாகச் சொல்லலாம். தெற்குப்பக்கமாக முறையே காரைக்கால், நாகபட்டினம், வேளாங்கண்ணி ஆகிய இடங் களைச் சொல்லலாம். இத் துறையிலிருந்து 1மைல் தொலைவில் 20 அடி ஆழத்திற்கு கீழே சுமார் 10 சதுர மைல் பரப்பளவு கொண்ட ஒருநகரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் இன்னும் சரியாக நிச்சயிக்கப்படாவிட்டாலும் ஆய்வில் பங்குகொண்ட பிரித்தானியாவின் பிரபல கடற் தொல்பொருள் ஆய்வாளரான Graham Hancock இது மிகவும் பழமைவாய்ந்தாகக் கருதும் சுமெரிய நாகரிகத்தை விடப் பழமை வாய்ந்த தென்றும் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பனிக்கட்டி உருகி கதைகளில் வரும் ஊழிக்கால வெள்ளம்போல் 400 அடிவரை நீர் உயர்ந்து இந்நகரை அழித்திருக்கலாமென்றும் கருதுகிறார். பிரித்தானிய Durhan சர்வகலாசாலையின் புவியியல் நிபுணரான Glenne Milne னும் Hancock கருத்துடன் ஒத்துப் போவதுடன் காணப்படும் கட்டட வேலைப்பாட்டைப் பொறுத்த மட்டில் ஹரப்பான் நாகரிகத்தைவிட ஒருபடி மேலானது என்றும் கூறுகிறார். இந்திய தேசிய சமுத்திரவியல் நிறுவனத்தின் கண்டுபிடிப்புக்களும் Hancock கின் கூற்றை உறுதிப்படுத்துகின்றன. இந்திய அரசின் பிரதான நீரியல் ஆய்வாளரான மு சு சிறினிவாசன் கிடைக்கும் பொருட்களை வைத்து நாகரிகத்தின் காலத்தை நிர்ணயிக்க தாங்கள் மேலும் ஆய்வுகள் மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளார்.

கம்பேரிய, பூம்புகார் நாகரிகங்களின் காலம் நிச்சயிக்கப்படும் பட்சத்தில் ஆய்வாளர்கள் கால வரிசைப்படுத்தல் சிக்கலுக்குள் குழம்பத்தான் போகிறார் கள். இவ்விரு நாகரிகங்களின் காலம் உறுதிப்படுத்தப்பட்டபின் சுமெரிய நாகரிகம் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டாலும் நாம் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

- மாசிலாமணி

**We undertake all aspects of building and maintenance work**

Plumbing and heating, Wiring and rewiring
Flooring: Laminate Flooring, Tiling, Carpenting
Plastering, Painting and Wall Papers
Extension and Conversion:
(Conservatories, additional bathroom, front porch etc.,)
Roofing, UPVC double glazed doors and windows
Kitchen and bathroom fittings
Garden: Boundary Wall, Garden Fencing
Block Paving, Crazy Paving
Driveways, Patios, Garden Sheds etc.,

**NO CALL OUT CHARGES. FREE ESTIMATES**

**All builiding works are finished to a very high standard**
**For a free no obligation quote**

**SAI CONSTRUCTIONS**
**Building Contractors**

எல்லாவித கட்டிட வேலைகளுக்கும் அழையுங்கள் இந்திரன்
Call Indran on **07951 103 675**

# KIDS

## Why do we have the Easter egg?

A typical question that leaves many people confused and puzzled.

Well before that I need to tell you the whole Easter story.

Well, Jesus told many parables (stories with morals in them) to his followers and his disciples (his friends), and many Roman priests thought he was disgracing God about talking about how he was The Son of God. Even though he performed many miracles like when he fed 5000 people with only 2 loaves of bread and 5 fish ,or when he shouted "SEE" to a blind man and he could see or when he touched ill people sick of lepers and they were cured.

The Roman priests plotted to kill him. They finally found a good source: bribing. They bribed Judas one of Jesus' disciples and said they'd give him 50 silver coins to know where he was. Judas betrayed Jesus and told the Roman soldiers where they could locate Jesus. Jesus knew he was going to be crucified (put up on the cross to die) , so on the hill at midnight he questioned God for why he was going to make him suffer a painful death. God said it was the best for the people and Jesus accepted it.

In his Last Supper, (his last ever meal) he shared out bread and red wine resembling his body and blood. He then made a statement, "When the cockerel crows tomorrow 3 times for the morning , you would all have denied knowing me 3 times". The disciples rubbished the bizarre claim but it was true. They were scared of being put up on the cross with Jesus (but had they been on the cross with him they would be in heaven.) So when the Roman soldiers asked them 3 times if they knew Jesus, they said no. Then the Roman Emperor, Pontius Pilot had to decide whether to crucify Jesus or a thief who was arrested. Pilot knew if he said crucify the thief an angry mob would kill him ,same consequences would happen if he said crucify Jesus so he cleverly asked the crowd. They all shouted "SPARE THE THIEF KILL JESUS" and that was what happened ( It is said the crowd wanted Jesus to die because they were mostly Romans.) But The Roman soldiers made him suffer painfully. They made him carry a heavy cross for 40 days and The Romans knew people wanted Jesus to be King even though he heavily denied any intention of being King, the Romans did not believe that and teased him by giving him a crown of rose thorns. Then finally he went on the cross and died, and when he died his blood was turned into rain and fell on the sick people so they were cured.

BUT THERE'S MORE!!!

The disciples walked away in dismay and said to themselves "That's it, end of an era" but they were wrong, Jesus went in disguise as an old man and hosted two disciples to supper. He left them to go but when the two disciples went they realised the old man was Jesus in disguise. And so on one Sunday he appeared and told the disciples to carry on his work. And so they did.

Now more to the point

Why do we have Easter Eggs?

Ok, now think, imagine bear with me. When Jesus died Christians started New Life. Now remember what I said New Life keep that in your head.

Well in an Egg it looks dead on the outside like nothing's happening but inside new life is beginning like a chicken is hatching , new life. Get it!


So basically Easter Eggs resemble new life. So Easter Eggs are the symbol for Easter. So when you eat an Easter egg even if it is a little Crème Egg or a massive Mars Delight Easter Egg think about it!


***By Cheran Gobiratnam (Age: 10)***

*If you're wondering I am not a Christian at all*

*I just learned it at school!*

## Spot the Difference




**Answers.**

1. the margarine, 2. the one peace of the broken egg, shell, 3. self raising, 4. the milk, 5. woman's hair, 6. shirt button, 7. box next to the milk bottle, 8. person on the flour bag, 9. bits in the bowl, 10. lady's mouth, 11. bowl pattern, 12. lady's eyes, 13. spots on the lady's face

## Jokes - By Tharu (Age 10), Enfield

What is your favourite type of present?
***Another present!***

How does Moby Dick celebrate his birthday?
***He has a whale of a party!***

"When's your birthday?"
***"July 23."***
"What year?"
***"Every year!"***

What did the birthday balloon say to the pin?
***"Hi, Buster."***

Knock, knock.
***Who's there?***
Ben.
***Ben who?***
Ben over and get your birthday bumps!

Why did you hit your birthday cake with a hammer?
***Because you said it was pound cake!***

What did one candle say to the other?
***"Don't birthdays burn you up?"***

Why couldn't prehistoric man send birthday cards?
***The stamps kept falling off the rocks!***

Why did Davy Crockett always wear a coonskin cap?
***It was a birthday present from his wife!***

Where do you find a birthday present for a cat?
***In a cat-alogue!***

What is a witch with poison ivy called?
***An itchy witchy !***

What's a cold, evil candle called?
***The wicked wick of the north !***

What is evil, ugly and black and goes round and round?
***A witch in a revolving door !***

What does a witch get if she is a poor traveller?
***Broom sick !***

Doctor, Doctor my baby is the image of his father
***Never mind just so long as he's healthy!***

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Birunthan Sivapalan*** (7 Yrs.) from Hamilton.

Last week's runners up -


***Arunjah Krishnarajah*** (Age 11) *from Bromley*

***Gayathri Sivaram*** *from Toronto*

***Nirojah Nesakumar*** (Age 8) *from Ladywell*

***Anentha Ravikulan*** (Age 8) *from Wimbledon*

## Tamil Musical Instruments



VEENA is a stringed instrument. It consists of a large round body hollowed out of a block of wood. The stem of the instrument is also made of wood. The bridge is placed on the flat top of the body of the veena and the instrument's neck is attached to the stem. It is usually shaped and carved like the head of the dragon or a swan.

The veena has seven strings. There are four main strings that pass over the frets and are attached to the pegs at the neck. The other strings are used as side strings for rhythmic accompaniment. These strings pass over an arched bridge made of brass. These lie flat over the top of the body of the veena and are secured to the main bridge.

***- By Tharshia Ravindrakumaran (Age 10)***

## Tongue Twister

***Hi Kids,***

Here's this weeks tongue twister for you all to do.

I can't even do it!!!! Good luck.......

**A big bug bit the little beetle but the little beetle bit the big bug back.....(FASTER!!!)**

**(Even faster!!!)**

***- Tharshia R***

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | E | S | A | R | I | S | O | H | I |
| P | Q | Y | Z | C | U | T | L | E | T |
| A | L | M | U | R | U | K | U | A | I |
| H | A | B | I | V | L | M | A | D | P |
| O | D | E | O | A | E | N | I | L | M |
| D | D | A | P | D | O | D | E | L | J |
| A | U | E | U | A | A | R | S | M | R |
| D | V | F | T | I | N | G | E | Q | Y |
| Z | A | I | U | W | S | O | H | I | B |
| N | J | E | U | O | P | C | X | T | U |

**Hidden Words:**

**Subject: Tamil Munchees**

VADAI, MURUKU, CUTLET, KESARI, PAHODA, LADDU

***Submitted by: Tharshia.R from Enfield.***

# Martial Arts



**What is Martial Arts?**

Martial arts, also known as fighting systems, are bodies of codified practices or traditions of training for unarmed and armed combat, usually without the use of guns and other modern weapons. People study martial arts for various reasons including fitness, self-cultivation (meditation), mental/character development, and self-defence.

**What are the Benefits?**

- It is a modern world now and many things happen. In Europe 72% of people have been attacked for a Hi-tec equipment, for example: Mobile phones, Laptops, Walkmans, Microphones, Portable game consoles etc. The Government say they are doing their best to get those attackers in jail, but most of them are still out in cities and towns. To avoid these attacks Martial Arts comes in handy. You can use Martial Arts for self Defence!
- Most people in this World are unhealthy by eating too much junk food or eating necessary food but not exercising. Martial Arts will keep you healthy if you are committed to it. Also you will have a longer life.
- Martial will increase your flexibility.
- People who have high blood pressure, it is best for you to try Martial Arts because it will reduce it in a big amount.
- One of the main important to rule is to be disciplined and to pay respect to your Master Instructors and senior members of the club or Academy. It will help in future to be a great person who disciplined and respectful.
- Meditation is one part of Martial Arts. It keeps your mind and body relaxed as possible. Relaxed from all the problems you have in life.
- Many people are scared of at least one thing in their lives but to overcome that Martial Arts could gain confidence for you. It will help throughout your life.

**Lists of different types of famous Martial Arts:**

- **Ju Jitsu:** Ju Jitsu is a great Martial Arts for flexibility. Every type Martial Arts involves flexibility but Ju Jitsu involves a big amount of flexibility. Ju Jitsu does not use strength against strength, it uses the opponents strength and force of attack as a weapon against him, thus enabling a stronger or bigger attacker to be subdued.
- **Judo:** Judo is based on the ancient Japanese martial art called Ju Jitsu. Professor Kano opened the Kodokan Dojo in Tokyo, Japan in the year 1882 and started to train students in Nippon-Den-Kodokan-Judo. Judo means 'Gentle Way'. This involves attacking and defensive techniques and adapting strength.
- **Karate:** Karate is the most growing Martial Arts in the world. People tend to choose Karate than any other Martial Arts because it is often used in films and people find that Martial Art attractive. Karate was originated in Japan. Karate is a Japanese word meaning 'empty hand'. It is a Martial Art involves un-armed self defence blocks, striking techniques through kicks and punches and shouts for different stances.
- **Tae Kwon Do:** Tae Kwon Do is the world's most widely practice martial art. Tae Kwon Do is a Korean fighting art that looks very similar to Japanese karate. It is an Olympic sport, an artistic discipline, a system of self-defence, and a way of life. Above Blue belt means you are a senior member, Black belts means your master of this Martial Art and then you can go beyond the black belt getting Dans.

There are many other Martial Arts in this world. For information about different types of Martial Arts, Go to: http://www.usgyms.net/martial arts types.htm

*Kids!*

I know you like playing Football, Basketball, Cricket, Playstion 2, PSP, Xbox etc. Read the Benefits paragraph it will tell what you will gain out of Martial Arts! Choose the right type Martial Art that suit you!

*- By Tharanian Ravi*

# Book

## Unfortunate Events, The Bad Beginning




This book I just finished reading three days ago. My brother loves the author Lemony snicket who wrote this book. My brother finished reading the whole series of the unfortunate events. This story is written in very good English and I liked it. The thing that I liked about this book and the author is each time the author used a hard word in the story and knows some children might not know the meaning of it, he explains the word in the story. This story is basically about three orphans, well now they are orphans but before they had parents and had a good time until they receive a news saying that there house has burnt down and there parents are dead. So they go to live with an uncle they never even heard about. That uncle was Count Olaf. Count Olaf was a bad man and tries to marry one of the orphans for the money their parents left for them in the bank.

# Game

## Pro Evolution Soccer5




This game I just played recently around my cousin's house. I was a fifa fan but after playing this game I have switched to be a Pro Evo fan. I just love the graphics but biggest of all is that it is really realistic and is done with real concentration. This game is done really real by e.g. You can't score from far away or defenders can't do much skills as strikers, each player has its own ability like in real life. I just want to play the game again so I am waiting for the chance. As I said if I advice you to buy a game with the budget you got it will be this game. It is just amazing how the people who created this game actually spent time for putting each player its own ability like in real life. It is just amazing.

# Movie

## Aathi




This film I watched about five and a half weeks ago. This film was acted by Vijay and Trisha. I did like the story of the film but not may be the clothes Trisha was wearing. The story is basically a happy family. Oh yeah I forgot to say there is a really nice song in the film which shows a family with such a happy life. I just like that song. This film is about a lady and a man who are cousins, and they were living together in a big house. Then one day there house was destroyed by rowdies and then only three people survived. An uncle, Trisha and Vijay. Then when they were grown up they didn't know they were cousins but they knew that they had a lot of stuffs in common, but then eventually they get to know they are cousins when the uncle tells them while dying.

*By: Rishiyan Ravindrakumaran(12)*

**CHILD MINDER WANTED**

To look after an 14 month child.
Fulltime 36 hours a week

வீட்டில் தங்கியிருக்க விரும்புகிறவர்களும் 40 மணித்தியாலம்
வேலை செய்யவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்

Harrow Area:
Please Call: **Thaya**

Preference:
Asian Babysitter

**CHICKEN SHOP LEASE FOR SALE IN KENT**

▲ Excellent Location ▲ No Competition
▲ Large Shop
Please Call for Details:
Edward: **020 8550 5202, 07869 118 619**

**கிங்ஸ்டனில் CostCutter விற்பனைக்கு**

14 வருட குத்தகை வருட வாடகை £11,625
கிழமைக்கு £6000 வியாபாரம்
உடனடி விற்பனைக்கு **07940 576 008**

**RR METAL WORK**

* Railings
* Staircases
* Gates
* Window Grills
* Fire Exits

Call Kumar
**020 8648 8207**
**07753 200 261**

***MINI CAB DRIVERS WANTED WITH OR WITHOUT PCO***

*London South West Area*
*Company Cars availble*
*Minimum 3 years UK or EEC*
PCO Licence needed
*Contact:*
*Kumar* **020 8390 3030**



ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £18 மட்டுமே!

**SUBSCRIPTION FORM**

Name: ______________________

Address : ______________________
______________________
______________________

Postcode: ______________________

Telephone: ______________________

Email: ______________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £18 க்கு
"Jasmine Studio Ltd." ன் பெயரில் காசோலையினையும்,
Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham,
Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# ஊஞ்சல் ஆடிய நாட்கள்

**கே. எஸ். பாலச்சந்திரன்**

*( ஒரு பேப்பருக்காக )*

ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் சில கார்ட்டூன்களில், வெளிநாட்டுப் பெண்கள் எலிகளுக்குப் பயந்து கதிரைகளில் ஏறி நின்று கொண்டு - "YEEK" என்று கத்துவதாக போடுவார்கள்.

ஆனால் இவர்களே வெகு உயரத்திற்கு ஏறியும், பாய்ந்து கீழே வந்தும். வெகுவேகமாக வந்து சரிந்தும், நிமிர்ந்தும் கதி கலங்கவைக்கும் Roller Coaster களில் ஏறி எவ்வாறு பயணஞ்செய்கிறார்கள் என்று நான் நினைப்பதுண்டு. இந்த வேளைகளில் எல்லோருமே கூட்டாக கத்தி ஒலியெழுப்புவதே, பயத்தை மறைப்பதற்காகத்தான் என்று பிறகுதான் தெரிய வந்தது.

இதன் தொடர்ச்சியாக என் இளமைக்கால நினைவுகள் வந்தன. எங்கள் ஊரில் இளைஞர்களும், இளம் பெண்களும் சற்றுத் துணிவாகவே ஒருவரோடொருவர் பேசிக் குதூகலிக்கும் அரிதான சந்தர்ப்பங்களில் ஒன்றான ஊஞ்சல் ஆட்டம்தான் அந்த நினைவுகளில் முக்கியமானது.

> *ஊஞ்சல் என்றவுடன் வீட்டின் பின்வளவுக்குள் நிற்கும் பூவரசு மரத்திலோ, வேப்பமரத்தின் கொப்பிலோ கயிறு கட்டி இருந்து ஆடுவதல்ல*

சிவராத்திரி நாளன்று இரவு முழுக்க நித்திரை முழிக்க வேண்டுமென்பதற்காக, வீடியோ படம் போடும் காலத்திற்கு முன்னதாக கோயில்களில் பிரசங்கங்கள் நடத்துவார்கள் அல்லது அயலில் நாடகம் போடுவார்கள்.

இவைகளுக்கும் முன்னதாக எங்களுக்கு தெரிந்தது, ஊஞ்சல் கட்டி ஆடுவதுதான். ஊஞ்சல் என்றவுடன் வீட்டின் பின்வளவுக்குள் நிற்கும் பூவரசு மரத்திலோ, வேப்பமரத்தின் கொப்பிலோ கயிறு கட்டி இருந்து ஆடுவதல்ல.

எங்கள் கோயிலின் தெற்கு வீதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக உயர்ந்த பனைகள் நிற்கும். அவற்றுள் ஒரு நேர்கோட்டில் போதிய இடைவெளியுடன் நிற்கும் இரண்டு பனைகளில் முக்கால் பங்களவு உயரத்தில் வைத்து, பெலமான பனைத் துண்டங்களை குறுக்கே கட்டுவார்கள். அதாவது இரண்டு பனைகளையும் இணைக்கிற மாதிரி. கட்டு என்றால் அந்தமாதிரி கட்டு. இரவு முழுக்க அந்த ஊஞ்சலில் ஏறி ஆடப் போகின்றவர்களை தாங்கக்கூடிய கட்டு.

குறுக்கு மரத்தில் சாக்கால் சுற்றி (கயிறு தேயாமல் இருப்பதற்காக) அதன்மேலாக தேர்வடக் கயறு போட்டு, கீழே தொங்கும் அதன் இரண்டு முனைகளையும் இணைக்கிற மாதிரி பலமான பலகைத்துண்டை வைத்து கட்டி விடுவார்கள். சாதாரணமாக நாலு பேர் அருகருகே இருக்கக் கூடிய நீளமான பலகை. கயற்றுக்கு வெளியே பலகையின் இரண்டு முனைகளும் துருத்திக்கொண்டு நிற்கும். ஊஞ்சல் ஆடுபவர்கள் உல்லாசமாக பலகையில் அமர்ந்திருக்க, ஊஞ்சலை உதைத்து மேலே கொண்டு போகின்றவர்கள் இந்த முனைகளில்தான் நிற்பார்கள்.

இருப்பவர்கள் பெண்களாகவும், உதைப்பவர்கள் (உழக்குபவர்கள்) ஆண்களாகவும் இருக்கப் போக கேலிப் பேச்சுகளுக்கும், கிளுகிளுச் சிரிப்புகளுக்கும் சொல்லவா வேண்டும். மேலே போகும் வேளையில் அவர்கள் என்ன கதைத்துக் கொள்கிறார்கள் என்பது கீழே நிற்கும் பெண்களைப் பெற்றவர்களுக்க தெரியவா போகின்றது. அப்படித்தான் ஏதோ வித்தியாசமாகக் கதைக்கிறார்கள் என்று தெரிந்து - 'இனிப் போதும்.. இறங்கு' என்ற மாதிரி சொல்லி சைகை காட்டினாலும், விளங்காதவர்கள் போல அந்தப் பெண்கள் தொடர்ந்து சிரிப்பார்கள். பாட்டில் திளைப்பார்கள்.

ஆமாம்... ஊஞ்சல் மேல் எழும்பத் தொடங்கியவுடன் இருப்பவர்களை பாடச் சொல்வார்கள். கோஷ்டி கானந்தான். உயரம் அதிகரிக்க பயத்தினால் பாட்டுக்கள் சுருதி பேதம் அடைவதுமுண்டு. அமைதியான அக்கால இரவுகளில் அந்தப் பாடல்கள் சற்றுத் தள்ளிக் கூடத் தெளிவாகக் கேட்கும்.


எங்களைப் போன்ற ஒல்லிப் பயில்வான்களுக்கு, ஊஞ்சல் உழக்குகின்ற சந்தர்ப்பம் கிடைப்பது மிக அரிது. பெரிய அண்ணாமார் தங்களுக்கு பிடித்தவர்களை வைத்து உழக்கி (சற்று அபஸ்வரம் தட்டுகிறதா...) மகிழக்கிடைத்த ஒரெயொரு சந்தர்ப்பத்தை இழக்க விரும்பாதவர்களாய் 'அவரும்..அவற்றை பேத்தை வண்டியும்.. உழக்கப் போறாராம்.. மேலையிருந்து குத்தண (செங்குத்தாக) விழப் போறியே' என்ற விரட்டுவார்கள்.

நாங்களும் கழுகுகள் மாதிரி காத்திருந்து, ஆடியவர்கள் ஓய்வெடுக்கப்போன ஒரு இடைவெளியில், ஊஞ்சலில் ஒருவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் ஏறி விட்டோம். நானும் என்னைப் போன்ற நெத்தலிப் பயில்வான் ஒருத்தனும், சாரத்தையே தார்ப்பாச்சிக் கட்டிக்கொண்டு, வெறும் மேனியுடன் உழக்குவதற்கு றெடியானோம். ஆனால் எங்களை நம்பி ஏறி ஆடுவதற்குத்தான் யாரும் றெடியில்லை.

கோயில் முன் பக்கத்தில், பெட்றோமாக்ஸ் வெளிச்சத்தில் வட்டமாக நிலத்தில் இருந்துகொண்டு,

'நுள்ளுப்பிராண்டு கிள்ளுப்பிராண்டு

கொக்கா தந்தது என்ன பூ'



என்று விளையாடிக் கொண்டிருந்தவர்களை கூவி அழைத்தோம். அவர்களும் எங்களைப் போலவே யாராலும் கவனிக்கப்படாமல் இருந்தவர்கள் - இரட்டைப் பின்னல்கள் காற்றில் பறக்க ஓடி வந்து, நான் முந்தி, நீ முந்தி என்று பாய்ந்து, ஊஞ்சலில் ஏறிக்கொண்டார்கள். ஆறேழு பேர் நெருக்கி உட்கார்ந்து கொண்டு, 'அண்ணை.. உதையுங்கோவன்' என்று சொல்லியாகியும் விட்டது.

ஒரு சிக்கல். ஊஞ்சல் வேகம் பெறுவதற்கு உதவியாக யாராவது, நிலத்தில் நின்றவாறே ஒருமுறையாவது உந்தித் தள்ளித் தொடக்கி விடவேண்டும். சுற்றிப் பார்த்த பொழுது, மண்ணுக்குள் தலை புதைத்து, படுத்திருந்த அண்ணை ஒருத்தர் கண்ணில் பட்டார். பகல் முழுவதும் அவர் அருந்திய பானங்களின் கலவை அவரை வீடு வரை போக விடாமல், கோயில் வீதியிலேயே விழுந்து படுக்கச் செய்து விட்டது, எங்களுக்கும் தெரியும். இருந்தாலும் அவரை விட்டால் யாருமில்லை என்ற நிலை. கூப்பிட்டோம்.

மண் நிறைந்த தலையை சிலுப்பிக்கொண்டு, தள்ளாடி வந்து -

'என்னடா பொடியள்..' அவர்தான் கேட்டார். விடயத்தைப் பவ்வியமாகச் சொன்னோம்.

'உது சிம்பிள்... எது.. உது சிம்பிள்...' என்று சொல்லிக் கொண்டே, ஊஞ்சல் பலகையின் ஒரு நுனியில் பிடித்து, உந்தித்தள்ளிக் கொண்டு போய் விட்டார். ஒரு முறையல்ல. இரண்டு, மூன்று முறை அவர் அப்படி உந்தித்தள்ளவும், எங்கள் ஊஞ்சல் தானாகவே மேலே போய் வரத் தொடங்கி விட்டது.

> *பாரமற்ற ஊஞ்சல் சுழன்று, கயிறு 'டெலிபோன் வயரை' போல முறுக்கிக் கொண்டது.*

'இது தான் தாயம்' என்பதாக, நானும் எனது நண்பரும், இருந்து, இருந்து எழும்பி உழக்க, ஊஞ்சல் கோயில் மடத்திற்கு மேலால் எட்டி, உள் வீதி தெரியும் அளவிற்கு போய் வந்தது. இருந்தவர்களிடம் இருந்து ஒரு சத்தம் இல்லை. பேயைக் கண்டவர்கள் போல இருந்தார்கள். திடீரென்று ஞாபகம் வந்தவர்களைப் போல அலறத் தொடங்கினார்கள். ஒரே கோரஸ்.

'அண்ணை இறங்கப்போறன்..' என்று ஒரேயடியாக பாட, நாங்கள் எப்படி நிறுத்துவது என்ற தெரியாமல் தடுமாற. ஒவ்வொரு முறையும் ஊஞ்சல் கீழே வரும் நேரமாகப் பார்த்து, ஒவ்வொரு இரட்டைப் பின்னல் 'தொப்'பென்று கீழே குதித்தது. நான் குதித்த நேரத்திலும் என் சகபாடி உழக்குவதை நிறுத்தவில்லை. நாரியை வில்லாக வளைத்து குனிந்து நிமிர்ந்தார். பாரமற்ற ஊஞ்சல் சுழன்று, கயிறு 'டெலிபோன் வயரை' போல முறுக்கிக் கொண்டது.

கீழே கிடந்தவாறே, நான் நிமிர்ந்து பார்க்க, அவரும், ஊஞ்சல் பலகையும் ஒன்றாக கீழே வருவது தெரிந்தது. கண்களை மூடிக் கொண்டேன்.




**SRINIVASAN SOLICITORS**

169, Tooting High Street, London, SW17 0SY
Tel: **020 8672 1800** Fax: **020 8672 0105**



**K. Chelvanayagam L.L.B.**
Solicitor
(Former Principal of Nathan & Chelva)

Please contact him for all your matters in particular Commercial & Residential Conveyances, Family Proceedings, Civil Litigation & Immigration

He always works for clients' interest & takes more care in dealing with his clients' matters

Mob: **07956 466 708**
email: chelva@hotmail.co.uk

**PERMA**
**INTERNATIONAL SHIPPING LTD**

உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்.

**தொடர்புகளுக்கு: சிவம்**
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: **020 8646 5222**, Mobile: **07939 550397**

**Nathan & Co**

**Properties**
**Crime**
**Immigration**
**&**
**Matrimonial**

**with best compliments**

Tel: **020 8542 1805**

106 Kingston Road
Wimbeldon,
London SW19 1LX

# SCANWELL FREIGHT SERVICES LTD

AIR FREIGHT CLEARANCE / SEA FREIGHT CLEARANCE




மரக்கறி வகைகள், மீன் வகைகள், பழங்கள், உடுப்புகள் மற்றும் எல்லா விதப்பொருட்களும் இறக்குமதி செய்பவர்களுக்கு Clearance செய்கின்றோம்

Customs Clearance
For any country
Including Sri Lanka, India
China, Thailand, America



**Storage** வசதிகளும்
**Delivery** வசதிகளும் உண்டு

Unit 3 Airlink Industrial Estate
Spitfireway (Off Southall Lane)
Heston, Middlesex TW5 9NR

Contact: Vaithi (வைத்தி)
Tel: 020 8569 1000 / Mob: 07956 337 520
Fax: 020 8561 1800 / Email: info@scanwell.co.uk



# தரமான மலிவான சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்கு Vx HOME ACCOUNT உடன் இணையுங்கள்

**For great International call rates switch to Vx Home Account and discover the benefits!**

பாருங்கோ!

to Sri Lanka only 6p from Sr only 5p

இன்றே இணைந்துகொள்ள அழையுங்கள்
**0800 989 0002 / 0207 952 0106** (24 Hrs)

| | | | |
|---|---|---|---|
| USA | Malaysia 2.5p | UAE 18p | Soudi Arabia 15p |
| | Kuwait 2.5p | Qatar 18p | Bahrain 15p |

| | | |
|---|---|---|
| Canada 2p | Europe 2.5p | Australi 2p |
| Mauritius 10p | Ghana 2p | Kenya 10p |

இஞ்ச பாருங்கோ, நான் இந்த
ரெலிபோன் காட்டோட பட்டபாடு போதும்.
என்ர மச்சாள் Vx Home அக்கவுண்ட் என்று சொல்லி
என்னை சேர்த்து விட்டா. அடி ஆத்தை நம்பமாட்டீர்
சுற்றியவுடன் அம்மா கொண்டாவிலிருந்து என்ன
என்று கேட்பா! அதுமட்டுமல்ல அவ கொழும்புக்கு
வந்தாலென்ன எனக்கு நினைச்ச நேரம் அடிப்பா
என்ர அக்கவுண்ட் இலிருந்து 5P போகும். என்ன
சோக்கான சேவை பாருங்கோ!

India only 6.5p
any time, any where


UK யில் Vx Home Account ஐ ஆரம்பித்து அதே Vx Home Account இனூடாக உங்கள் உறவுகள் இலங்கையிலிருந்து UK Land Line க்கு அழைக்க நிமிடத்திற்கு 5p மட்டுமே.

Vx Home Account இனை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் £5 பெறுமதியான தொலைபேசி அழைப்புகளை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.

£25 உடன் Vx Home Account ஆரம்பித்தால் £5 பெறுமதியான தொலைபேசி அழைப்புகள் இலவசம்.

Vx HOME
Add wings to your voice...

**Competitive rates for all countries** The above rates are based oncalls made from 0207 / 0845 access numbers and include VAT.



அடுத்ததாக எமது மக்களை சுனாமி தாக்கிய நேரத்தில் இவ் இளையோர் அமைப்பின் பணி மகத்தானது. அந்த தை மாத குளிரிலும் தங்கள் பாடசாலை வகுப்புகளையும் நிறுத்தி விட்டு வீதி வீதியாக வீடு விடாக ஒவ்வொரு நாட்டிலும் வெள்ளையினத்தவருக்கு அவரவர் மொழிகளில் எமது மக்களின் அவலத்தை எடுத்து சொன்ன அதே நேரம் சிறீ லங்கா என்கிற தேசம் வேறு எங்கள் தமிழர் தேசம் வேறு என்று அவர்களிற்கு புரிய வைத்து பாரிய அளவில் பண மற்றும் பொருளுதவிகளை பெற்று தாயகம் நோக்கி அனுப்பியிருந்தனர் அவர்களது அந்த பணியினை எந்தவொரு அமைப்பும் ஒரு பொது மேடையிலும் இவர்களை மனம் திறந்து பாராட்டவில்லையென்பது மட்டுமல்ல பல ஊடகங்கள் கூட இவர்களது பணியினை பற்றி கண்டு கொள்ளவில்லையென்பதும் கவலையான விடயமே. இதுவரை நடந்தது நடந்தவையாக இருக்கட்டும் இனிமேலாவது மற்றைய அமைப்புகளின் பொறுப்புக்கள் மற்றும் பதவிகளில் இருக்கின்ற எம்மவர்கள் எதிர்கால எமது தேசத்தை கட்டி எழுப்ப போகின்ற எமது இளைய சமுதாயத்திற்கு வழி விட்டு அவர்களிற்கு வழிகாட்டியாக இருந்தலே போதும்.

இல்லை வழிவிட்டு ஒதுங்கியிருங்கள் அதுவே போதும். இறுதியாக இளையோருக்கும் ஒரு வேண்டுகோள்.

உங்கள் செயற்பாடுகளால் உங்கள் பெற் றோருக்கும் மற்றோருக்கும் உங்கள் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்பி இன்று எமது போராட்டத்தாலும் போராடியும் களைத்து போனதோர் சந்ததி அவர்களது சுமையின் மீதியை இன்று உங்கள் தோள்களில் சுமத்தியுள்ளது. அதை சோகமான சுமையாக நினைக்காமல், சுகமான சுமையாக்கி எத்தனை தடைக்கற்கள் வந்தாலும் அதனை படிக்கற்களாக மாற்றி அதன்மீது நடந்து இனியொரு விதி செய்வீர்.

*- சாத்திரி*


**Kerala Ayurvedic Health Clinic**



Free Consultation | Authentic and effective Kerala ayurvedic treatments

Qualified and registered Ayurvedic Physicians | Affordable Prices

**Call 020 8902 1104 or 020 8902 1707**

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும்,

மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்



**Massage therapies by experienced and highly skilled therapists**
**Treatment is designed around your individual health needs**
**Only natural herbal medicines are used**
**No side effects at all**
**Wide range of therapies**

**Happy & Prosperous Tamil New Year**


- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholesterol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditons

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis

Male & Female therapists availble

We Can also speak in Hindi, Tamil and Malayalam

**Open 7 days a week**





**1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA**
**5 mins walk from Sudbury town - Piccadilly line www.kahc.co.uk**

Gift Vouchers available **£35, £20, £15 & £10**

# வந்தார்கள் - பெற்றார்கள் - அனாதையானார்கள்

ரசிகவ் ஞானியார்
*( துபாயிலிருந்து )*



80 வயதான ஒரு தந்தை அதிகம் படித்த தனது 40 வயதான மகனுடன் வீட்டில் அமர்ந்திருக்கின்றார். அப்பொழுது ஜன்னலின் அருகே ஒரு காகம் பறந்து வந்து உட்காருகிறது.

அந்த தந்தை மகனிடம் கேட்கின்றார் 'என்ன இது'

'அது காகம் ப்பா' - மகன் பதிலளித்தான்

கொஞ்ச நேரம் கழித்து அந்த தந்தை மறுபடியும் மகனிடம் கேட்கின்றார் 'என்ன இது?'

'அப்பா! நான் இப்பத்தான் சொன்னேன்.. அது காகம் என்று' - மகன் மறுபடியும் பதிலளித்தான்

பின் சிறிது நேரம் கழித்து 3வது தடவையாக அவர் மறுபடியும் மகனிடம் கேட்கின்றார்

'என்ன இது'

இந்த முறை மகன் எரிச்சலுற்று கடுமையான உச்சரிப்பில் சொல்லுகின்றான்

'இது காகம்பா..இது காகம்..'

கொஞ்ச நேரம் கழித்து 4 வது முறையாக தந்தை மகனிடம் கேட்கின்றார். 'என்ன இது'

மகன் இப்போது கோபமடைகின்றான்

'ஏம்பா இப்படி திரும்ப திரும்ப கேட்டு உயிரை எடுக்குறீங்க..எத்தனை தடவைதான் சொல்றது..அது காகம் என்று.. ஏன் உங்களுக்கு காது கேட்கலையா..' என்று தந்தையை நோக்கி கத்த ஆரம்பித்து விடுகின்றான்.

அதன்பிறகு அந்த தந்தை அமைதியாகி தனது அறைக்குள் மெதுவாகச் சென்றார். தனது பழைய கிழிந்து போன டைரி ஒன்றை எடுத்து வந்தார்.

அதில் ஒரு பக்கத்தை திருப்பி தனது மகனிடம் வாசிக்கச் சொன்னார்.

மகன் அந்த டைரியை வாசித்தான் :

இன்று என்னுடைய 3 வயது குழந்தை என்னுடன் சோபாவில் அமர்ந்திருந்தான். அப்பொழுது ஒரு காகம் வந்து ஜன்னல் அருகே உட்கார என்னுடைய மகன் ஆச்சர்யமாய்க் கேட்டான்

'அப்பா அப்பா இது என்னப்பா.. '

'அது வந்து மே..லே பறக்கிற பறவை..அது பேர் காகம்' என்று கூறினேன்

அவனுக்குப் புரியவில்லை மறுபடியும் கேட்டான். நானும் அதேமாதிரி விளக்கமளித்தேன்.

அவன் மறுபடியும் மறுபடியும் கேட்டுக் கொண்டே இருந்தான். கிட்டத்தட்ட 23 தடவையாவது கேட்டிருப்பான். நான் ஆச்சர்யப்பட்டுப் போனேன்.

எனக்கு அவன் ஒவ்வொரு முறை கேட்கும்போதும் அவனுடைய ஆர்வத்தை எண்ணி சந்தோஷப்பட்டும் அவன் அப்பாவியாய் கேட்பதை கண்டு மிகுந்த பாசத்துடனம் அவனைக் கட்டித் தழுவியபடி பதில் சொல்லிக்கொண்டே இருந்தேன்.

இந்த அனுபவம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. என் வாழ்க்கையில் இப்படிப்பட்ட சந்தோஷத்தை நான் அனுபவித்ததே இல்லை..

பாருங்களேன் இந்த மகன் தனது தந்தை 4 தடவை கேட்டவுடனையே கோபப்பட்டு எரிச்சலுற்று கத்துகின்றான்.

இது வெறும் கதையல்ல அன்றாடம் நமது அல்லது பக்கத்து வீடுகளில் நடைபெறுகின்ற சம்பவம்தான். இப்படிப்பட்ட நிலைமைதான் இன்று எல்லா இடங்களிலும். வயதானவர்களின் உணர்வுகளை மதிப்பதற்கு தவறி விடுகின்றனர். முதியோர் இல்லங்களின் வளர்ச்சிகள் மனிதர்கள் மனிதத் தன்மையை இழந்து வருவதற்கான அத்தாட்சிகள்.

முதியோர் இல்லங்களின்
முகவரிப் பட்டியலில்
உனது பெயரும்
ஒருநாள் வரக்கூடும்.

எனது ஊரில் வீடுகள் வரிசை வரிசையாக ஒன்றைச் சார்ந்து மற்றொன்று என்று கடைசி வரைக்கும் நீளும். ஒவ்வொரு வீட்டிலும் திண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கும். அந்தத் திண்ணைகள் கடைசி நாட்களில் வீட்டுத் தலைவனின் வருகைக்காகவே காத்திருப்பது போல காத்திருக்கும்.

அந்தத் திண்ணையின் மூலையில் அமர்ந்து கொண்டு வெத்தலை சாப்பிட்டுக்கொண்டும் ஒரு படுக்கையை விரித்துக் கொண்டும் தங்களுடைய வாழ்நாளைக் கழித்து வருவார்கள். தினமும் அவர்களுக்கு சாப்பாடு நேரத்திற்கு வந்து விடும். அவர்களுக்கு உணவு கொடுத்து காப்பாற்றுவார்கள். ஆனால் அவர்களின் உணர்வுகளைக் காப்பாற்ற தவறி விடுகிறார்கள். அவர்களுக்கு உரிய மரியாதைகள் கிடைக்காது.

அதே முதியோர் இல்லம்.
அன்று என் அப்பா!
இன்று நான் அப்பா!!

*— பிரதீப் குமார்*

பொருளீட்டும் பொறுப்பு தனக்கு வந்து விட்டது என்பதற்காக அதிகாரத் தோரணையில் அவர்களிடம் கருத்துக்கள் ஆலோசனைகள் கேட்பதையே விட்டு விடுகிறார்கள். ஒரு உணர்வுகளற்ற ஜடமாக்கி விடுகிறார்கள்.

வயதானவுடனையே பெற்றோர்களின் கருத்துக்களை அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடும் பழக்கம் நகரச் சூழ்நிலைகளில் கூட நிறைய குடும்பங்களில் வழக்கமான நடைமுறைகளாகி விட்டது.

எப்படி குழந்தைப் பருவத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வயதான பருவத்திற்கு நம்முடைய வளர்ச்சி இருக்கிறதோ அதுபோல வயதாக வயதாக குழந்தைத்தனமாக உணர்வுகள் அவர்களுக்கு வரத் தொடங்கி விடுகின்றது

***பொருளீட்டும் பொறுப்பு தனக்கு வந்து விட்டது என்பதற்காக அதிகாரத் தோரணையில் அவர்களிடம் கருத்துக்கள் ஆலோசனைகள் கேட்பதையே விட்டு விடுகிறார்கள்.***

தனக்கென்று எதுவுமே சேர்த்து வைக்காமல் குழந்தைகளுக்காக உழைத்து படிக்க வைத்து பின் தாங்கள் ஓய்வு நிலைக்கு வந்தவுடன் குழந்தைகளைச் சார்ந்து இருக்க வேண்டிய நிலைமையில் இருக்கும் பெற்றோர்கள் நிறைய வீடுகளில் அவமானப்படுத்தப்படுகிறார்கள்.

இதில் படித்த இளைஞர்களின் பங்கு அதிகமாக இருக்கின்றது என்பதற்கு, கிராமங்களை விடவும் நகரங்களில் இருக்கின்ற அதிகமான முதியோர் இல்லங்கள்தான் சான்று.

குழந்தைகள் ஒரு நிலைக்கு வரும்வரையிலும் எப்படி தனது பெற்றோர்களைச் சார்ந்து இருக்கிறார்களோ அதுபோல நாம் பெற்றோர்களுடைய உணர்வுகளை அவர்களுடைய மரியாதைகளை அவர்கள் சம்பாதிக்கும் காலத்தில் கொடுத்த மதிப்பைப் போல கடைசிக் காலம் வரையிலும் கொடுக்க வேண்டும். அதுதான் ஒவ்வொருவரும் தம் பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய அவசியமான கடமையாகும்.

வீட்டின் பெயரோ
அன்னை இல்லம்
அன்னை இருப்பதோ
முதியோர் இல்லம்

*— தமிழ்மாங்கனி*

சார்புகள் என்பது காலத்தின் கட்டாயம். வாழ்க்கையே ஒரு சீரான சுழற்சிகளில் தான் பணயப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே சார்ந்திருப்பது ஒன்றும் கேவலமான செயல்கள் அல்ல. பெற்றோர்களின் சார்புதான் ஒவ்வொரு குழந்தைகளின் எதிர்காலமாக இருக்கின்றது.

நீ நாளைய பெற்றோர் - உன் பெற்றோர் நேற்றைய குழந்தைகள் என்ற சார்புகளின் சுழற்சியைப் புரிந்து கொண்டு கருவிலும், தோளிலும் சுமந்தவர்களை தெருவிலும், திண்ணையிலும் விட்டு விடாதீர்கள் இளைஞர்களே!

தயவுசெய்து தங்களுடைய பெற்றோர்கள் வயதாகும் பொழுது அவர்களை சுமை என்று தனியே ஒதுக்கி வைத்துவிடாதீர்கள். அவர்களிடம் அன்பாக அமைதியாக வார்த்தைகளை கடினமாக உபயோகிக்காமல் பேசுங்கள்.

இன்று முதல் ஒரு உறுதி மொழி எடுத்துக் கொள்ளுங்கள்.

'என்னுடைய பெற்றோர்களை எப்போதும் நான் மகிழ்ச்சியாக வைத்திருப்பேன்.

நான் குழந்தையாக இருக்கும்போது என்னை அக்கறையோடு கவனித்துக் கொண்டதுபோல, சுயநலமில்லாத அன்பை என்மீது காட்டியது போல, நானும் மிகுந்த அக்கறையோடும் அவர்கள் மீது அதிகமான அன்பையும் காட்டுவேன்

அவர்கள் தங்களுடைய சோகங்களையும் துன்பங்களையும் நமக்குத் தெரியாமல் தங்களுக்குள்ளேயே மறைத்துக் கொண்டு, நம்மை கஷ்டம் தெரியாமல், வறுமை தெரியாமல், வளர்த்து படிக்க வைத்து எப்படி சமுதாயத்தில் நமக்கு ஒரு அந்தஸ்து கொடுத்தார்களோ அதுபோல அவர்களுக்கும் எந்த விதமான துன்பத்தையும் கொடுக்காமல் அவர்களை குழந்தையைப் போல பாதுகாப்பேன். '

'இறைவா! என்னுடைய பெற்றோர்கள் நான் குழந்தையாக இருக்கும்பொழுது எப்படி என்மீது பாசம் காட்டினார்களோ அதுபோல நீயும் அவர்களிடம் பாசம் காட்டு.

நான் என்னுடைய பெற்றோர்களுக்கு என்றும் எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் மனம் கோணாதபடி நடந்து கொள்ளும் பக்குவத்தைக் கொடுப்பாயாக'

நிச்சயமாய் சொல்கிறேனப்பா
உன்
வியர்வை மட்டும் இல்லாவிட்டால்
நான் இப்பொழுது
பாரீஸில் இருக்கமாட்டேன்
பண்டாரத்தில்தான். . .
ஒரே ஒரு வேண்டுகோள் அப்பா
வீடு. . .
நிலம். . .
பணம். . .
சொந்தம். . .
உலகக் காரணிகள் எவையும்
நம்மைப் பிரித்துவிடக்கூடாது
இறைவனுக்கு மட்டும் விதிவிலக்கு!

கிழக்கு லண்டன் வானலைகளில்..
13வது தடவையாக,
தினமும் நள்ளிரவு முதல் நண்பகல் வரை
தினமும் 13 மணி நேர — தமிழ் ஒலிபரப்பு
**சந்திரோதயம் FM 103.8**
வீட்டில் - வேலையில் - வாகனங்களில் - கைத்தொலைபேசிகளிலும்..
Studio: +44 208 586 9636
Fax: +44 208 471 1985
info@firstaudio.info / www.firstaudio.info

**அறிவிப்புத்துறையில் ஆர்வம் இருந்தும், சந்தர்ப்பம், அனுபவமின்றித் தவிக்கின்றீர்களா?**
**நீங்களும் அறிவிப்பாளராகலாம்!**
**இலவச பயிற்சியோடு, பகுதி நேரமாக வானொலித்துறையில் அனுபவம் பெற, தயக்கமின்றி அழையுங்கள்.**
**சூரியோதயம், சந்திரோதயம், மற்றும் லண்டன் தமிழ் வானொலிகளில், நீங்களும் இணைய வாய்ப்புண்டு.**
HotBird செய்மதியில், 11,012 H அலைவரிசையில்.
லண்டன் தமிழ் வானொலி ஊடாகவும்,
**www.firstaudio.info**
இணைய வானொலியிலும்.. கேட்டு மகிழுங்கள்..

# சீரியல் பிசாசுகளின் விபரீதப் போக்கு



நம் படுக்கையறைக்குள்ளேயே கலாசாரத்தை கொத்து போடும் அநியாயத்தை வேறு வழியில்லாமல் பார்த்துக் கொண்டிருக்கும் அவலம் சீரியல் தந்துவிட்டு இருக்கிறது! தரணி என்கிற பையன் காதலிப்பது பூஜாவை. கல்யாணம் செய்து கொள்வதோ கல்கியை. தரணியை பழி வாங்க பூஜா புறப்படுகிறாள். எப்படி? தரணியின் சொந்த சித்தப்பாவையே திருமணம் செய்து கொள்கிறாள். சரி, அத்தோடு இவர்கள் புரட்சி முடிந்துவிட்டதா என்றால், அதுதான் இல்லை. தரணியிடம் பூஜா சொல்வது... இப்பவும் எனக்கு குழந்தை பிறந்தால் அது உன் மூலமாகத்தான் பிறக்கணும். எப்படியிருக்கு கல்கி தொடரின் மூல முடிச்சு?

கணவருக்காக சீரியலில் இன்னும் விபரீதம்... இன்னும் அபத்தம்... உயிருக்கு உயிரான இரண்டு தோழிகள். நட்புக்காக செய்யும் எத்தனையோ வித தியாகங்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இங்கே ஒருத்தியின் கணவரை இன்னொருத்தி திருமணம் செய்து கொண்டு தோழிக்கே துரோகம் செய்ய நினைக்கிறாள்.

மனைவி சீரியலில் அரசு என்கிற அரசியல்வாதி ஒரு பெண்ணைக் காதலித்து, ஏமாற்றி அவள் தற்கொலை செய்து கொண்டதும், வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறான். அந்தப் பெண் தன்னம்பிக்கை உள்ளவளாம். போராடுகிற குணமுள்ளவளாம். நீ போடா டுபாக்கூர் என்று வேறொருவனுக்கு கழுத்தை நீட்டுகிறாள். அவளையும் விடாமல் தொடர்ந்து டார்ச்சர் தருகிறான் அரசு.

அப்பவும் ஒரு நடிகையை இரண்டாவது திருமணம் செய்து கொள்கிறான்.நடிகை அரசை சைக்கோதனமாக காதலிக்க, இவளை வச்சு பணம் சம்பாதிக்க முடியாது என்கிற ஆதங்கத்தில் அம்மாக்காரியோ இவர்களை பிரிக்க நினைக்கிறாள். அரசு ஆம்பிளையே இல்லை என்று அவள் புது கரடி விட, என் முதல் மனைவிக்கு பிறந்தது என் குழந்தை என்று அரசு வரிந்து கட்டிக்கொண்டு வருகிறான். உடனே நடிகை தன் கணவர் அரசுவின் முதன் மனைவியின் லேட்டஸ்ட் புருஷனிடம் படையெடுத்து இது என் அரசுவுக்கு பிறந்தது. எனக்கே சொந்தம் என்று கூச்சல் போட.. ஐயோ கடவுளே.. வெள்ளைக்காரன் கூட இவ்வளவு முற்போக்காக சிந்திப்பானா என்று கேட்க வேண்டும்! செல்வியில் இரண்டாவது கல்யாணத்திற்காகவே தாமரையை கோமாவில் தள்ளுகிறார்கள். தாமரையின் அப்பாவும், அம்மாவுமே செல்வியின் காலில் விழுந்து நீதான் என் மாப்பிள்ளை ஜி.ஜே.வின் இரண்டாவது மனைவியாக வேண்டும் என்று கதறுகிறார்கள்.

செல்வி ஒப்புக் கொண்டு மாலை மாற்றிக்கொண்டு ஜி.ஜே.யின் கருவை சுமக்க, இப்போது... தாமரை கோமாவிலிருந்து வழித்தெழ வேண்டாமா? இரண்டு பெண்டாட்டிகள் தவிக்க வேண்டாமா? அதே சீரியலில் பிரமாண்டமான முதுகுடன், வில்லத்தனம் செய்துகொண்டு பிரச்னைக்கு அலையும் ரஞ்சனி கேரக்டரை பாருங்கள். நல்ல புருஷனை உதாசீனம் செய்துவிட்டு, தவறான உறவில் தாய்மை அடைந்து விட்டு, அதையும் மறைத்து கணவனோடு உறவாடுகிறாள். இன்னும் மோசம். மாயா கேரக்டர். தன் மனதுக்குப் பிடித்தவனை திருமணத்திற்கு முன்பு ஹோட்டல் ரூமிற்கு அழைக்கும் அளவுக்கு பாரதி காணாத புரட்சிப் பெண்ணாகச் சித்திரிக்கப்படுகிறாள்.

கோலங்கள்? ஏகப்பட்ட தவறான உறவுகள்... அபி அவளது தங்கைகள் மற்றும் தம்பியும் ஆதித்யாவின் அப்பாவிற்குப் பிறந்தவர்கள். அவர் அபியின் அம்மாவை முதல் தாரமாக மணந்துவிட்டு. பிறகு அவர்களை அம்போ என விட்டுவிட்டு மும்பைக்கு ஓடி ஆதித்யாவின் அம்மா கல்பனாவை இரண்டாம் தாரமாக கட்டிக் கொண்டவராம்.

பாதை சீரியலில் மோகன் என்கிற பாத்திரம் வரிசையாக நான்கு பெண்களை ஏமாற்றுகிறது! இப்படி இவர்களது பண்பாட்டு கதைகளைச் சொல்லிக் கொண்டே போனால், ஒருநாள் போதாது. பெரும்பாலான டி.வி. சீரியல்களில் தாய்மை சிதைக்கப்படுகிறது. காதல் கொச்சைப்படுத்தப்படுகிறது. நட்பு கேவலப்படுத்தப்படுகிறது. இல்லற வாழ்க்கை அசிங்கப்படுத்தப்படுகிறது.

சினிமாவைத் தூக்கிச் சாப்பிடும் அளவிற்கு வன்முறை தலைவிரித்தாடுகிறது. வேடிக்கை, இவை எல்லாமே குடும்ப சீரியல்கள். பாம் வைப்பது எப்படி என்பதை நுணுக்கமாக அறிவியல்பூர்வமாக காட்டுகிறார்கள். ஆசிட் முட்டையால் அடித்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோமே தவிர, ஆசிடை முட்டையில் எப்படி செலுத்துகிறார்கள் என்று யாருக்காவது தெரியுமா? பிளேடு பக்கிரிகளைத் தவிர! செல்வியில் ரொம்ப நேர்த்தியாக அதைக் காட்டியதோடு, அதை எதில் மறைத்து எடுத்துவரவேண்டும் என்கிற அளவுக்கு தெளிவாக, பாடம் எடுத்தார்கள்.

மனைவி சீரியலில் தன் கணவர் அரசுவை உடனே பார்க்க வேண்டும் என்கிற வெறியில், சைக்கோதனமான நடிகை, பாத்ரூமிற்கு சென்று பொறுமையாக பிளேடால் கையைக் கீறிக்கொள்கிறாள். நம் உடம்பு சிலிர்க்கிறது. ரத்தம் குபு குபுவென்று கொட்ட, வாஷ்பேசின் முழுக்க ரத்தத் தண்ணீர்!

இப்படி தறிகெட்டு காட்டப்படும் வன்முறைக் காட்சிகளையும், முறைகேடான உறவுகளையும் பச்சையான வசனங்களையும் ஏதாவது ஒரு கட்டத்தில் கட்டுப்படுத்த வேண்டாமா? இதற்கெல்லாம் சென்சார் என்று ஒன்று வேண்டாமா? இரண்டு பெண்டாட்டி கதைகளும் போரடிக்கும்பட்சத்தில் புதுமை என்கிற பெயரில் அடுத்த விபரீதம் என்ன நடக்கப் போகிறது? சமூக அக்கறையுள்ள எத்தனையோ பெற்றோர்கள் இப்படி நிறைய கேள்விகளுடன்கவலையோடுபார்க்கிறார்கள். அவர்கள் ஆதங்கம் நியாயமானது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற தைரியம் கொடுக்கும் சீரியல்கள் பலரது, குறிப்பாக பெண்களது மனதை நிச்சயமாகப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் சீரியல் பெண்களோடு வாழ ஆரம்பித்துவிட்டார்கள். நமது கலாசாரத்தில் ஊறிப்போன விருந்தோம்பலுக்கும் தொலைக்காட்சித் தொடர்கள் வேட்டு வைத்துவிட்டன.

எத்தனையோ வருடங்களுக்குப்பிறகு வீட்டுக்கு வரும் விருந்தாளியும், சீரியல் நேரத்தில் வந்தால் அவர் வேண்டாத விருந்தாளியாக நெஞ்சு முழுக்க எரிச்சலுடன் வரவேற்கப்படுகிறார். அவ்வளவு ஏன், பல வீடுகளில் அலுவலகத்திலிருந்து தாமதமாக வரும் கணவன், மனைவியோடு மனம் விட்டு பேசிக்கொள்வதுகூட முடியாமல் போகிறது.

பல தாய்மார்களுக்கு குழந்தைகள் படிப்பைக் கவனிப்பதுகூட இரண்டாம் பட்சமாகி விடுகிறது. சீரியல் பிசாசுகளையும், அதனால் ஏற்பட்டுள்ள மதிமயக்கத்தைப் பற்றியும் சீரியஸாக ஆராய வேண்டிய நேரம் இது! இந்த விபரீதப் போக்கு சீக்கிரமாக தடுத்து நிறுத்தப்படவேண்டும்!

*- யாழ்*

WILSON

SALES
LETTINGS
MORTGAGES
INSURANCES
BUSINESS TRANSFERS



Call us for free valuation


Harrow
383 Northolt Road
South Harrow
HA2 8JD
Tel: 020 8426 7100
Fax: 020 8426 7500


Croydon
331 London Road
Croydon
CR0 3PA
Tel: 020 8689 6800
Fax: 020 8689 6900

Walthamstow
134 Forest Road
Walthamstow
London E17 6JQ
Tel: 020 8520 1889
Fax: 020 8503 6940

www.wilsonestate.co.uk Register online Updated daily

# கட்டை - சில குறிப்புகள்





**ஜொள்ளுப்பாண்டி**
*( ஜொள்ளுப்பேட்டையில் )*

பலவையான கட்டைகளைப்பற்றி ஆராய்வதே தன் வாழ்நாள்தொண்டு என கடமையாற்றும் ஜொள்ளுப்பாண்டி தனது ஆராய்ச்சியைப் பற்றி உங்களிடம் பகிர்ந்து கொண்டு ஆராய்ச்சியில் ஏற்பட்ட சில சந்தேகங்களைப் போக்கிக் கொள்வதே இந்த கட்டுரையில் நோக்கம் எனபதை தெளிவுபடக் கூறிக் கொள்கிறேன்.

கட்டைகள் பலவகைப்படும். கட்டைகள் பல வகையாக இருந்தாலும் அனைவராலும் அறியப்படும் கட்டைகளாவன

உருட்டுக் கட்டை
விறகுக்கட்டை
கர்லாக்கட்டை
திமிசுக்கட்டை





**உருட்டுக்கட்டை :**

இதில் உருட்டுக்கட்டை சினிமாவால் பிரபலப்படுத்தப் பட்டாலும் பரவலாக அரசியல்வாதிகளால் இதன் உபயோகங்கள் பல்வேறு கட்டங்களில் சோதிக்கப்பட்டு வெற்றிகரமாக இதன் பயன்பாடு நிருபிக்கப்பட்டுள்ளது. பொதுவாக மேலிருந்து கீழாக ஒரே அளவில் உருண்டு இருக்கும் திரண்டிருக்காது.

**விறகுக்கட்டை :**

பொதுவாக இவை அடுப்பெரிக்க பரவலாக இன்றும் கிராமப்புறங்களில் உபயோகப்படுதப் பட்டு வருகிறது. சில சமயங்களில் இது தகராறு செய்யும் கணவனையோ அல்லது நாய்களையோ விரட்ட மனைவியரால் இன்றும் பயன்படுத்தப்படும் உபயோமான வஸ்துவாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது! இவற்றுக்கென தனி அளவு கிடையாது.

**கர்லாக்கட்டை :**

பழைய எம்.ஜி.யார் படங்களில் பார்த்தால் அவர் தலைக்கு மேலே தூக்கி உடற்பயிற்சி செய்ய சுற்றிக்கொண்டிருப்பாரே அதுதான் இது.இப்போதைய மார்டன் ஜிம்முகளில் இவை அருகி விட்டாலும் இன்றும் சிலவற்றில் இவை தென்படுகின்றன. இவற்றின் கைப்பிடி பார்க்க சிறியதாக இருந்தாலும் வெய்ட் அதிகம். தம் பிடித்து தூக்கினால் தோள்களின் வலிமை கூடும்.

**திமிசுக்கட்டை :**

இவற்றைப் பற்றி ஏடுகளின் மூலமாக அறிந்திருந்தாலும் இதைப் பற்றிய முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை. படிக்கும் அன்பர்கள் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை அருள் கூர்ந்து எனக்களிக்க வேண்டுகிறேன்.

கட்டுரையைப் படித்துவிட்டுதேவையில்லாமல் நிஜ உருட்டுக் கட்டைகளை எடுத்துக் கொண்டு என்னை அடிக்க வரவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இங்கிருக்கும் படங்களுக்கும் கட்டுரைக்கும் துளிகூட சம்பந்தம் இல்லை என கூறிக் கொள்கிறேன். வழக்கம் போல் ஜாலியாக எடுத்துக்கோங்கோ !

# பேயும் நானும்

**வசந்தன்**
*( அவுஸ்திரேலியாவிலிருந்து )*

நேற்று (தமிழோடு பரிச்சயம் குறைந்த, நீண்டகாலம் வெளிநாட்டில் வாழும்) ஈழத்து நண்பரொருவரோடு கதைத்துக் கொண்டிருந்தபோது 'பேப் பம்பல்' என்று ஒருரிடத்திற் பாவித்து விட்டேன்.

அவர் பேயைக் கண்டது போல் முழித்தது தான் மிச்சம்.

அவருக்கு 'பேய்' என்ற சொல் வரும் முறையும் தெரியவில்லை பம்பல் என்ற சொல்லும் தெரியவில்லை.

அவருக்கு அதை விளக்கியபின் யோசித்துப் பார்த்தேன்.

'பேய்' என்பதை நாங்கள் சில இடங்களில் வேறு பொருளில் பாவிக்கிறோம். 'பம்பல்' பற்றிச் சொல்ல வேண்டிய தேவையில்லை யென்பதால் 'பேய்' பற்றி மட்டும் சிறிது கதைக்கலாம்.

ஈழத்தில் (ஆம் யாழ்ப்பாணத்தில் மட்டுன்று) பேச்சு வழக்கில்'பேய்'என்றசொல்லைவேறு வேறு பொருள் தரும் வண்ணம் நாலைந்து சந்தர்ப்பங்களில் பாவிக்கிறோம்.

முதலில் 'பெரிய', 'சிறந்த' என்ற பொருள்களில்.

'பே(ய்)ப் பம்பல்'-, சிறந்த / பெரிய நகைச்சுவை

'பே(ய்)ச் சந்தோசம்'-, மிகுந்த மகிழ்ச்சி.

'பே(ய்)க் காய்'-, ஒன்றில் சிறந்தவர், நிபுணத்துவமானவர் என்பதைக் குறிக்கும். இங்கே 'காய்' என்பது நபரையே குறிக்கும். ஆனால் தனித்துப் பொருள் தராது.

விடலைப் பருவத்தில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு துணையை கற்பனையாக ஒழுங்கு பண்ணி வைத்துக் கொள்வோம் (பெண்களும் இதைச் செய்தார்களா தெரியாது). அப்போது அத்துணையை 'காய்' கொண்டே குறிப்பிடுவது வழக்கம். 'சுரேசின்ர காய் இண்டைக்கு வரேல, உன்ர காயோட மாறன் சேட்டை விட்டவன், அவனின்ர காய் மூஞ்சைய நீட்டிக் கொண்டு போகுது, அவன் காய மாத்திப் போட்டானாம்' என்பது போன்ற கதைகள் நிறைய வரும்.

ஒருவரைச் சுட்டி 'ஆள் உதில பே(ய்)க்காய்' என்றால், அவர் குறிப்பிட்ட ஒன்றில் விண்ணனாக, வல்லவனாக இருப்பார். சின்ன வயசில ஒருத்தன் ஆரையாவது 'பேக்காய்' எண்டு சொன்னா, 'உனக்குத் தெரியுமோ? அவனொரு சீக்காய்' எண்டு எதிர்த்து நக்கலடிப்போம். (சீக்காய் - பனங்காயின் முற்றிய வடிவம்)

மேற்கண்டவற்றில் 'பேய்' என்பது பெரிய, சிறந்த என்ற பொருளில் பாவிக்கப்படுகிறது. பேய் என்பது கதைக்கும்போது தனியே 'பே' என்பது மட்டுமே ஒலிப்பதால் அடைப்புக் குறிக்குள் (ய்) கொடுத்துள்ளேன்.

பேச்சந்தோசம், பேப்பம்பல், பேக்காய்... போல.

உண்மையில் 'பேய்' என்பதற்கு வேறேதாவது பொருளிருக்கா? பிசாசு என்ற பொருள்தரும் பேயைத்தான் இதற்குப் பாவிக்கிறோமா? அல்லது சிறந்த, பெரிய, அருமையான என்ற பொருள் தரும் வேறேதாவது சொல்லிலிருந்துதான் இந்த 'பே' என்ற ஒலி வந்திருக்குமா? என்று யாராவது சொல்லுங்கள்.

இன்னொரு பொருளிலும் இந்தப் 'பேய்' வருகிறது.

'பே(ய்)ப் பட்டம் கட்டாதே'

'பே(ய்)க் காட்டாதே'

மேற்கண்டவற்றில் பேய் என்பது 'ஏமாற்றுதல், குழப்புதல் என்ற பொருளில் வருகிறது. பேக்காட்டுதல் என்றால் ஏமாற்றுதல்.

'என்னைப் பேயன் எண்டு நினைச்சியோ?'

'நானொரு பேயன் இஞ்ச குந்திக் கொண்டிருக்கிறன்.' என்பதில் 'பேயன் முட்டாளாகவோ விசரனாகவோ அர்த்தப்படும்.

இதற்கு ஏதாவது கதையுண்டா தெரியவில்லை. 'புலி வருது புலி வருது' கதைபோல யாராவது பேயைக் காட்டுவதாகச் சொல்லிச் சொல்லி ஏமாற்றிய மாதிரி ஏதாவது கதைகள் மக்களிடம் இருந்து, அதிலிருந்து இந்தப் 'பேய்' வந்திருக்குமா?

'உதுவொரு பேய்வேலை'

என்றால் முட்டாள்தனமான, புத்தியற்ற, நன்மை பயக்காத வேலை என்ற பொருளில் வரும்.

'நானொரு பேவேலை, பாத்திட்டன்' என்றாலும் முட்டாள்தனமான செய்லொன்றைச் செய்துவிட்டேன் என்ற கருத்தே.

அடுத்து பேய்க்கதை.

இதுவொன்றும் திகில் கதையன்று.

'பேக்கதை பறையாத'

'நான் இவ்வளவு சொல்லிறன், நீ பேக்கதை கதைச்சுக் கொண்டிருக்கிறாய்'

என்பன போன்ற, எதிராளியின் மீதான சினத்தைக் கொட்டும் வசனங்களில் பேய்க்கதை வருகிறது.

இங்கே 'பே(ய்)க்கதை' என்பது ஆத்திர மூட்டும், எரிச்சலைத் தரும், சினந்தரும் பேச்சு என்ற பொருளில வருகிறது.

இரண்டு வெவ்வேறான மனநிலையில் இந்தப் பேய் வருகிறது. முதலாவதில் மகிழ்ச்சி (பேச்சந்தோசம்). மற்றதில் ஆத்திரம் (பேக்கதை)

இதைவிட ஒருவனை/ஒருத்தியை 'பே(ய்)க் கிளாத்தி' (அவனொரு பேக்கிளாத்தி) என்று திட்டும் வழக்கமுண்டு.

நான் சொன்னவற்றை விடவும் மேலதிக 'பேய்'த்தனமான மொழியாளுகைள் இருந்தால் அறியத் தரவும்.

**Quotation / cover provided over the phone**
**No more proposal forms to complete**
**No more immediate payment**
**No more Direct Debit Mandate to complete**
**No more claim form to fill - All the details are taken over the phone.**
But Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover
Please ring us for a friendly service **020 8763 2221**
**P.SRINIVASAN** 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH
PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS
Fax: 020 8763 2220
E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

**Home Insurance**
Building and Contents Insurance including Let Properties
**Term Assurance / Critical Illness**
Level Term, Mortgage Assurance and Family Income Benefits
**Retailer, Shopkeepers & Liabilities**
All types of Shops Including Jewellery Shops, Self-Employed Business.
**Mortgages / Re-Mortgages -**
**Decision in Principle/Virtual offer over the phone**
All types of mortgages including Self-cert and buy-to-let.
All circumstances will be considered
**ARM Associates**
FSA Financial Services Authority
Authorised and Regulated by the Financial Services Authority

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1. Vadamarachchi Parents looking for their son 35 years 5'6" tall self-employed as an estate agent, a PR holder, awaiting citizenship, a suitable bride. Ref:747

2. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'11" உயரமுள்ள லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு லண்டனில் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 746

3. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'11" உயரமுள்ள UK இல் PR உடன் வசிக்கும் மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் உறவினர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 745

4.முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'2" உயரமுள்ள, பிரான்சில் வதிவிடவுரிமையுடன் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் கனடாவில் தேடுகின்றனர். Ref:744

5. மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5'6" உயரமுள்ள, கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகளை கனடாவில் வசிக்கும் உறவினர் தேடுகின்றனர். Ref: 743

6. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 6'2" உயரமுடைய, கனேடிய குடியுரிமையுள்ள படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 742

7. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'4" உயரமுள்ள, குவைத்தில் வேலை பார்க்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை அவரது சகோதரர்கள் தேடுகிறார்கள். கனடா விசா உள்ளவர்கள் விரும்பத்தக்கது. Ref: 741

8. Jaffna Parents living in Canada are looking for a suitable bride (in UK/ Canada) for their son, age 30, height 5'7" working for a business firm in UK on a work permit. Ref: 740

9.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 5'4" உயரமுள்ள, UK பிரஜாவுரிமையுள்ள BSc பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை UK யில் தேடுகிறார்கள். Ref: 739

10. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'7" உயரமுள்ள, 5 வருடங்களாக லண்டனில் Cashier ஆக பணிபுரியும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த UK/EU வதிவிடவுரிமையுள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 737

11. Sister living in UK, looking for her brother , 34 years, 5'6" height, BEng qualified working as a teacher a suitable Bride from UK/Canada/ Australia. Ref.736

12. தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது, 5'6" உயரமுள்ள, லண்டனில் 5 வருடங்களாக வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். Ref:735

13. Mannar parents seek for their son 28, 5'6", A/L, London AAT qualified, and working at the Off –licence in UK, a sutable bride. Ref: 734

14. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'6" உயரமுள்ள, கனேடிய பிரஜாவுரிமையுள்ள பட்டதாரி மகனுக்கு கனடாவில் வசிக்கும் தாயார் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 731

15. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'7" உயரமுள்ள, கொழும்பில் தொழில்புரியும் பட்டதாரி மகனுக்கு கனடாவில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகளை கனடாவில்/ UK இல் தேடுகின்றனர். Ref: 732

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'11" உயரமுள்ள, கனடாவில் வர்த்தக நிலையம் வைத்திருக்கும் பட்டதாரி மகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 733

17. Jaffna parents from the UK are looking for a suitable girl 5'5" to 5'8" tall aged 27 to 30 and resident of the UK or Canada, for their 6'2" tall, 33 year old son (Mechanical Eng. Dip) temporarily resident in the UK for 10 years and working as a manager in Supermarket. Ref:727

18. Jaffna parents looking for their son, 29 years old, 5'6" tall, MSc student, a suitable bride in Europe or Canada. Ref:728

19. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 6' உயரமுள்ள MSc படித்த கனடா பிரஜாவுரிமையுடன் Electrical Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு தகுதியுள்ள மணமகளை கனடாவில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref: 729

20. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது 5'6" உயரமுள்ள கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref:730

21. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'6" உயரமுள்ள கண்டியில் வசிக்கும் னுச மணமகனுக்கு சகோதரன் இலங்கையில் மணமகளைத் தேடுகின்றார். Ref: 720

22.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'8" உயரமுள்ள IT பட்டதாரியும் தற்போது இந்தியாவில் தொழில்புரியும் மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref:721

23. மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'6" உயரமுள்ள, தற்போது ஜேர்மனியில் பிரஜாவுரிமையுடன் வாழும் மணமகனுக்கு கனடாவில் இருக்கும் சகோதரன் EU/Canada/இலங்கை போன்ற இடங்களில் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 722

24. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'4" உயரமுள்ள 5 வருடங்களாக லண்டனில் சாரதியாக வேலை செய்யும் சகோதரன் தகுந்த EU வதிவிட உரிமையுள்ள மணமகளைத் தேடுகின்றார். Ref: 723

25.திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'8" உயரமுள்ள, தற்போது படித்துக் கொண்டு தொழில் செய்யும் மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.Ref:725

26. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட, தற்போது U.K யில் வசிக்கும் (U.K Citizen) 33 வயது 5'11" உயரமுள்ள பட்டதாரி மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.Ref: 714

## மணமகன் தேவை

1. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5'4" உயரமுள்ள, கொழும்பில் AAT படித்துக்கொண்டு தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்யும் மணமகளுக்கு லண்டனில் வதிவிடவுரிமையுள்ள மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1007

2. முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 20 வயது 5'2" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் தகப்பன் விசா உள்ள மணமகனைத் தேடுகின்றார். Ref: 1006

3. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1005

4. கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 27 வயது 5'6" உயரமுள்ள, கொழும்பில் வேலை செய்யும் படித்த மணமகளுக்கு நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார்.Ref: 1004

5. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, தற்போது இந்தியாவில் வசிக்கும் படித்த மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1003

6. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'2" உயரமுள்ள, தற்போது இந்தியாவில் வசிக்கும் படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1002

7. Jaffna born 35 years old 5'6" tall, a graduate working in Toronto looking for a suitable groom. contact sister in Canada. Ref: 1001

8. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 21 வயது 5'3" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் சகோதரிக்கு கனடாவில் இருக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1000

9. Sisters, living in London looking for a suitable groom for their sister 42 years old, 5'3" tall, Jaffna Uni Graduate, in UK for the last 5 years. Ref: 899

10. Jaffna parents living in colombo looking for a suitable groom for their daughter 25 years 5' tall, ACS qualified worked in UK for 2 years, now in Colombo. Ref:898

11. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5' உயரமுள்ள கனேடிய பிரஜாவுரிமையுள்ள ஆசிரியை ஆக வேலை செய்யும் B.Sc, B.T பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref:897

12. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'5" உயரமுள்ள, கொழும்பில் வர்த்தக நிறுவனமொன்றில் உயர் பதவி வகிக்கும் பட்டதாரி மணமகளுக்கு கனடாவில் வசிக்கும் சகோதரர்கள் தகுந்த மணமகனை தேடுகின்றனர். விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref:896

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'2" உயரமுள்ள, கொழும்பில் Accountant ஆக பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்கு கனடா அல்லது UK இல் தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref:895

14. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள, வவுனியாவில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். Ref:894

15. Jaffna parents living in Canada are looking for a suitable professionally qualified bridegroom for their daughter, height 5'4", B.com Graduate, Major in M.I.S (Management Informaiton Systems). Ref:893

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, அமெரிக்காவில் படித்து பட்டம் பெற்று அங்கு நிரந்தர குடியுரிமையுடன் வசிக்கும் மணமகளுக்கு பட்டதாரி மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 892

17. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'3" உயரமுள்ள, கனேடிய பிரஜாவுரிமையுள்ள கனேடிய அரசாங்கத்தில் வேலை செய்யும் மணமகளுக்கு படித்த மணமகனை கொழும்பிலுள்ள தாயார் தேடுகிறார். லண்டனில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. படித்த தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 891

18. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'5" உயரமுள்ள, Programme Planning Assistant ஆக யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு லண்டனில் இருக்கும் சகோதரி லண்டனில் உள்ள பட்டதாரி மணமகனை தேடுகிறார். Ref: 890

19. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, Management பட்டதாரி, யாழ்ப்பாணத்தில் Accountant ஆக வேலை செய்யும் மணமகளுக்கு படித்த, நிரந்தர வதிவிடவுரிமையுடைய மணமகனை UK இல் வசிக்கும் சகோதரி UK/Canada/EU நாடுகளில் தேடுகிறார். Ref: 889

20. இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள, A/L, Computer உயர்கல்வி கற்ற இலங்கையில் வசிக்கும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகிறார். Ref: 888

21. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள, வவுனியாவில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு பெற்றோர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள்.Ref: 887

22. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, விவாகரத்துப் பெற்ற யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரிக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 884

23. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 5'2" உயரமுள்ள, லண்டனில் 5 வருடங்களாக வசிக்கும் படித்த மகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref: 885

24. UK aunts are seeking for their neice age 25 years, 5'3" tall CIMA partly qualified working in the city, looking for a suitable professionally qualified bridgegroom. Ref:886

25. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'1" உயரமுள்ள, A/L படித்த 2 வருடமாக சுவிஸில் வசித்து வரும் மணமகளுக்கு நிரந்தர வதிவிடவுரிமையுள்ள தகுந்த மணமகனை சகோதரர்கள் தேடுகின்றனர். Ref:876

26. Father seeks for his only daughter 37 yeas old, 5'2" tall, British Citizen holding a senior administrative position in London, a suitable groom. Ref:877

27. Jaffna mother looking for a daughter 33 years, 5'2" tall, System Engineer, born & brought up in UK, a suitable groom. Ref:878

28. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது, 5'2" உயரமுள்ள, தற்போது வவுனியாவில் ஆசிரியையாகத் தொழில்புரியும் மணமகளுக்கு கனடாவில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref:879

29. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'2" உயரமுள்ள, தற்போது சுனாமி நிவாரணப் பணிப் பிரிவில் வேலைசெய்யும் மணமகளுக்கு தகுந்த வரனை கனடாவில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref:880

30. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'3" உயரமுள்ள, B.Sc பட்டதாரியும், கனடா பிரஜாவுரிமையுள்ள Registered Nurse ஆக வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த வரனை கனடாவில் வசிக்கும் பெற்றோர் தேடுகின்றனர். Ref:881

31. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட 33வயது 5'3" உயரமுள்ள விஞ்ஞான பயிலுனர் ஆசிரியைக்கு தகுந்த வரனை பிரான்சில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார். Ref:882

32. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'4" உயரமுள்ள B.A படித்த கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref:883

33. Jaffna Parents seek for their Daughter 36 years 5'5" tall U.K educated, M.Sc qualified and well employed, a suitable match. Ref:871

34. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 44 வயது 5'7" உயரமுள்ள Hotel Management முடித்து, கொழும்பில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த வரனைத் தேடுகின்றார். Ref:872

35. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'6" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் B.Com படித்த மணமகளுக்கு U.K இல் வசிக்கும் சகோதரி தகுந்த வரனைத் தேடுகின்றார். Ref:873

36. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசிக்கும் 20 வயது 5'4" உயரமுள்ள B.Sc (Computer Science) படித்த சகோதரிக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரன் நுரு நாடுகளில் தேடுகின்றார். Ref:874

# கவிதை

## இத்தாலி கூவருக்கும் அரியத் தருவது...

மகிந்தவிற்கும் சிந்தனைகள் உண்டாய் சொல்லி
மார்தட்டி நீள்படையை ஜெனீவா தள்ள
பகிர்வதற்காய் அவர்கொணர்ந்த கோவைக் கொத்தும்
பாலாவின் வாதமதால் வலிந்து மூட
இருந்து அந்தச் சபையினிலே பேசுவதற்கு
இன்னதுதான் விடையமென்ற நினைப்பும் மாற
விருந்து என நம்பிவந்தோர் நிலையைப் போன்று
விருப்பமின்றிக் கையெழுத்தும் வைத்தார் மன்றில்.

அடியாட்கள் பலருடனே அரங்கும் ஏற
அமர்வதற்கோ ஆசனங்கள் அருகிப்போக
முடியாண்மை இறை அரசு எனவும் காட்ட
முழுப்பலத்தை முடுக்கியுமென் தோல்வி கிட்ட
படிதாண்டி வெளி வரவோ காலம் போக்க
பத்திரிகைக்காரருமோ குளிரில் வாட
கடிவாளம் இட்டவர்போல் அறிக்கைவிட்டு
காலமதைக் கடத்தாது நாடும் வந்தார்.

முஸ்தபா கூட்டமது தரகும் பெற்று
முளக்கமிட எண்ணி வந்தே சுவிசும் சேர
வஸ்த்துகளால் வந்த தொல்லை விலங்கும் மாட்ட
வானொலியும் இடை நடுவே இழுத்து மூட
வானலையில் வான்கோழி ஆட்டம் போட்ட
வலதுகுறை கும்பலது குரல் நடுங்க
கானமயில் என நினைத்து ஆடி வாழ்ந்தோர்
களவாயை மூடியதே ஜெனீவா மன்றும்.

*த.சு.மணியம்*

## நிலவைத் தேடி...

வானம் எனும் வீதியிலே,
வாழ்க்கை எனும் பயணமாம்.
மறைந்து போன நிலவைத் தேடி,
பறவைகளிடம் பதில் கேட்டேன்.
சோககீதம் பாடிப் பறந்து சென்றன.
தென்றலிடம் வினா எழுப்பினேன்.
மௌனமாக வீசி சென்றது.
கரு முகில்களிடம் கதை கேட்டேன்,
கண்ணீருடன் கரைந்து சென்றன,
தொடர்ந்து நடந்தே சென்றேன்,
தொலைவில் தெரிந்தது அந்த நிலா,
அந்த வஞ்சமில்லா நீல வானத்தில்,
பிரகாசித்துக் கொண்டிருக்கும்
நட்சத்திரங்களுடன்,
நீல வானம் எங்கே? நான் எங்கே? எனினும்
நிலவைக்கண்ட சந்தோசத்தில் ஆனந்தக்
கண்ணீருடன்
கலைந்து சென்றேன் கருமேகங்களுடன். . .

*– பி.சுரேஸ்*

## நிலவரம்

எங்கள் மண்ணின் விடுதலைக்கு–
மகத்தான தலைவனுண்டு!
தலைவனின் ஆணைக்காய் தவமிருக்கும்–
தமிழ் தளபதிகளுண்டு!
வலுவுக்கு இழுக்கும் தமிழ் எதிரிக்கு வலிந்து கொடுக்கும்–
நிலை நம் தலைவனுக்கு!
தயங்காதே தலைவனே நாமறிவோம்–
உன் நிலையை!
நீ நடத்தும் நாடகத்தில் நாமறியோம்–
எத்தவறும்!
தமிழினத்தின் தாகத்தை தணித்துவரும்–
நம் தலைவன்!
தமிழ் எதிரியை தலைதெறிக்க ஓடவைப்பான்–
ஈழத்தின் எல்லைவிட்டு!
இருந்தாலும் இனவாத இராணுவம்–
எங்களின் தேசத்தில்!
செல்லமுடியாது உயிருக்கு சேதாரமின்றி–
சிங்கள தேசம்!
புலிக்கொடி பறந்ததுண்டு இமயத்தின்–
சிகரத்தில்!
அன்று தமிழைப் பரப்பவில்லை இமயத்தின்–
அடிவாரத்தில்!
சேரனும் சோழனும் செய்த தவறை–
செய்ததில்லை நம் தலைவன் நாமறிய!
தமிழீழம் விடும் மூச்சு எங்களுக்கு–
கேக்கின்றது!
எதிரிக்கும் தெரியும் ஈழம்–
நெருங்கிவிட்டது தமிழையென்று!
தமிழ் வாழ்க, தமிழ் ஈழம் மலர்க, தமிழினமே–
நீ தலைவனோடு நீடுழி வாழ்க!

*– கணேஸ்*

## கனவு காணுங்கள்

கனவுகள் நனவாகும்
கனவு காணுங்கள்!
தமிழன் தமிழனுக்குள் சமத்துவம் பெற
கனவு காணுங்கள்!
அழியப்போகும் நாற்பது மொழிகளில்
தமிழ் மொழி காப்பாற்றப்பட்டது என்று
கனவு காணுங்கள்!
இந்துவும் முஸ்லிமும்
கிறிஸ்தவமும் பௌத்தமும்
சம்மதம் கொள்ள கனவு காணுங்கள்!
நான்கு வர்ணங்கள் அழிந்தும்
நானிலம் செழிக்க கனவு காணுங்கள்!
உலக உருண்டையில் வட துருவம் தொட்டு தென் துருவம் வரை
தமிழ் மொழியின் கீர்த்தி பரவக் கனவு காணுங்கள்!
அணுசக்தி ஒழிந்ததென்றும்
உலகப் போர் முடிந்ததென்றும் கனவு காணுங்கள்!
உலகில் நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற
அகந்தை அகன்றதென்று கனவு காணுங்கள்!
மூடநம்பிக்கைகள் மனிதனின் பிடியிலிருந்து
ஒழிந்ததென்று கனவு காணுங்கள்!
யாதும் நம் ஊரே
யாதும் நம் நாடே என்று
கனவு காணுங்கள்!
உலகம் அமைதி பெற கனவு காணுங்கள்!
கனவுகள் ஓர் நாள் நனவாகும்
உறுதி கொள்ளுங்கள்!

*– சீ.ஞானவேல்*

## old is gold

**பாவலர் துரையப்பா பிள்ளை (ஈழம்)**

தேத்தண்ணீர் தருவாயே – அம்பலவாணா
தேத்தண்ணீர் தருவாயே
பேய்த்தனமாய் என்னைப்
பிசகாய்த் தாமதம் பண்ணி
ஏய்த்தனுப்பாமல் நல்ல பாலோடு சீனி சேர்த்து
தேத்தண்ணீர் தருவாயே
வாழைப் பழமொன்று வடிவானதாய்த் தெரிந்து
தோலையுரித்தெறிந்து சொல்ல
தன் விலை வந்து
தேத்தண்ணீர் தருவாயே.

*(கி.பி.19ம் நூற்றாண்டு)*

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர் (ஈழம்)**

பொழுது விடிதல்
ஆம்கலி வளை இய பாரகம் போர்த்த
கூர் இருள் கழிந்தது கோழிகள் கூவின.
கடவுளர் நிலைதோறும் படுமணி இரட்டின,
பூங்குயில் கூவின. புட்குலம் ஆர்த்தன.
வானக வாவி மீனவர் கூம்பின
மண்ணக வாவி கண்ணவர் விழித்தன
கண்படை கழன்று மன்பதை எழுந்தது
குடகடல் குளித்துக் குணகடல் உதித்த
காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
நீல வானிடை ஒரு பனை நிமிர்ந்தனன்.

*(கி.பி.20ம் நூற்றாண்டு)*

## மலர்கள் பேசினால்...

மாடிவீட்டுப் பாடையிலும்–
மரித்திருக்கின்றோம்!

ஏழை வீட்டுத் திருமணத்திலும்–
சிரித்திருக்கின்றோம்!

மலர்கள் சாதி என்றாலும்–
மனிதநேயம் உண்டு!

நல்லவேளை!
மனிதசாதியாய்
பிறக்கவில்லை!

வந்தர்க்கெல்லாம் . . .
மணம் வீசுவோம்!
வண்டுகளுக்கு மட்டும் . . .
முந்தானை விரிப்போம்!

தாசிகளின் கூந்தலிலும்
தவமிருக்கும் எங்களுக்கு
விதவைக்கு மட்டும் . .
விதிவிலக்கு ஏனோ?

அரசியல் மாலைகளில்
ஆணவப்படுவதை விட . .
ஆண்டவச் சன்னிதானத்தில்
அடிமைப்படவே விரும்புகிறோம்!

*– ரசிகவ் ஞானியார்*



# ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜோதிடம்




இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் திரு.எச்.எம்.சாஸ்திரி அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத்துல்லியமாக கணித்து வழங்குவார்.

**Sri Hanuman Astrological Centre**
INDIAN FAMOUS ASTROLOGER
Mr.H.M.Sastry
Specialist in all kinds of Astrology
You will come to know about your past, present & future by hand predicition, Horoscope, Face reading, Intending persons may contact, for job, Family matters, Husband & Wife Relationship, Love, Education, Business, Choice of stones, marriage, sickness, promotion, family problems, children problems, Immigration, abroad, money, sexual problems etc. Witch craft will be cleared by performing Poojas and Devi Upasans, Luxmy Pooja, Prayers and protection from enemy.

இவர்களை ஒருமுறை சந்தித்து பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சினை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடைநீங்க குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்திய கோளாறு, பில்லிசூனியம், மந்திரம் ஏவல், செய்வினை, ஜனவசிகம், செய்வினையால் பாதிப்படைந்தவர்க்கு பரிகாரம் வழங்கப்படும். அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். சகலவிதமான வசிகம் செய்து வழங்கப்படும். தாயத்துக்கள் சத்கர ஸ்தாபனங்கள் வழங்கப்படும்.

Consulting Venue: **Wembley Food & Wine,** 546 High Road, Wembley, Middx HA0 2AA (Opposite: Wembley Central Tube Station)
Mob: **07984 901 194 07939 318 620** Opening Hours: **9.00 a.m – 9.00 p.m (Seven days a week)**
Spoken languages Tamil, Hindi, Telugu, Karnadaka & English

# துன்பத்தில் மட்டுமே திளைத்தவர் என்று யாரும் இருக்க முடியாது



இன்பமாக வாழவே எல்லாரும் விரும்புகின்றனர். இன்பத்தில் மட்டுமே திளைத்தவர் என்று யாரும் இருக்க முடியாது. அதே போல் துன்பத்திலேயே துவண்டு போனவர்கள் என்று யாருமே இருக்க முடியாது. எனவே இன்பத்தின் முடிவில் துன்பமும், துன்பத்தின் எல்லையின் இன்பமும் இருக்கும். இரவு, பகல், மேடு, பள்ளம், உயர்வு தாழ்வு, மேல், கீழ் என்று வருகின்ற இணைகள் இவை. ஒருவருக்கு இன்பம் தரும் பொருள் இன்னொருவருக்குத் துன்பம் தருகிறது. பாகற்காய் பொதுவாகக் கசக்கிறது. ஆனால் சர்க்கரை நோயாளிக்கு இனிக்கிறது. ஒருவருக்கு இன்பம் தரும் பொருள் எல்லாருக்கும் இன்பம் தர வேண்டுமல்லவா? விளையாட்டுப் பொம்மை குழந்தைப் பருவத்தில் மகிழ்ச்சியளிக்கிறது. குமரப் பருவத்தில் விளையாட்டுப் பொம்மை மகிழ்ச்சியளிக்குமா?

இன்று மகிழ்ச்சியளிக்கும் பொருள்களோ நாளை துன்பம் தரும் சூழலை உருவாக்கிட வாய்ப்பு உண்டு. எனவே இன்பம் உலகியல் பொருள்களில் இல்லை. சில நேரங்களில் நமக்குத் துன்பம் உண்டாகிறது. நாம் விரும்பிய பொருள் கிட்டவில்லை. உலகியல் ஆசை நிறைவேறவில்லை. துன்பத்தால் மனம் இடிந்து போய் விடுகிறது. உடல் பிணியாலும், பொருள் இன்மையாலும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவராலும் ஒவ்வொரு பிரச்சினை உண்டாகிறது. பிரச்சினை தொடர் கதையாகிறது. நாம் இன்பம் அடைய நாமே காரணம் என்று மார்தட்டுகிறோம்.

ஆனால் துன்பம் வந்தால் எதிரே இருப்பவர் தான் காரணம் என்று கருதுகிறோம். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்றார் சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனார். இதனால் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்குப் பிறர் காரணம் அல்லர். நாமே தான் என்று உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே தான் பாரதியார் "துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம் சோர்ந்து விடலாகாது பாப்பா" என்று எச்சரிக்கை செய்கிறார்.

பிரச்சினைகள் தாம் இன்ப துன்பத்திற்குக் காரணம், பிரச்சினை ஏதும் இல்லாவிட்டால் வாழ்க்கை ஒளிமயமாகும் என்று பலர் கருதுவர். பிரச்சினை யாருக்குத்தான் இல்லை? சிலர் தமக்கு ஏற்பட்ட பிரச்சினையை எண்ணி எண்ணி பயந்து சிறு விவகாரத்தைப் பூதாகரமாக்கி அலைந்து திரிவர். எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு உண்டு என அமைதி அடைய வேண்டும். அடுத்தடுத்து வரும் அலைகள் போல் பிரச்சினை வந்து கொண்டேதான் இருக்கும். சில நேரங்களில் தீவிரமாக இருக்கும். பின்னர் அழுத்தம் குறைந்து போகும். நாம் வருந்தும் வரை பிரச்சினையின் தாக்கம் இருக்கும். புயலுக்குப்பின் அமைதி, என்பது போல் பிரச்சினையின் முடிவில் நிறைவு உண்டாகும்.

ஒரு மனிதனுக்கு பகைவன் இன்னொரு மனிதன் மட்டும் அல்லன், பிரச்சினை, பதற்றம், அச்சம், அருவருப்பு, அவநம்பிக்கை போன்ற தீய பண்புகளும் தாம். இப்படிப்பட்ட பகைவர்கள் எப்போதும் இருந்து கொண்டேதான் இருப்பார்கள். தொடர்ந்து நாமும் போரிட்டு இப்பண்புகளை வெற்றி கொள்ள வேண்டும். இச்செயலிலும் உள்ளார்ந்த மகிழ்ச்சி உண்டு. பிரச்சினை இல்லா வாழ்வு சுவைக்காது. இறந்து விட்ட பிணத்திற்குத்தான் பிரச்சினை ஏதும் இல்லை. நாம் அனுபவிக்கும் இன்பமும், துன்பமும் நமக்கு அனுபவம் என்ற பாடத்தைப் போதிக்கவே வருகின்றன. சிற்பி தேர்ந்தெடுத்த கல்லில் உளியால் செதுக்குகிறான். தேவையான பகுதியைச் செதுக்கி வைத்துத் தேவையில்லாத பகுதியை நீக்குகிறான். சாதாரண கல் சிற்பியின் சிற்றுளி பட்டுச் சிந்தை கவரும் அழகுச் சிலையாய்ப் பரிணமிக்கிறது. எனவே துன்பங்களால் ஒருவன் பட்டை தீட்டப் பட்ட வைரமாய் - பக்குவமாய் பதப்படுகிறான்.

உலகத்தை இன்பமாகவோ துன்பமாகவோ அமைத்துக் கொள்ள மனிதனுடைய மனப் பக்குவம் காரணமாகிறது. இரண்டிலும் பாதிக்கப்படாத சமநிலை பெற வேண்டும். உலகியல் வாழ்வில் பொதுநல நாட்டம் கொண்டவன் எப்போதும் இன்பத்தில் இருப்பான். சுயநல நோக்கம் கொண்டவன் பெறுவது துன்பமே. நாம் பிறருடன் உறவு ஏற்படுத்தப் பாலம் அமைப்போம். எனவே துன்பத்தைக் கண்டு கலங்காமல் எத்தனை கோடி இன்பம் வைத்தாய் என்று இறுமாப்புடன் எதிர் கொள்வோம்

- ரசிகை

## மீழிப் பார்வை

பக்கத்து வீட்டுக்காரன்
பசிக்கு உதவியிருக்கலாம்!
வயதானவரின் கைபிடித்து
வீதி கடக்க வைத்திருக்கலாம்!
குருட்டுப் பிச்சைக்காரனின்
தட்டில்
காசு போட்டுவிட்டு
கடந்து சென்றிருக்கலாம்!

பேருந்தில் இருக்கையை
கர்பிணிப்பெண்ணிற்காக
காலி செய்து கொடுத்திருக்கலாம்!
எவருக்கேனும்
இரத்தம் கொடுத்து
உயிர்காக்க
உதவியிருக்கலாம்!

எவரும் மிதித்துவிடக்கூடாதென
பாதையின் முட்களை
பக்குவமாய் ஒதுக்கியிருக்கலாம்!
பனியில் நடுங்கும்
பூனையைக் கண்டு
பச்சாதாபப்பட்டிருக்கலாம்!

காகத்தின் பசிக்காக
சோற்றுப்பருக்கைகளை
வீட்டு மாடியில்
வீசியிருக்கலாம்!
பூகம்பம் – சுனாமி – புயல் – வெள்ளம்
நிவாரண நிதி கூட
நீ அனுப்பியிருக்கலாம்!


இப்படி
எத்தனையோ இருக்கலாம்
இருக்கலாம்தான்...
இருப்பினும்
மதக்கலவரத்தில் நீ
மாற்று மதத்தவன்தானே!

– ரசிகவ் ஞானியார்


சித்திரை
புத்தாண்டு
வாழ்த்துக்கள்

# MARKANDAN & CO
## SOLICITORS & ESTATE AGENTS

We have moved... to
**845 Romford Road**




குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்

விவாக விண்ணப்பங்கள்

அகதி விண்ணப்பங்கள்

14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்

பிரித்தானிய பிரஜாவுரிமை

வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்

We also Specialise in....

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்

- House/Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

No win – No fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
web: www.markandan-solicitors.com
e-mail: mm@markandan-solicitors.com

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

சாத்திரியின்

# குட்டி நாடகம்

## அங்கம் - 1

*திரை விலகுகிறது அரசசபை எல்லாரும் அமர்ந்திருக்கிறார்கள் அப்போ அரசவை கட்டியக்காரன்*

**வீணானவன்:** ராசாதிராச ராசமாத்தாண்ட ராசகம்பீர எதுவுமற்ற எமது சோம்பேறி மன்னர் வருகிறார் பராக் பராக் பான் பராக்

*நம்ம மன்னர் சோம்பல் முறித்தபடி வந்து தோழில் இருந்த பொன்னாடையால் சிம்மாசனத்தில் உள்ள தூசியை தட்டிவிட்டு அமர்கிறார் அப்போ ஒரு பணிப்பெண் ஒரு தங்க கிண்ணத்தில் மன்னருக்கு பிடித்த பழம்கஞ்சியும் சில பச்சை மிளகாய் களையும் கொண்டு வந்து அவருக்கு அருகில் வைத்து வணங்கி விட்டு போகிறாள்.*

> *அமெரிக்காவை அடிச்சு பிடிக்க வேண்டும் முடியுமா? வயித்தெரிச்சலை கிளப்பாமல் வேலையை பாரும்*

மன்னர்: ஆகா அருமை காலையில் பழம் கஞ்சியும் பச்சமிளகாயும் குடிப்து எத்தனை இனிமை.

*(கஞ்சியை எடுத்து வாயருகே கொண்டு போகிறார் அப்போது வாசலில் ஆராச்சி மணி அடிக்கும் சத்தம் கேட்க எல்லோரும் திடுக்கிட்டு வாசலை பார்க்கின்றனர் அப்போது இரு இளம் பெண்கள் தலைவிரி கோலமாக உள் நுளைகின்றனர்.)*

ஒருத்தி: மன்னா தங்கள் ஆட்சியில் அநீதி நடக்கிறது நீதி வேண்டும் மன்னா.

மன்னர்: என்ன இங்கு மலிவு விலையில் நீதி கிடைக்கும் எண்டு எழுத்திப்போட்டிருக்கா காலங்காத்தாலை வந்திட்டாங்க கஞசியை கூட குடிக்க விடாமல் சே . சரி நீங்கள் யார் என்ன பிரச்சனை

ஒருத்தி: மன்னா எனது பெயர் தமிழினி இதோ இவளது பெயர் அஸ்வினி

மன்னர்: மொத்தத்திலை எனக்கு பிடிச்சிருக்கு சனி பிரச்னையை சொல்லுங்கப்பா

தமிழினி: மன்னா

மன்னர்: என்னா

தமிழினி: நான் எனது கணவர் சிதம்பரத்தாருக்கு காச்சல் எண்டு முகத்தாரின் கடையில் பாண் வாங்கிகொண்டுபோய்கொண்டிருக்கும்போது இதோ இந்த அஸ்வினி பாணை பறித்து வைத்துகொண்டு அது தன்னுடைது எண்டு பொய் சொல்லுகிறாள் நீங்கள் தான் தீர்ப்பு கூற வேண்டும்.

அஸ்வினி: இல்லை மன்னா இல்லை இதோ பாருங்கள் பாண் வாங்கியதற்கான இரசீது என்னிடமுள்ளது இவள்தான் பொய் சொல்கிறாள்(என்று தன்னிடமிருந்த இரசீதை மன்னனிடம் நீட்டுகிறாள்)

தமிழினி: மன்னா என்னிடமும் இரசீது உள்ளது இதோ பாருங்கள்

*(மன்னர் இரண்டு இரசீதையும் வாங்கி உற்று பார்த்து விட்டு)*

மன்னர்: சே இதற்கு பெயர் இரசீதா? பழைய சீமெந்து பேப்பரில் கிழிச்சு ஏதோ கிறுக்கியிருக்கு முதல் வேலையா முகத்தானை தூக்கி உள்ளை போடவேணும்.

> *பாரும் நமது நாட்டில் பாணிற்கு அடிபடுகிறார்கள் வெட்கேடு*

தமிழினி: மன்னா உங்கள் தீர்ப்பில்தான் இந்த நாட்டின் பெருமையே தங்கியுள்ளது நல்ல தீர்ப்பாக கூறுங்கள்

மன்னர்: ஆமா இந்த நாட்டுக்கு அரசனா இருக்கிறதை விட பேசாமல் பிச்சையெடுக்க போகலாம். சரி உங்களிற்கு பாண் தானே பிரச்சனை யாரங்கே எமது படையணியில் வெட்டு கொத்து தளபதி மதனை வரச் சொல்லுங்கள்

மதன்: (வந்து வணங்கிவிட்டு) மன்னா என்ன பிரச்சனை ஆணையிடுங்கள் எந்த நாட்டை பிடிக்க வேண்டும் யாரை வெட்ட வேண்டும். துடிக்கிறது முக்கு முடி (அவருக்கு மீசையில்லை)

மன்னர்: அமெரிக்காவை அடிச்சு பிடிக்க வேண்டும் முடியுமா? வயித்தெரிச்சலை கிளப்பாமல் பாரும் நமது நாட்டில் பாணிற்கு அடிபடுகிறார்கள் வெட்கேடு அந்த பாணை வாங்கி ஆளுக்கு பாதியா வெட்டி கொடுத்து ஆக்களை முதலில் வெளியிலை விடும்

> *பாரும் நமது நாட்டில் பாணிற்கு அடிபடுகிறார்கள் வெட்கேடு*

தளபதி மதன்: மன்னா ஒரு பிரச்சனை

மன்னர்: உமக்குமா என்னய்யா பிரச்சனை

தளபதி மதன்: பலகாலமாக எனது வீரவாளை பாவிக்காததால் துருப்பிடித்து விட்டது அதுதான்.....

மன்னர்: யோவ் நாம் இப்ப சண்டை தான் பிடிக்கிறேல்லலை இடைக்கிடை அதை தீட்டி இளனியாவது சீவவேண்டியதுதானே எதாவது செய்து தொலையும் ஆனால் அந்த இரு பெண்மணிகளையும் இடத்தை விட்டு காலி பண்ண சொல்லும்(மன்னர் மீண்டும் கஞ்சி குடிக்க கிண்ணத்தை தூக்குகிறார்)

தளபதி மதன்: ஆகட்டும் மன்னா( வெற்றிவேல் வீர வேல் என்ற கத்தியவாறு பாணை வெட்டுவதற்காக வாளை ஓங்குகிறார்)

*(வாசல் பக்கமாக ஒருவர் நிறுத்துங்கள் மன்னா நிறுத்துங்கள் என்றவாறு ஒருவர் ஓடி வருகிறார்)*

மன்னன்: யாரய்யா அதுபுதிசா திறந்த வீட்டிற்கை சே கோட்டைக்கை டண்ணின்ரை நாய் புகுந்த மாதிரி.நான் கஞ்சி குடிக்கிறதை ஏன் நிறுத்த வேண்டும்

வந்தவர்: மன்னா நான்தான் கடை வைத்திருக்கும் முகத்தார் எனது கடை பாணை நீங்கள் வெட்ட கட்டளையிட்டதாக அறிந்து அதை நிறுத்த ஓடோடிவந்தேன்

மன்னர்: கொஞ்சம் முதல் வந்திருந்தால் எனக்கு வேலை மிச்சமாக போயிருக்கும் சரி பாணை வெட்டவில்லை இந்த இரு பெண்மணிகளில் யார் உமது கடையில் பாணை வாங்கியவர் என்றாவது அடையாளம் காட்டும் அவரிடமே அதை ஒப்படைக்கலாம்

முகத்தார்: மன்னிக்கவும் மன்னா நான் ஏக பத்தினி விரதன் நான் எனது மனைவி பொன்னம்மாளை தவிர வேறெந்த பெண்ணையும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை தலை குனிந்த படிதான் வியாபாரம் செய்வேன் அதனால் யாரென்று என்னால்: அடையாளம் காட்ட முடியாது. ஆனால் பாணை மட்டும் வெட்ட சொல்லாதீர்கள் அதை வெட்டினால் இந்த மங்களா புரிக்கே ஆபத்து

> *இழுக்க இழுக்க இன்பம் தரும் எனது கடை பீடியை ஊதிய நாரதர் மன மகிழ்ந்து எனக்கு ஒரு வரம் தந்தார்*

மன்னர்: கிழிஞ்சுது போ அடையாளமும் காட்ட முடியாது எண்டுறீர் ஏன் பாணை வெட்ட கூடாது எண்டாவது சொல்லும்

முகத்தார்: மன்னா ஒருமுறை தேவ லோகத்திலிருந்து நாரதர் என்கடைக்கு வந்திருந்தார்

மன்னர்: (ஆச்சரியமாக) நாரதரா உமது கடைக்கா உண்மையாகவா எதற்கு?

முகத்தார்: பீடி வாங்கத்தான் மன்னா இழுக்க இழுக்க இன்பம் தரும் எனது கடை பீடியை ஊதிய நாரதர் மன மகிழ்ந்து எனக்கு ஒரு வரம் தந்தார் என்து கடை பாணை வாங்கி அப்படியே வெட்டாமல் உண்பவர்கள் நோய் நொடியின்றி கனகாலம் இப்புவியில் வாழ்வார்கள் மீறி வெட்டினால் இந்த நாட்டிற்கும் எமக்கும் எமது மன்னருக்கும் கெட்ட காலம் வரும் என்றார் அதை தடுக்கதான் ஓடோடி வந்தேன்

மன்னர்: காலங் காத்தாலை என்னது வில்லங்கம் என்ன செய்யலாம் (திடீரென ஒரு யோசனை தோன்ற மன்னர் விறு விறுவென வந்து பாணை பறித்து தனது வாயில் அடைகிறார் பாண் தொண்டையில் சிக்கி முச்சு விட முடியாமல் மன்னர் மயங்கி விழுகிறார்) திரையும் விழுகிறது.

*தொடரும்.*

# என்னங்க நாடு? எல்லாமே பிராடு...

1987 கவிஞர் அறிவ்மதி எழுதிய பாடல் இங்கே வெளியிடப்பட்டுள்ளது. அப்போது உள்ள அதே நிலை இபபோதும் உள்ளது. எத்தனையோ தேர்தல் வந்தாச்சு. மக்கள் வாழ்வில் விடிவில் மாற்றம் இல்லை. ஆனால் மக்களின் நிலை இன்னும் மோசமாகித்தான் போனது. எத்தனைத் தேர்தல் வந்தாலும். ஆட்சியாளர்கள் மாறினாலும் மக்கள் பிரச்சனைக்கு விடிவு இல்லை.

விடிவு எப்போது?
பிறகு வாக்களித்து என்ன பயன்?
என்னங்க நாடு எல்லாமே பிராடு-

தண்ணிக் கேட்டுப் போனாக்கா
தண்ணிக் காட்டுறாங்கடா!

தண்ணி காய்ச்சும் பசங்களுக்கே சலாம்
போடுறாங்கடா! என்னங்க நாடு எல்லாமே
பிராடு-

ஓட்டுக் கேக்க வரும்போது
கிழவிக்குத்தான் முத்தம்
கோட்டை ஏறி போனபின்னே
குமரிக்குத்தான் முத்தம்

வாக்குப்பெட்டி வயித்துக்குத்தான் ஓட்டு
சோறு கெடைக்குது
ஓட்டுப் போட்ட நம்ம வயிறோ ஒடுக்கு
விழுந்து கெடக்குது.

இடைத்தேர்தல் வந்தாத்தான ஏதோ
கொஞ்சம் நடக்குது
ஜெயிச்சிப் போன எம்.எல்.ஏ செத்தாக்கா
நலலது.

என்னங்க நாடு? எல்லாமே பிராடு-
திருடனுக்குத் திருடன் தானே
தோதலிலே நிக்கிறான்

ஜெயிச்சி வந்தா தேசதந்தயே கூறு
போட்டு விக்கிறான்,
சட்டசபைக்குள்ளாற மட்டமான பேச்சுங்க,
குள்ளநரி கூட்டங்களின்
குட்டு வெளியாச்சுங்க,

வரிகட்டா நடிகர்கள சரிக்கட்டும் ஆட்சி
வெக்கங்கெட்ட செய்திகள
வெளியிட்டா போச்சு
என்னங்க நாடு? எல்லாமே பிராடு——

கங்கைநீரை ஊத்தி ஊத்தி
கும்பாபிசேகம் நடக்குது
தண்ணிதேடி சனங்களெல்லாம்
மைலுகணக்கில் நடக்குது.

வீராணம் திட்டமெல்லாம்
புஸ்வானம் ஆச்சு!
தெலுங்குகங்க திட்டத்திலும்
மண் விழுந்துப்போச்சு!

ஏழப்பாழ எல்லோருக்கும் இலவசமா
செருப்பு! இனி ஓட்டுக் கேக்க வரும்போது
அதனாலே இருக்கு!

என்னங்க நாடு? எல்லாமே பிராடு-

*கவிஞர் கே.அறிவுமதி*
*(1987 மே மனஓசை இதழில்)*

**LEARN KARATE**

To build your self confidence, increase your fitness and self defence

- Learn the ancient art of Shotokan (The way of the Empty Hand)
- Karate will help coordination concentration and the ability to act calmly in any situation
- Fully qualified instructions
- New session starting on 16 April 06 ideal for begginers.

25 வருடங்களுக்கு மேலாக கராத்தேயில் அனுபவம் பெற்ற Karate Master திரு செ.கனேசலிங்கம் Black Belt 4th Dan



Venue:
St. Barnabas Church Hall, Thirsk Road, Mitcham

Classes are on every Sundays 7.30pm to 9.00pm

For further information
Ganesh: 020 8949 6238 / 079 5633 1892
Kannan: 079 6616 9118
Email: newmaldenkarate@hotmail.co.uk

**தமிழ்த்தாய் படிப்பகம்**
**Tamil Thaai Library**
1081 Garratt Lane, Tooting, London SW17 0LN
Tel / Fax: 020 8696 1394
Sathan: 078 5907 5236, Guna: 079 0848 2751
Email: tamilthai@hotmail.co.uk
Web: www.tamilthaai.com

# அறுவைப் பக்கம்

## இந்தியத் தொலைக்காட்சிகளில் கடைசி முறையாக...



பத்து வருசத்துக்கு மேல ஆச்சுப்பா. நம்ம கேபிள் டீவி சேனலெல்லாம் ஆரம்பிச்சு. இருந்தாலும் பல வருசங்களா ஒரே பாணி நிகழ்ச்சிகள் வந்து நம்ம வீட்டு டீவி ஸ்கீரின்ல விடிஞ்சிக்கிட்டுத்தான் இருக்கு. அப்படி தலை விதியேன்னு நாம பார்த்துத் தொலைக்கிற நிகழ்ச்சிகளோட டாப் 10 லிஸ்ட்தான் இது.

**பத்தாவது:**

இந்தக் கருமம் புடிச்ச நிகழ்ச்சிகள் லிஸ்ட்ல பத்தாவது இடத்துல இருக்குறது, திரைப் படமுங்கோ! இந்திய தொலைக் காட்சிகளில் முதன்முறையாகன்னோ, உலகத் தொலைக் காட்சிப் புவியியலில் முதன் முறையாகன்னோ ஆரம்பிப்பாய்ங்க. திரைக்கு வந்து பல மணி நேரங்கள் ஓடியன்னு வேற சேர்த்துக்குவாங்க. ஏகப்பட்ட வெட்டு, கட்டுகளோட அந்தப் படம் நாலு மணி நேரம் ஓடும். படத்தை விட நெறைய நேரம் துட்டுக்காக வெளம்பரம்தான் ஓடும். அப்புறம் அந்தப் படம் காமெடி திங்கள், லவ்வு செவ்வாய், பாடாவதி புதன், அய்யோ அம்மா வியாழன், வெங்காய ஹிட் வெள்ளின்னு எல்லா நாளும் ரீலு அந்து போற அளவுக்கு ஓடும். எப்படா இந்தப் படத்தை இந்தியத் தொலைகாட்சிகளில் கடைசி முறையாகன்னு ஒளிபரப்புவாய்ங்கன்னு நம்மளை நெனைக்க வைச்சுருவாங்க.

**ஒம்பதாவது:**

ஏ வாங்க வாங்க..வாயு பித்தம் கபம் அஜீரணம் எல்லாத்துக்கும் ஒரே மருந்து இந்த வேர்தான் சார். கபடதுபட வேர். கரக் முரக்னு கசக்கிப் பிழிஞ்சு இதோட சாறைக் குடிச்சாப் போதும். கேஸ் எல்லாம் ஈஸியா பாஸ் ஆகும். லைஃப் பீஸ்புல்லா இருக்கும்னு பிதாமகன் சூர்யா மாதிரி ஆட்கள் ரோட்டோரமா விக்கிற சரக்கை, கோட், சூட், கூலிங்கிளாஸ் சகிதமா குதிரை மேல ஏறி வந்து டீவியில விப்பாங்க சில ஆட்கள். இவங்க கொடுக்குற காசை வைச்சுத்தான் சிலடீவிசேனல்களே ஓடுதுன்னா பார்த்துக்கோங்களேன். இவங்களோட கஸின் பிரதர்ஸ் சிலரு இருக்காய்ங்க. அவங்க பண்ணுற புரோகிராம் என்னன்னு தெரியுமா? ஆங், அதேதான். பச்சக்கல், சிவப்புக்கல், கருங்கல், செங்கல், விக்கல், நக்கல் இப்படி எல்லாத்தையும் கலக்கலா காட்டி கல்லாவை நிரப்புற வியாபாரிங்க அவங்க. டார்ச்சர்டா சாமி! டெலிமார்கெட்டிங்கும் இதே வகையறாதான்னு தனியா சொல்லணுமா என்ன!

**எட்டாவது:**

தவில் அடிக்கிற ஆளு, கதை கட்டுற ஆளு, கண்ணீர் சிந்துற மெகா நடிகை, துணிக்கடை அதிபரு -இப்படி பிரபலங்கள் எந்தத் துறையில இருந்தாலும் கூட்டியாந்து கையில கரண்டியைக் கொடுத்துருவாங்க. கேட்டா சமையல் டைம்னு தாளிப்பாய்ங்க. குழிக்கரண்டி, கொத்துக்கரண்டி, ஆப்பச் சட்டி, அகண்ட சட்டின்னு விதவிதமாக் காண்பிப்பாங்க. ஆனா அடுப்பப் பத்த வைச்சிருக்காங்களான்னுதான் தெரியாது. உப்பு ரொம்ப உப்பா இருக்குங்கறதால நீங்க உப்பை லேசா யூஸ் பண்ணுனாப் போதும்ன்னு கூட உதவிக்கு காம்பியரிங் பண்ண ஒரு தொகுப்பாளினி வேற படுத்தும். கடைசியா பிளேட்ல இருக்குற பதார்த்தத்தைத் தலைவிதியேன்னு தின்னுட்டு, சூப்பரா இருக்குன்னு ஒரு நடிப்பு நடிக்கும் பாருங்க. சான்ஸே இல்ல!

**ஏழாவது:**

எல்லாச் சேனலும் விடாம தொரத்தித் தொரத்திப் பண்ணுற சினிமா விமர்சனத்துக்குத்தான் ஏழாவது இடம். குறைப் பார்வை, நிறைப்பார்வை, வேண்டிய பார்வை, வேண்டாத பார்வைன்னு பல தினுசு இதுல உண்டு. சேனல், அது சார்ந்த கட்சி, அது சார்ந்த ஹீரோ, இதைப் பொருத்துதான் விமர்சனமும், டென்ட்டென் லிஸ்டும் அமையுங்கிறது டீவி ரிமோட்டுக்குத் கூடத் தெரிஞ்ச உண்மை. அதுலயும் பல படங்களுக்கு முதல் நாளே படம் பார்த்துட்டு வெளியே வர்ற விசிலடிச்சான் ரசிகர்கள்கிட்ட மட்டும் கருத்துக் கேப்பாய்ங்க. தலீவரு கலக்கிப்புட்டாருல்லன்னு அவிங்களும் அளப்பானுக. அதை நம்பி தியேட்டருக்குப் போனா நம்ம தலைவிதி டார் டார் ஆயிடும். படத்தைவிட, சில நேரம் டைரக்டரைக் கூட்டியாந்து உட்காரவைச்சு கலாய்ப்பாங்க பாருங்க, அதுதான் சூப்பரா இருக்கும்பா!

**ஆறாவது:**

ஆறாவது இடத்துல இருக்குற நிகழ்ச்சி என்னன்னு தெரியுமா.. வந்த்த்தோமாதரம்... தாய் மண்ணே வணக்கம். அந்த டைப் நிகழ்ச்சிங்கதான். ஊர் ஊராப் போய் கல்யாண மண்டபத்தை வாடகைக்கு எடுத்து, அரங்கத்தைக் கூட்டிருவாய்ங்க. இதுல கலந்துகிட்டுப் பேசணும்னா ஒரே ஒரு தகுதிதான். கரண்ட் கட் ஆகி மைக் ஆஃப் ஆனாலும் மைக் இருக்குற சவுண்டலயே பேசத் தெரியணும். அதுபோக நாலு திருக்குறள், ரெண்டு பாரதியார் கவிதை, மூணு குட்டிக்கதை தெரிஞ்சு வைச்சுக்குறது ப்ளஸ் பாயிண்ட். உங்க வாழ்க்கையில சோகமே இல்லாட்டியும், பெரும் சூறாவளியே கடந்து போன மாதிரி ஒரு கதையை நெசம் போலவே சொல்லத் தெரியணும். ஏன்னா அப்பத்தான் புரோகிராம் நடத்துற பெரியப்பா டவலால வாயைப் பொத்தி அழுறதுக்கான சிச்சுவேஷன் கிடைக்குமுங்கோ!

**அஞ்சாவது:**

குப்பாப்பட்டி கிராமம். அன்று காலை. வழக்கம்போல அவசரத்துக்கு வயலுக்கு ஒதுங்கப் போன சிவனாண்டியின் சொம்பைக் காணவில்லை. குத்தம். ஒடியது என்ன? இப்படித்தான் ஆரம்பிப்பாய்ங்க. நம்மகிட்ட நாலு சொம்பு இருக்குங்க. அதுல பொத்தல் விழுந்த அந்தச் சொம்பைத்தான் என் பாட்டன் காலத்துல இருந்து குடும்பத்துல மூத்த புள்ளைக உபயோகிக்கிறோம். அப்படிம்பாரு சிவனாண்டி. அப்படி பத்து நிமிஷம் சொம்பைச் சுத்தி கதை ஓடும். சொம்பை அடகு வைச்சு சரக்கு அடிக்கலாமுன்னுதான் திருடுனேன்னு குத்தம் செஞ்ச புலிப்பாண்டி கொஞ்ச நேரங் கழிச்சு பெருந்தன்மையா ஒத்துக்குவாரு. ஆனா இந்த நிகழ்ச்சியில பின்னால வாய்ஸ் கொடுக்கணும்னா நிரந்தரமா தொண்டை கட்டியிருக்கணும்போல. அப்பத்தான் மிரட்டலா இருக்கும்னு நெனைக்கிறாக. இதுல அப்பப்ப நடிகைங்க வீட்டுல நாய் காணாமப் போன சம்பவம் ஸ்பெஷல் எபிசோடா கூத்தடிக்குமுங்கோ!

**நாலாவது:**

காமெடி புரோகிராமுன்னு சொல்லி வெளம்பரப்படுத்தி அடிக்கடி ஞாபகப்படுத்து வாங்கோ. சரி சிரிக்கலாம் மேன்னு நாமளும் அந்தப் புரோகிராமை நம்பிப் பார்த்தா, எங்கங்க நாம சிரிக்கணும்னு ஞாபகப்படுத்த, நாலு பேர் சிரிக்கிற சவுண்டையும் அவிங்களே அங்கங்க போட்டுக்குவாய்ங்க. பெத்தவங்களைத் திட்டுறது, மத்தவங்களைத் திட்டுறது, செத்தவங்களைத் திட்டுறது, ஊத்திக்கிறது, உளர்றது இதுதான் காமெடின்னு நெனைச்சிக்கிட்டு இவங்க பண்ணுற லொள்ளு இருக்கே, தாங்க முடியலடா சாமி!

**மூணாவது:**

மெகா சீரியலுக்கு மூணாவது இடமுங்கோ! எல்லா உறவு முறையையும் தலைப்பா வைச்சு சீரியல் வந்துடுச்சு. இனிமே பக்கத்து வீட்டுப் பெரியம்மா, எதிர்த்த வீட்டுச் சித்தின்னுதான் தலைப்பு வைக்கணும். அப்பான்னு ஒரு சீரியலை நீங்க பத்து வயசுல பார்க்க ஆரம்பிச்சீங்கன்னா, நீங்களே அப்பா ஆகுற வரைக்கும் அந்த சீரியல் ஓடும். அதோட நிறுத்துவாங்களா, மாட்டாங்க. மிட்நைட் ஒரு மணிக்கு அதே சீரியலை மறு ஒளிபரப்பு வேறே பண்ணுவாய்ங்க! மார்க்கெட் போன கோலிவுட் அக்கா நடிகைங்க எல்லாம் ஆளுக்கொரு சீரியல்ல நடமாடும் பெண் தெய்வங்களா திரிஞ்சுக்கினு இருக்காங்க. நம்மளோட அன்றாடப் பிரச்சினைகளோட அபி, செல்வி, காஞ்சனா, கல்கி, சரசுன்னு பல பேரோட பிரச்சினைகளையும் சுமந்துக்கிட்டு வாழுறோமே நாமெல்லாம் டபுள் கிரேட்!


**ரெண்டாவது:**

லாங் லாங் அகோ ஆரம்பிச்சுது, சாங்கை டெடிகேட் பண்ணுற இந்த டைப் நிகழ்ச்சிசங்க. உதறிட்டுப் போன காதலிக்கு, உசிரை விட்டுப் போன பாட்டிக்குன்னு போன் பண்ணி பாட்டுக் கேக்குறதையே பல பேர் முழு நேரத் தொழிலா வைச்சிருக்காங்க. இந்த ஜென்மத்துல உங்க கிட்ட நான் பேசுவேன்னு நெனைச்சுசேப் பார்க்கல, உங்க லைனுக்காக பொறந்ததுல இருந்தே ட்ரை பண்ணிக்கிட்டு இருக்கேன். நீங்க ஐஸ்வர்யா ராய் மாதிரியே இளிக்கீங்கன்னு ஸ்டாண்டர்டா சில வசனங்கள் ரீப்பீட் ஆகிட்டே இருக்கும். அதுவும் தொகுப்பாளினிங்க பேசுற டமிலைக் கேக்கறப்போ, அவங்க நாக்கை இழுத்து வைச்சு வசம்பை எடுத்து நறநற ன்னு தேய்க்கணும்னு வெறி வரும் நமக்கு. கல்லறைல புதைஞ்சு போனவங்கிட்ட கூட இவங்க பேசுறது ஒரே வசனம்தான். கீப் டிரையிங்கு. கீப் ஆன் டிரைங்யிங்கு!

**முதலாவது:**

எந்த நிகழ்ச்சியாலயும் அடிச்சுக்கவே முடியாத நெம்பர் ஒன் இடத்துல இருக்குற நிகழ்ச்சி ஒண்ணு, ஒண்ணரை, ஏழரை, எட்டு செய்திகள்தான். ஏழரையைக் கேக்குறவன், எட்டைக் கேட்காம வுட்டா அஜீரணக் கோளாறு வந்துடும். ஆனா ரெண்டையும் கேக்குறவன் அரை லூஸக்ஷ் மாறிடுவாங்குறதும் உண்மை. மீதி சேனல் நியூஸைக் கேக்கலாமுன்னு பாத்தா அதுல அப்படியொரு நியூசே வராது. எல்லாத்தையும் தாண்டி நடுநிலைமை செய்திகள் தெரிஞ்சுக்கணும்னா ஒரே வழிதாங்க இருக்கு. டீவியை வீட்டுல நடுவுல வைச்சிருங்க. மியூட்ல வைச்சிருங்க. டீவிக்கு பின்னாடி நீங்க உட்கார்ந்துக்கோங்க. செய்தி கேளுங்க. இப்ப எப்படி இருக்கு!

- கற்பனை: முகில்





### கொடுத்து விடு

கொடுத்து விடு தோழியே!
திருப்பிக் கொடுத்துவிடு!
கேட்பவன் இறைஞ்சுவதுதான்
உலக நியதி – இங்கோ
கொடுத்தவன் இறைஞ்சுகிறேன்
திருப்பிக் கொடுத்துவிடு தோழியே!

நான் கொடுத்ததை மறப்பது
நல்ல மரபல்ல!
வேண்டாமென விட்டுவிட –
நானொன்றும் நிலப்பிரபு அல்ல.
நேரிடையாய் கேட்கும்
நாகரீகம் எனக்கில்லை

தரவேண்டும் என்ற
கடமையும் உனக்கில்லை
உன் தோழியிடம் சொல்லி
தூதனுப்பவா? இல்லை துண்டுச்
சீட்டில் ஞாபகப்படுத்தவா?
என்ன செய்வதோ?


தவித்துக் கொண்டிருக்கின்றேனடி
என் திருமணத்திற்கு
முன்னாவது தந்து விடுவாயா
தோழியே?
நீ என்னிடம் வாங்கிய
கடனை.



# சினிமா

## சினித்துளி

### பீமா !



விக்ரமுடன் மீண்டும் பீமா படத்தில் ஜோடி சேர்ந்திருக்கும் திரிஷாவுக்கு "மினிரவுடி" வேடம். படம் முழுவதும் வந்து வெளுத்து கட்ட இருக்கிறாராம். இதற்காக இப்போதே பயிற்சி எடுக்கிறாராம். இந்த படத்தில் இந்தி நடிகர் நாணாபடேகர் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இந்த படத்தின் பெரும்பாலான படப்பிடிப்பை இலங்கையில் நடத்துவதாக இருந்தது. இப்போது ஐதராபாத்திலும் வைசாலியிலும் படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளனர். இத்துடன் பல மாத ஓய்வுக்கு முடிவு கொடுத்துள்ளார் விக்ரம். இவ்வாறு விக்ரம் மட்டுமன்றி பல முன்னணி நடிகர்களின் ஓய்வுக்குக் காரணம் இயக்குனர்களின் கதை வறட்சியே என்கிறார்கள் கோடம்பாக்க காரர்கள்.

### நடிப்பு !



ராம் படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக ஜீவாவுக்கு சைப்ரஸ் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்துள்ளது. சைப்ரஸ் நாட்டில் தொடங்கிய சைப்ரஸ் சர்வதேச பட விழாவுக்கு 'ராம்' படம் தேர்வாகியுள்ளது. விருது போட்டியில் கலந்து கொண்ட 11 படங்களில் ஆசியாவில் இருந்து, சீன மொழி படமும் ராம் தமிழ் படமும் மட்டுமே கலந்து கொண்டன. சிறந்த நடிப்பு, சிறந்த இசை ஆகிய இரு விருதுகளை ராம் திரைப்படம் பெற்றது. ராம் ஓர் வித்தியாசமான நல்ல படம். ஆனால் சிறந்த நடிப்பா? கொஞ்சம் களண்டதுபோல நடிப்பது இலகு, சாதாரணமான ஒருவராக உணர்வுகளை வெளிப்படுத்துவதே கடினம்.

### சிரிப்பழகி !



நான் இப்போது துருப்புழலான் என்ற மலையாளப் படத்தில் மம்மூட்டியுடனும், தெலுங்கில் ஸ்ரீராமதாசு என்ற படத்தில் நாகர்ஜுனுடனும் நடிக்கிறேன். தெலுங்கில் நடிகர் பாலகிருஷ்ணாவுடனும், ஸ்ரீகாந்துடனும் வேறு படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளேன். தமிழ்ப் படங்களில் கவனம் செலுத்தவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். தமிழில் 23 படங்களிலும், தெலுங்கில் 7 படங்களிலும் நடித்திருக்கிறேன். நல்ல கதையும் கேரக்டர்களும் கிடைக்கும்போது தமிழில் நடிப்பேன். நான் நடித்த புதுப்பேட்டை படம் விரைவில் வெளியாகும். இப்படிக் கொதிக்கிறார் சிரிப்பழகி சினேகா.

### கிரிமினல் வழக்கு

அண்மையில் நடந்த மகளிர் தினத்தையட்டி மெட்ராஸ் மேனேஜ்மெண்ட். அசோஸியேஷன் மாநாடு ஒன்றை நடத்த, அதில் கலந்து கொண்ட சுஹாசினி, "நான் எதையும் மனம் விட்டுப் பகிர்ந்து கொள்பவள். ஒரு சக நடிகைக்கு ஆதரவாகப் பேசினேன். அப்போது அங்கு கூடி, என் பேச்சை ரசித்தவர்கள் வெறும் முப்பது பேர்தான். ஆனால் இதைத் தொடர்ந்து மீடியாக்களும் சில குழுக்களுமாகச் சேர்ந்து இந்தியாவின் மிக அதிகம் தேடப்பட்டு வரும் கிரிமினலாக என்னை ஆக்கிவிட்டார்கள். எனக்கு எதிராக ஐம்பது கிரிமினல் வழக்குகள். நல்ல வேளையாக இன்றைய தேதியில் அதில் நாற்பது வழக்குகளில் என் மீது குற்றமில்லை என்று தீர்ப்பாகிவிட்டது. மீதிப் பத்து வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று அந்த விழாவில் கூறினார்.

### சிறுதுளி !

நிலா அவரது காதலரை திருமணம் செய்வதில் உறுதியாக இருக்கிறார். "எனக்கு நிறைய போய் பிரண்டுகள் இருக்கிறார்கள்". ஆண்களுடன் நண்பர்களாக பழகுவதில் தப்பில்லை. இன்னும் 3 வருடங்களுக்கு பிறகு திருமணம் செய்து கொள்வேன் என்கிறார் நிலா.

❖ ❖ ❖

தமிழ்ரசிகர்களின் மனதில் கவர்ச்சி கன்னியாக இடம் பிடித்து புன்னகை அரசியாக மாறியவர் கே.ஆர்.விஜயா. நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சினிமாவில் நடிக்க ஆரம்பித்திருக்கிறார். தெலுங்கில் நாகேஸ்வராவுடன் ஜோடி சேர்ந்து நடிக்கும் ஒரு படத்தில் கே.ஆர். விஜயாவுக்கு நகைச்சுவை கலந்த வேடம்.

❖ ❖ ❖

தமிழ், தெலுங்கு பட உலகில் முக்கிய இடம் பிடித்துள்ள அசின் புத்தகங்கள் படிப்பதில் தீவிர ஆர்வம் உள்ளவர். படப்பிடிப்புக்கு செல்லும் பாதும் ஏதாவது ஒரு புத்தகத்தை படித்துக் கொண்டிருப்பார். சமீபகாலமாக விளம்பர படங்களில் அதிகமாக நடித்து வரும் அசின் ஐ.ஏ.எஸ்.தேர்வு எழுதுகிறார். நேரம் கிடைக்கும் போது இதற்கான புத்தகங்களை படிக்கிறார்.

❖ ❖ ❖


பாக்யராஜ் இயக்கி தயாரிக்கும் பாரிஜாதம் படத்தில் நடிக்கும் அவரது மகள் சரண்யாவின் நடிப்பு பிரமாதம் என்று அந்த படத்தை பார்த்தவர்கள் எல்லோரும் புகழ்ந்தார்கள். சிலர்... உடம்பை கொஞ்சம் குறைத்தால் நன்றாக இருக்கும் என்று கருத்து சொல்ல உடனே உடற் பயிற்சி உணவு கட்டுப்பாடு போன்ற தீவிர நடவடிக்கையால் ஒரே மாதத்தில் 5 கிலோ குறைந்து விட்டாராம்.

❖ ❖ ❖

பிதாமகன் படத்தில் பிரமாதமாக நடித்தவர் சங்கீதா. என்றாலும் அதன் பிறகு எதிர்பார்த்தபடி படங்கள் இல்லை. சிறிய இடைவெளிக்குப் பிறகு பிதாமகன் சங்கீதா உயிர் படத்தில் நடிக்கிறார்.

❖ ❖ ❖

நமீதா முன்பு எந்த படப்பிடிப்புக்கு சென்றாலும் அவரது போய்பிரண்ட் பரத் கபூருடன்தான் செல்வது என்ற பொலிசியை கடைபிடித்து வந்தார். இப்போது அந்த கொள்கையை மாற்றி விட்டார். பச்சக்குதிர, நீவேணுன்டா செல்லம் படப்பிடிப்புகளுக்கு தனியாகவே செல்கிறார். படப்பிடிப்பு குழுவினரிடம் கலகலப்பாக நடந்து கொள்கிறார். பூஜாவும் தம்பி பட்டியல் படவெற்றிக்குப் பிறகு தனியாகவே படப்பிடிப்புக்கு செல்கிறார்.



## "சீமான்"

*ஆரம்ப காலம் பற்றி ?*

சிறிய வயதில் இருந்தே கூத்து நாடகம் இலக்கியம் போன்றவற்றில் ஆர்வம் இருந்தது. அது கல்லூரிக் காலங்களில் திரைப்படத்துறை மேல் ஆர்வத்தினை ஏற்படுத்தியது. அதன்படி இயக்குனர் நடிகர் மணிவண்ணன் அவர்களிடம் உதவியாளராக இருந்து இயக்குனரானேன்.

*உங்கள் முதல் இயக்கம்?*

பசும்பொன் படத்துக்கு கதை திரைக்கதை எழுதும் வாய்ப்புக் கிடைத்தது அதில் திருப்தி அடைந்த நடிகர் பிரபு அவர்கள் பாஞ்சாலங்குறிச்சி திரைப்படத்தினை இயக்கும் வாய்ப்பினைப் பெற்றுத் தந்தார்.

*தம்பியின் வெற்றி பற்றி!*

அது ஒரு நல்ல படம்! எனக்கு பொது ஜனங்களை சந்தித்துப் பேசுகிற பழக்கம் இருக்கிறது. இலக்கியக்கூட்டங்கள், நூல் வெளியீடு போன்ற இடங்களுக்குச் சென்று அவர்களுடன் பேசுவேன். எதை விரும்புகிறார்கள் எதை வெறுக்கிறார்கள். நான் எப்படி திரைப்படத்தினை உருவாக்கப் போகிறேன். என்றெல்லாம் யோசிப்பேன். தம்பி அவர்களுக்குப் பிடித்திருக்கிறது.

*ஏன் இப்படியொரு கதையினைத் தேர்ந்தெடுத்தீர்கள்?*

நான் சிறுவயதில் இருந்தே பல புரட்சியாளர்களால் கவரப்பட்டு இருக்கிறேன் அன்றும் இன்றும் என பல்லரைச சொல்லலாம். அவர்களை உள்வாங்கிய எனக்கு என்னைச் சுற்றியுள்ள சமூகப்போக்கு கோபத்தினை ஏற்படுத்தியது. கையில் இருந்த ஊடகத்தினால் அதனை வெளிப்படுத்தி இருக்கிறேன்.

*மாதவன் தெரிவானதற்குக் காரணம்?*

மாதவன் ஒரு சிறந்த நடிகர், கொடுக்கப்படும் கதாபாத்தினை உள்வாங்கி நடிப்பவர். உதாரணத்திற்கு மின்னலே, ஆயுதஎழுத்து, அன்பேசிவம். அன்பே சிவத்தில் கமலுக்கு இணையாக நடித்தவர்.

*ஏன் இவ்வளவு இடைவெளி?*

தோல்வி! சினிமா கலைக்கு மேலாக இப்போ வியாபாரம். அதனால் ஒரு படம் தோல்வி கண்டால் அடுத்த படத்திற்கான வாய்ப்பு என்பது இயக்கத்தைப் பொறுத்தவரை அதிஷ்டம்.

*நல்ல இயக்குனராக என்ன செய்ய வேண்டும்?*

சமகால திரைப்படங்கள், எழுத்தாளர்களின் ஆக்கங்கள் போன்றவற்றை வைத்திருக்க வேண்டும். தொழிநுட்பங்களை உட்புகுத்தவேண்டும் ஊருக்கு ஒவ்வாத கதைகளை தூர எறிந்து விட்டு எங்களுக்கு ஏற்ற எங்கள் நிலக் கதைகளை தெரியவேண்டும். பெயரை மாற்றி வைப்பதும், நிமிர்த்தி வைப்பதும் நிறுத்தப்பட்டு தொழிலில் கவனம் செலுத்த வேண்டும்.

LINGA & CO
Legal Advisors and Commissioners for Oaths

தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா?
உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா?

WE SPECIALISE IN:
ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS
WORK PERMITS APPLICATIONS - ALL CATEGORIES
HIGHLY SKILLED MIGRATION PROGRAMME,
FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES,
ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS,
APPEALS AND BAIL APPLICATIONS, EEC RESIDENCE PERMITS,
TOURIST VISA EXTENSION, PERSONAL INJURY, EMPLOYMENT LAW


10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் மேலும் பல தமிழ் பேசும் சட்டதரணிகளும் இணைந்து செயற்படுத்துகின்றனர்.
Linga & Co வணிக ஆலோசனைகளையும், book Keeping சேவைகளையும் தகுந்த முறையில் நியாயமான விலையில் வழங்குகிறது. EUROPEல் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தங்கள் உறவினர்களை Sponsor செய்ய வாய்ப்பு உண்டு

46 HIGH STREET, COLLIERS WOOD, LONDON SW19 2BY
GENERAL LINE: 020 8544 9285 (4 LINES)
EMERGENCY LINE: 07771 646 441 / FAX: 020 8542 9530

உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட்டு உங்கள் வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்

ESTABLISHED IN 1994

# சினிமா




## படத்தொகுப்பு

Lord of the rings, the making of the film பார்த்த போது பீட்டர் ஜாக்சன் சொன்ன ஒரு விஷயம் மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. இந்த படத்தின் முதல் வெளிப்புற காட்சிகளை எடுக்க நியுசிலாந்து சென்றனர் படக்குழுவினர். அங்கு ஒரு காட்சியையும் எடுக்க முடியாதபடி நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. சரி உட்புற காட்சியை எடுக்கலாமென முடிவு செய்து அவர்கள் எடுத்தது sam,frodo சம்பந்தபட்ட காட்சி. இது நடந்தது 1999ல் பிறகு மழை நின்று மற்ற காட்சிகளை பதிவு செய்து முதல் இரண்டு பாகங்களை வெளியிட்டு 2003ல் அந்த காட்சியின் மிச்சம் இருந்த smeagol சம்பந்தபட்ட காட்சியை எடுத்தனர். இந்த காட்சியை திரையில் பார்க்கும்போது நமக்கு இதை எடுத்த கால வித்தியாசம் தெரியாதபடி closeup shots வைத்து எடிட் செய்திருப்பார்கள்.

இது எடிட்டிங் என்னும் நுட்பம் செய்யும் வித்தைக்கு ஒரு எடுத்துக்காட்டு. பல பேருக்கு எடிட்டிங் என்பது என்ன என்று சரியாக தெரியாது. பலசமயம் படம் மிகவும் நீளமாக இருந்தாலோ அல்லது மிகவும் அலுப்பு தட்டினாலும் நாம் எடிட்டரை குறை கூறுவோம். ஒரு படத்தின் நீளத்திற்கோ தொடர்ச்சிக்கோ எடிட்டர் எந்த வகையிலும் பொறுப்பு கிடையாது. அது இயக்குநரை போய் சேர வேண்டிய பழி. முதன் முதலில் சினிமாவில் எடிட்டிங்கை அறிமுக படுத்தியது ரஷ்யர்கள் தான்.

ஒரு படத்தில் நீதிமன்ற காட்சி குற்றவாளிக்கு எதிராக சாட்சி சொல்பவனை காணோம் நீதி மன்றத்தில் எல்லோரும் காத்துக் கொண்டிருக் கிறார்கள் நேரமாகிக் கொண்டே இருக்கிறது மக்கள் கவலைகொள்ள ஆரம்பித்தனர் சாட்சி சொல்பவன் அடிப்பட்டு நீதி மன்றத்தை நோக்கி ஓடி வந்துக் கொண்டிருக்கிறான். இந்த காட்சியை எடிட்டிங் வரும்முன்னே நான் சொன்னவற்றையெல்லாம் ஒரு அட்டையில் எழுதி காண்பித்து பிறகு நீதிமன்றத்தை காண்பித்து காட்சியாக்கி விடுவார்கள். ஆனால் இந்த படத்தில் நீதிமன்றத்தில் நீதிபதி எதிர்தரப்பு வக்கீலை பார்க்க கட் வக்கீல் பின்னே உட்கார்ந்திருக்கும் மக்களை பார்க்க கட் அதில் ஒருவர் கவலையாய் அங்கு மாட்டியிருக்கும் பெரிய கடிகாரத்தை பார்க்க கட் கதிகாரம் பெரிய முள் ஒரு இடம் நகர கட் சாட்சி அடிப்பட்டு ஓடி வந்துக்கொண்டிருக்கிற ான் கட் சாட்சி நீதிமன்றத்தில் நுழைகிறான். இது தான் முதன் முதலில் எடிட் செய்து காட்டப்பட்ட காட்சியாகும்.

இதை செய்தவர்கள்தான் ரஷ்யர்கள். எடிட்டிங்கை இன்னும் புரியும்படி விளக்க வேண்டுமானால்: ஒரு பார்க்கில் இருவர் பேசிக்கொள்வது போல் காட்சி. இதற்கு குறைந்தது மூன்று ஷாட்கள் வைத்து எடுக்க வேண்டும்இ முதலாமவர் பேசும் காட்சி இரண்டாமவர் பார்வையில் கேமராவை வைத்து எடுக்க வேண்டும் இரண்டாமவர் பேசும் காட்சி முதலாமவர் பார்வையில் கேமராவை வைத்து எடுக்க வேண்டும். வழக்கமாக இதை இன்னொருவர் தோள் பின் கேமராவை வைத்து கேட்பவரின் தலை பின்னெ சிறுது தெரிவது மாதிரியும் பேசுபவரின் முகம் முழுதும் தெரிவதுமாய் எடுப்பார்கள். பிறகு இருவரும் தெரிவது போல் ஒரு மீடியம் ஷாட் வைப்பார்கள். இதை ஷவூட் செய்து எடிட்டரிடம் கொடுப்பார்கள்.

எடிட்டர் ஒரு சம்பாஷனையில் இந்த மூன்று ஷாட்களையும் சேர்த்து எடிட் செய்து தருவார். இப்படி செய்யாமல் ஒரே மீடியம் ஷாட்டில் இருவரும் பேசுவது போல் காண்பித்தால் நாடகம் பார்ப்பது போல் இருக்கும். ஒரு காலத்தில் எடிட்டிங் டேபிளில் படச்சுருளை ஓட்டி அப்படியே கத்தரியை வைத்து எடிட் செய்வார்கள். இப்போது AVID, movie magic என்று பல மென்பொருளை உபயோகிக்கிறார் கள். இதில் படச்சுருளை டிஜிட்டலாக மாற்றி கணணியில் ஏற்றி எடிட் செய்து திரும்பவும் படச்சுருளாக மாற்றுவார்கள். என் நண்பன் film making course படித்தான். அவன் ப்ராஜக்ட்டிற்காக எடிட் செய்தது தான் நான் முதன் முதலில் எடிட்டிங் செய்வதை நேரில் பார்த்த அனுபவம். சுமார் ஒரு நிமிடம் ஓட வேண்டிய காட்சியை நாங்கள் மூன்று மணி நேரம் உட்கார்ந்து எடிட் செய்தோம்.

LOTR: return of the king படம் இரண்டு மில்லியன் அடி படச்சுருள் கொண்டது முதன் முதலில் நான்கரை மணி நேரம் ஓடும் படமாக எடிட் செய்தனர். பின்னர் அதை மூன்று மணி நேரமாக எடிட் செய்தனர். நான் பார்த்த extended edition இரண்டு டிஸ்க்குகள் நான்கு மணி நேரம் ஓடியது. நம்மூர் படங்களில் சமீபத்தில் வந்த படங்களில் எடிட்டிங் ஹாலிவுட்டிற்கு நிகராக இருக்கிறது. காக்க காக்க கஜினி போன்ற படங்களில் தமிழ் சினிமாவின் அடுத்த அத்தியாத்திற்கு செல்லும் அறிகுறி தெரிகிறது.

*- ரஞ்சித் காளிதாசன்*



விமர்சனம்

## திருப்பதி

மந்திரி மகனான ரியாஸ்கான், லைட்டிங் அன்ட் சவுண்ட் சிஸ்டம் அமைத்துத் தரும் அஜித்தின் நண்பர். ஒரு கட்டத்தில் ரியாஸ் கானின் அம்மாவுக்கு முதல் கணவன் மூலம் பிறந்த டாக்டர் அண்ணன், அஜித் தங்கையின் பிரசவத்தின் போது பணம் பறிப்பதற்காக அறுவைச் சிகிச்சை நடத்த வேண்டுமென்று காலம் தாழ்த்தி அவரது மரணத்துக்குக் காரணமாகிறார். இதைத் தட்டிக் கேட்கும் அஜித்தை ரியாஸ்கான், 'நீ என் நண்பன் இல்லை, வெறும் அடியாள் தான்' என்று சொல்லி விரட்டி விடுகிறார். டாக்டரைப் பழி வாங்குதல், ரியாஸ்கானைத் திருத்துதல், நாடெங்கும் மருத்துவமனைகளில் பிரச வத்திற்கு இலவசம் என்னும் சட்டம் கொண்டு வருதல் ஆகியவற்றை சொல்வது மீதித் திரைக்கதை. ஒரு வழியாக திரையில் படம் முடியும் போது தியேட்டருக்குள் நமக்கு 'அறுவை' சிகிச்சை முடிகிறது.

அண்ணாமலை பாணியில் நண்பர்களுக் கிடையேயான மோதல் என்ற கதைக் கருவை, சரியாக establish செய்யாமல் சொதப்புவது பெரிய தலைவலியாக இருக்கிறது.

அஜித் மிக சீக்கிரம் கொஞ்சம் புஷ்டியாவது அவருக்கும் நல்லது, பார்வையாளர்களுக்கும் நல்லது. எலும்புக் கூடுக்கு மேக்கப் மட்டும் போட்டு அழைத்து வரப்பட்டது போல் ஊட்டமி ல்லாமல் இருக்கிறார். ஸ்டைல் என்ற பெயரில் சட்டை காலரில் Loops வைத்துக் கொண்டு அதில் ஒரு பெல்ட்டைச் சுற்றிக் கொண்டு திரிவதையெல்லாம் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பஞ்ச் டயலாக் வேறு பொறுமையை சோதிக்கிறது. 'இந்த திருப்பதி இறங்கிப் போறவன் இல்லை, ஏறிப் போற வன்' என்று அவர் சொல்லும் போதெல்லாம், 'இறங்கியோ, ஏறியோ, எப்படியாவது சிக்கீரம் போய்த் தொலையுங்கடா' என்று கடுப்பு தான் மிஞ்சுகிறது. நடிப்பும் சரியில்லை, நடனமும் சரியில்லை, சண்டைக் காட்சிகளும் சொல்லிக் கொள்ளும்படி இல்லை, மொத்தமாக அஜித் என்ன தைரியத்தில் இந்த மாதிரி படத்தில் நடித்தார் என்று சுத்தமாகப் புரியவில்லை.

சதா..? அவரைச் சொல்லி என்ன பிரயோசனம். இயக்குனர் சொன்னதை செய்திருக்கிறார். ரியாஸ்கான் சட்டையைக் கழற்றி திமிறும் தசைகளை முறுக்கோடு காட்டிவிட்டு நோஞ்சான் அஜித்திடம் அடி வாங்குவதைப் பார்க்கையில் பரிதாபத்தோடு எரிச்சலும் சேர்ந்தே வருகிறது.

பரத்வாஜின் இசையில் சர்வம் குத்துப் பாடல் மயம். எந்தப் பாடலையும் எந்தப் படமாக்கலோடும் எளிதாகப் பொருத்திக் கொள்ளலாம். ஆனால் கேட்கவும் பார்க்கவும் தான் சகிக்கவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட தொம்மையான படங்களில் வசனக் காட்சிகளுக்கிடையே பாடல்கள் சற்றே ஆறுதலை அளிக்கும். அதற்குக் கூட நமக்குக் கொடுப்பினை இல்லை. கொடுமை கொடுமை என்று கோயிலுக்குப் போனால் அங்கே ஆயிரம் கொடுமைகள் நம் காதுக்குள் 'ஆ' என்று அலறியும், 'ஊ' என்று ஊளையிட்டும் நம் தாலியை அறுக்கின்றன.

Which finally brings us to மிஸ்டர் பேரரசு. நெளியவைப்பது மாதிரியான காட்சிகளும் வசனங்களும் உச்சகட்ட எரிச்சலைத் தருகின்றன. குறிப்பாக அஜித், சதா இடையே காதலென்னும் மலர் பூத்துக் குலுங்குவதெல்லாமே விரசமென்னும் சாக் கடைக்குள்தான். இடையிடையே அவரது டிரேட்மார்க் பெண்ணடிமைத் தனமான வசனங்கள். சிவகாசியிலும் இந்தக் கொடுமை தான் என்றாலும், அதில் இரண்டாம் பாதியில் 'இழந்த சொந்தங்களை மீட்டெடுக்கப் போராடும் சகோதரன்' என்ற கதைக் கருவை முடிந்த அளவுக்கு உற்சாகமாகக் கொண்டு சென்றிருப்பார். அந்த நம்பிக்கையில் திரையரங்கம் சென்ற எனக்கு வைக்கப்பட்டது சரியான ஆ... ப்பு.

அவரது லூசுத்தனமான திரைக்கதை, கேணத்தனமான காட்சியமைப்பு, வெளெக் கெண்ணெய்த் தனமான வசனங்களை கூடக் கொஞ்சம் போராடினால் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் பாட்ஷா பாணியில் அவரே ஒரு ஆட்டோ டிரைவராக வருவதும், ஒரு சில சண்டைக் காட்சிகளில் ஈடுபடுவதும்.. அய்யா.. சாமி.. டு மச் இல்லை, மில்லியன், பில்லியன் மச். மொத்தத்தில் திருப்பதி, திருப்தியே தராத தெருப்புழுதி.

*- மீனாக்ஸ்*

*படம் பார்த்தவர்களுக்கும் பார்க்க இருப்ப வர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்!*

*திருப்பதிக்கு போனா மொட்டையடிச்சு அனுப்புவார்கள்.*



### ஸ்ரீ காளிகாம்பாள் ஜோதிட நிலையம்



உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்ப துன்பங்கள், நன்மை தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார்.

ஜோதிட நிபுணர் ராமன் சாஸ்திரிகள். நீங்கள் அனேக ஜோதிடர்களிடம் பார்த்திருக்கலாம், இவரை ஒருமுறை சந்தியுங்கள்

- கைரேகை, பெயர் இராசி
- லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல்
- உத்தியோகம், கல்வி, வியாபாரம்
- திருமணம், குழந்தைப் பாக்கியம்
- கணவன், மனைவி ஒற்றுமையின்மை
- காதல் கல்யாணம், விசா பார்த்து சொல்லப்படும்
- நிலம், வீடு, யோகம்
- அதிஷ்ட நம்பர்கள், கோர்ட் வழக்குகள்
- எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய் பிசாசு
- கண் திருஷ்டி பரிகாரம் செய்வார்

I will read you past, present and future by palm reading and face reading about your health, business, marriage, education, carrier / job, abroad and any family problems etc., I can communicate in Tamil, Hindi, Malayalam, Kannada, Telugu Languages

உடன் சந்தியுங்கள்

Tel: **020 8453 5629** Mob: **07947 611 533 / 07951 229 812**

**Radha Silk House**
**Unit 5, 190, Ealing Road, Wembely**
**Middx HA0 4QD**
**(Opp Sakoni Restaurant)**

தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (ஐஇ)

**Tamil Schools Sports Association (UK)**

(Formerly - JSSA UK) - Estd. 1992. Web: www.tssauk.org

ஐக்கிய இராட்சியத்தில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்களின் கூட்டு அமைப்பான TSSA (UK)
ஒரு தனித்துவமான சமூக சேவை அமைப்பு இலங்கையில் தமிழ்ப்பாடசாலைகளுக்கு உதவுவதே எமது பணி

குடும்பத்தோடு கூடிக் குதூகலித்திட ஓர் நாள்

14th Tournament

# FOOTBALL TOURNAMENT

**1st May 2006**

**Bank Holiday Monday**

8.00am-8.00pm

@ Warren Farm Sports Centre

Windmill Lane, Southall, Middlesex

Contact No:
07957 699 591
07050 390 605
07751 931 640
07771 648 257
07930 374 728

Admission:
Adult £4, Children £2
Car Park £4



# G & G BUILDERS

73 Allenby Road, Southall UB1 2EZ

- Tiling, Flooring
- Chimney, Extension
- Plumbing, Carpentary
- Decorating, Drive Way
- Double Glazing
- Electrical Wiring
- Garden Services
- Kitchen & Bathroom Fitting
- All other Associated Work





உங்கள் சகலவிதமான கட்டிட வேலைகளையும் Plumbing வேலைகளையும் துரிதமாகவும் நியாயமான கூலியுடன் செய்து கொள்ள வேண்டுமா? சிறிய வேலையாயினும் பெரிய வேலையாயினும் செய்து தரப்படும்

Contact **Gobal**

Harrow 07796 474 427 | Hounslow 07903 742 016 | Greenford 020 8578 2294



# WARAN & COMPANY

Chartered Certified Accountants

Independent Financial Advisers



**Accountacy**

For all your Accountancy, Taxation and Book Keeping Requirements

Fixed Fees

Over 15 years experience in the field of Accountancy and Taxation




**Mortgages & Insurance**

We also offer all ranges of Mortgages

Re-Mortgages & Life Insurances

Low Interest Rate (from 3.99%)

No Broker Fee

All cases considered

No Deposits (100% mortgage)

உங்களது சகலவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும் காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கும் எங்களை நாடுங்கள். நாம் எந்தவிதமான கட்டணங்களும் அறவிடுவதில்லை

for friendly and professional Advise to suit your own requirements

Contact:

20 Green Lane, New Malden, Surrey, KT3 5BN

Tel: **020 8949 8968** / Fax: **020 8605 0755**

Mob: **079 5698 5608** / Email: waranramesh@aol.com

Waran & Company Independent Financial Advisers is authorised and regulated by the Financial Services Authority FSA No: 196668



# ALL IN ONE SUPERMARKET

*Off Licence & Grocery*

537, High Road, Wembley, Middx HA0 2DJ Tel: 020 8902 4590

| | |
|---|---|
| Tilda 20kg பாசுமதி அரிசி | £23.99 |
| அமெரிக்கன் Easy Cook 20kg rice | £12.99 |
| ஆகாஸ் 20kg rice | £13.99 |
| Salaam 5kg Basmathi rice | £2.99 |
| gingely oil 2, 70cl bottles for | £5.00 |
| Araliya serendip makerel 3 for | £2.00 |
| Nido பால் பவுடர் 2.5kg | £10.99 |
| Anchor milk powder 1kg tin | £7.99 |
| Srilankan Rani/Lux soap 3 for | £1.00 |
| சூரியா கறி பவுடர் 900g | £3.29 |
| 1kg அவித்த மா from | 99p |
| 1kg அரிசிமா from | 99p |
| Crab box | £3.99 |

SPECIAL PRICE ON FROZEN SEAFOOD

**Sprits**

| | |
|---|---|
| Chivas regal 70cl | £14.99 |
| Jack daniels 70cl | £13.99 |
| Bells 70cl | £8.99 |
| Martell 70cl | £13.99 |
| Famous grouse 70cl | £9.99 |
| Teachers | £9.99 |
| Grants | £9.99 |
| vat 69 | £9.99 |
| E & J | £9.99 |

**£25** க்கு மேல் வாங்குபவர்களுக்கு உங்கள் வீடு தேடி இலவச விநியோகம் **5kg Onion Bag** உடன் செய்யப்படும்

Grocery Orders over £50.00...... Free Sri Lanka Telephone card & Free Delivery




All major credit and debit cards are accepted.

For wholesale sprit orders call 02089024590 for the price



சிவமயம்

# BORN GIFTED WITH SPRITURAL POWERS

கங்காராம் குருஜி



GANGA RAM GURUJI

இந்தியாவின் ஆந்திரபிரதேசத்தின் ஆதிவாசி (மலைவாசி) மக்கள் தலைவர் கங்காராம் குருஜி அவர்கள் கனகதுர்க்கா தேவியின் அருள்வாக்கினால் முகநாடி மூலம் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி மிகவும் துல்லியமாக கூறும் வல்லமை பெற்றவர்.

இந்தியாவில் மிகவும் பிரபலம் வாய்ந்த இவர், முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் முன்னாள் இந்திய துணைப்பிரதமரும், உள்துறை அமைச்சருமான L.K. அத்வானி, காலம் சென்ற பாரதப் பிரதமர் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, மொறார்ஜிதேசாய், போன்ற பிரபல அரசியல் வாதிகளுக்கும் அருள்வாக்கு கூறி சிறப்புப் பாராட்டும், பத்திரமும் பெற்றவர் மட்டுமல்லாது திரையுலக நட்சத்திரங்களான சுப்பர்ஸ்டார் ரஜனிகாந்த், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் N.T. ராமராவ், சரத்பாபு, சிறீதேவி, K. பாக்கியராஜ் போன்றவர்களுக்கும் அருள்வாக்கு கூறி பாராட்டுப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உங்கள் தொடர்புகளுக்கு:

TEL: 020 8470 5209 / Mob: 07932970541

354 A, First Floor, HIGH STREET NORTH

MANOR PARK, LONDON E12



# Rasi Saloon

தென்கிழக்கு லண்டன் வாழ் மக்களின் நீண்ட நாள் ஆசையைப் பூர்த்தி செய்துள்ளது ராசி சலூான். உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய தமிழ் நாட்டில் இருந்து சிகை அலங்கார நிபுணர்கள் வருகை தந்துள்ளார்கள்.
தமிழில் பேசி நீங்கள் விரும்பியபடி சிகை அலங்காரம் செய்து கொள்ளலாம்.
பெண்கள் சிகை அலங்காரத்திற்கு, தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பெண் சிகை அலங்கார நிபுணர்கள் சிறப்பாக அலங்காரம் செய்வார்கள்

தொடர்புகட்கும் பதிவு செய்வதற்கும்

**020 8692 5552**

அல்லது

**07743 757 920**

# RASIES BEAUTY PARLOUR

Wedding Makeup
Bridal Makeup
Evening Makeup
Waxing, Nails
Threading, Bleaching
Henna, Herbal Facing
Mehendi, Oil Massage

### Threading

| | |
|---|---|
| Eye Brow Shaping | £4.00 |
| Upper Lip or Chin | £1.50 |
| Chin & Neck | £3.00 |
| Forehead | £1.50 |
| Sides | £2.00 |
| Full Face Inc. Eye Brow | £10.00 |

### Waxing

| | |
|---|---|
| Full Leg | £15.00 |
| Three Quarter Leg | £10.00 |
| Half Leg | £5.00 |
| Full Arm | £10.00 |
| Half Arm | £5.00 |
| Under Arm | £3.00 |

### Bleacing

| | |
|---|---|
| Face/Neck/Back/Bleach | £15.00 |
| Upper Lip & Chin | £2.50 |
| Full Arm | £6.00 |

### Bridal Service Special Occasions

| | |
|---|---|
| Bridal Make Up | £125.00 |
| Oil Massage | £15.00 |
| Henna | £20.00 |
| Ladies Straight Hair Cut | £12.00 |
| U Cut / V Cut | £15.00 |
| Step Cut | £17.00 |

### Facial

| | |
|---|---|
| Full Face & Neck | £20.00 |
| Special Facial | £30.00 |

Tel: 020 8692 5552
Mob: 07743 757 920
32 Loampit Hill,
Lewisham
London SE13 7SW

**Branch in Colombo**
Mrs. Prema Jegen
31 A Mary's Road, Colombo -4
Tel: 00 94 112 595536, 504989

Rabeshan's
Chhaya Studio



